487

க் ச் ட் த் ப் ற்
வல்லினம்
ங் ஞ் ண் ந் ம் ன்
மெல்லினம்
ய் ர் ல் வ் ழ் ள்
இடையினம்

30 NOV 1954
MADRAS

இலக்கணமும் மொழிப்பயிற்சியும்

(பொதுவும்–சிறப்பும்)

ஆறாம் படிவம்

487
54

சே. உமாபதி, M.A., L.T.

TB
P31(11)
N54
86828

... பப்ளிஷிங் ஹௌஸ் சென்னை-1

இலக்கணமும் - மொழிப்பயிற்சியும்

(பொதுவும்-சிறப்பும்)

ஆறும் படிவம்

புதிய பாடதிட்டப்படி எழுதப்பட்டது.

ஆசிரியர் :

த. சே. உமாபதி, M,A.,L.T.

சி. அப்துல் அகீம் ஹிந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி

சென்னை–1.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை–1.

1954

பதிப்புரிமை]

[விலை ரூபாய் 1.

முன்னுரை

'இலக்கணமும் மொழிப் பயிற்சியும்' என்னும் பெயருடைய இவ்விலக்கண நூல், அரசியலார் திருத்திப் புதுப்பித்தமைத்துள்ள இலக்கண பாட திட்டத்திற்கிணங்க, ஆறும் படிவ மாணவர்க் கென்று எழுதப்பட்டுள்ளது.

பொது, சிறப்பு எனும் இரு பிரிவுகளுக்கும் உரிய இலக்கண பாடங்களை ஒரே நூலில் அமைத்து எழுதுவது, மாணவர் எளிதில் படித்துணர்வதற்குத் துணைபுரியும் எனும் நோக்கத்துடன் இந்நூலில் இரு பகுதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. எனினும் பொது – சிறப்புப் பகுதிகள் இவை யிவை என அறிதற் பொருட்டுச் சிறப்புப் பகுதிகள் உடுக் குறியிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

இலக்கணத்தை மாணவர்கள் விரும்பிப் படிக்க வேண்டுமென்னும் கருத்துடன், கடினமான பகுதிகள் எளிய நடையில் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு நன்கு தெரிந்த சொற்களே மேற்கோள்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. மாணவர் எளிதில் திறன் பெறுதற்கென ஆங்காங்கே பயிற்சிகள் தரப்பட்டுள்ளன.

பொதுவாக, இந்நூல் தமிழ் கற்கும் மாணவர் அனைவர்க்கும் நன்கு பயன்படும் என்று நம்புகிறேன். மாணவருலகு இதை நன்கு பயன்படுத்திக் கொள்ள உதவி செய்யுமாறு அறிஞர்களை வேண்டுகின்றேன்.

10–11–'54 }
சென்னை : }

ஆசிரியர்.

உள்ளுறை

இலக்கணம்

எண்	பொருள்		பக்கம்
1.	**எழுத்து**		
1.	எழுத்தின் இடப் பிறப்பு	...	1
2.	எழுத்துக்களின் முயற்சிப் பிறப்பு *	...	2
3.	ஐகார, ஔகார, மகர, ஆய்தக் குறுக்கங்கள் *	...	3
4.	மெய்ம்மயக்கம் *	...	5
	i. உடனிலை மெய்ம்மயக்கம்	...	5
	ii. வேற்றுநிலை மெய்ம்மயக்கம்	...	6
5.	இன எழுத்துக்கள் :	...	9
	i. உயிர் எழுத்துக்கள்	...	9
	ii. மெய்யெழுத்துக்கள்	...	10
6.	மொழி முதல்—இறுதி எழுத்துக்கள்	...	10
	i. மொழி முதல் எழுத்துக்கள்	...	10
	ii. மொழியீற்று எழுத்துக்கள்	...	14
2.	**சொல்**		
1.	இயற் சொல், திரி சொல்	...	17
2.	வட சொல்—திசைச் சொல்	...	20
3.	ஓரெழுத் தொரு மொழி *	...	23
4.	இலக்கணை *	...	24
5.	பெயர்ச் சொல்	...	
	(1) தான், தாம், எல்லாம் என்னும் பொதுப் பெயர்கள்	...	27

(2) உருபு மயக்கம் ... 27
(3) விளிவேற்றுமையில் அமையும் விகார விரிவு * ... 28
6. ஐம்பாற் பெயர்களுக்குரிய விகுதிகள் * ... 33
7. வினைச் சொல் ...
(1) தெரிநிலை, குறிப்பு வினைகள் ... 35
(2) ஐம்பால் வினை முற்று * ... 38
(3) சினைவினை—முதல் வினை * ... 39
(4) ஆக்க வினை * ... 41
(5) காலங் காட்டும் முறைகள் ... 42
(6) சிலவகை வினை எச்சங்களின் வாய்பாடுகள் ... 47
8. இடைச் சொல்
அந்தில், ஆங்கு, மா, முன்னிலை அசைச் சொற்கள் * ... 51

3. பொது

1. செய்யுள் விகாரங்கள் ... 54
2. சொல் முடிபு : பெயரும் வினையும் முடியும் முறை ... 57
3. இடைப் பிற வரல் * ... 59
4. வினா வகை * ... 61
5. விடை வகை * ... 62
6. அடை மொழி * ... 63
7. பொருள் கோள் * ... 65

4. புணர்ச்சி

1. குற்றுகரப் புணர்ச்சி ... 74
2. தேன், அகம் இவை புணரும் முறை ... 83
3. ணகர, னகர ஈறு; லகர ளகர ஈறு ... 84
4. சாரியைகள் ... 92
5. பல, சில—இவை புணரும் முறை ... 94

6. மெய்யீற்றில் இயல்பு புணர்ச்சி * ... 95
7. வினா—சுட்டுக்களின் புணர்ச்சி * ... 98
8. செய்யுளுக்கு ஏற்ற சிறப்பு விதிகள் சில * ... 99
9. இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி வேறுபாடு * ... 101

5. யாப்பு

1. சீர் பிரித்துத் தளை கூறுதல் * ... 105
2. எதுகை மோனையின் பொது இலக்கணம் ... 109
3. எதுகை மோனை வகைகள் * ... 110
4. அடி வகை ... 116
5. கட்டளைக் கலித்துறை * ... 119
6. பாவினங்களின் பொது இலக்கணம் * ... 120
7. இசைப்பாட்டு வகை ... 128

6. அணி

1. தன்மை நவிற்சியணி ... 134
2. உயர்வு நவிற்சியணி ... 134
3. தற்குறிப்பேற்ற அணி ... 135
4. பிறிது மொழிதல் அணி * ... 136
5. கருத்துடை அடைமொழி அணி * ... 137

7. பொருள் இலக்கணம் *

1. அகப்பொருள் (முதல், கரு, உரிப்பொருள் இவை எனல்) * ... 139
2. புறப்பொருள் (திணைகள்—சுருக்கமாக*)... 143

மொழிப் பயிற்சி

1. வாக்கியம்—பலவகைகள் ... 147

2.	வாக்கிய அமைப்பு—(எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், எச்சங்கள் நிற்கும் முறை) ...	149
3.	ஒரே கருத்தைப் பல உருவ வாக்கியங்களில் வெளியிடுதல் ...	151
4.	பத்தியமைப்பு ...	153
5.	நடை (விரிவாக) ...	155
6.	வழூஉச் சொற்களும் திருத்தமும் ...	161
7.	விலக்குதற்குரிய இழிவழக்குகள் ...	165
8.	நிறுத்தக் குறிப் பயிற்சிகள் ...	165
9.	மரபு ...	168
10.	உவமைகளும் பழமொழிகளும் வைத்தெழுதல் ...	169
11.	உவமை உருவக மாற்றம் ...	175
12.	வல்லெழுத்து மிகும் இடங்களும் மிகா இடங்களும் ...	177
13.	இடம் விட்டு எழுதலும் சேர்த்து எழுதலும் ...	187
14.	சொற்களை இடம் விட்டெழுதுதலும் சேர்த்தெழுதுதலும் ...	189

அரசியலார் திருத்திப் புதுப்பித்தமைத்த இலக்கணப் பாட திட்டம்

(ஆறும் படிவம்)

(இலக்கணம் – பொது)

I. எழுத்து :

(1) எழுத்தின் இடப் பிறப்பு.

(2) இன எழுத்துக்கள்.

(3) மொழி முதல் இறுதி எழுத்துக்கள்.

II. சொல் :

(1) இயற்சொல், திரிசொல்.

(2) வடசொல், திசைச்சொல்.

(3) பெயர்ச்சொல் :

(i) தான், தாம், எல்லாம் என்னும் பொதுப் பெயர்கள்.

(ii) உருபு மயக்கம்.

(4) வினைச் சொல் :

(i) காலங் காட்டும் முறைகள்—இடைநிலை, பகுதி, விகுதி.

(ii) தெரிநிலை, குறிப்பு வினைகள்.

(iii) சிலவகை வினையெச்சங்களின் வாய்பாடுகள்.

III. பொது :

(1) செய்யுள் விகாரங்கள்.

(2) சொல் முடிபு—பெயரும் வினையும் முடியும் முறை.

IV. புணர்ச்சி :

(1) குற்றுகரப் புணர்ச்சி—(விரிவாக)—சிறப்பு விதிகள்.
(2) தேன், அகம் : இவை புணரும் முறை.
(3) ணகர னகர ஈறு, லகர ளகர ஈறு.
(4) சாரியைகள் : அ, அத்து, அம், அன், இன், அற்று.
(5) பல, சில : இவை புணரும் முறை.

V. யாப்பு :

(1) எதுகை மோனையின் பொது இலக்கணம்.
(2) அடிவகை.
(3) இசைப்பாட்டு வகை : கண்ணி, கும்மி, கீர்த்தனை.

VI. அணி :

(1) தன்மை நவிற்சி.
(2) உயர்வு நவிற்சி.
(3) தற்குறிப்பேற்றம்.

மொழிப் பயிற்சி

i. வாக்கியம்—பலவகைகள்.
ii. வாக்கிய அமைப்பு—எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், எச்சங்கள் நிற்கும் முறை.
iii. ஒரே கருத்தைப் பல உருவ வாக்கியங்களில் வெளியிடுதல்.
iv. பத்தியமைப்பு (முன்னிலும் விரிவாக).
v. நடை (விரிவாக).

vi. வழூஉச் சொற்களும் திருத்தமும்—முன்னி லும் விரிவாக.

vii. விலக்குதற்குரிய இழிவழக்குகள் (slang usage)

viii. நிறுத்தக் குறிப்புப் பயிற்சிகள்.

ix. மரபு.

x. உவமைகளும், பழமொழிகளும் வைத்தெழுது தல்.

xi. உவமை உருவக மாற்றம்.

xii. வல்லெழுத்து மிகும் இடங்களும், மிகா இடங் களும் (முன்னிலும் விரிவு).

xiii. இடம்விட்டெழுதுதலும் சேர்த்தெழுதுதலும்.

xiv. சொற்களை இடம்விட்டு எழுதுதலும், சேர்த்து எழுதுதலும்.

(இலக்கணம் - சிறப்பு)

I. எழுத்து :

(1) ஐகார, ஔகார, மகர, ஆய்தக் குறுக்கங்கள்.

(2) பிறப்பு—எழுத்துக்களின் முயற்சிப் பிறப்பு.

(3) மெய்ம் மயக்கம் (விரிவாக).

II. சொல் :

(1) ஓரெழுத் தொரு மொழி.

(2) இலக்கணை.

(3) பெயர்ச்சொல் :

(i) விளிவேற்றுமையில் அமையும் விகாரங் களின் விரிவு.

(ii) ஐம்பாற் பெயர்களுக்குரிய விகுதிகள்.

(4) வினைச்சொல் :

(i) ஐம்பால் வினைமுற்று.

(ii) சினை வினை—முதல் வினை.

(ii) ஆக்கவினை.

(5) இடைச்சொல்:

அந்தில், ஆங்கு, மா, முன்னிலை அசைச் சொற்கள்.

III. பொது:

(1) இடைப் பிற வரல்.

(2) வினா வகை.

(3) விடை வகை.

(4) அடை மொழி.

(5) பொருள்கோள்.

IV. புணர்ச்சி:

(1) மெய்யீற்றில் இயல்பு புணர்ச்சி.

(2) வினா சுட்டுக்களின் புணர்ச்சி.

(3) செய்யுளுக்கேற்ற சிறப்பு விதிகள் சில.

(4) இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி வேறுபாடு.

V. யாப்பு:

(1) சீர்பிரித்துத் தளை கூறுதல்.

(2) எதுகை மோனை வகைகள்.

(3) கட்டளைக்கலித்துறை, தாழிசைகளின் இலக்கணம்.

(4) பாவினங்களின் பொது இலக்கணம்.

VI. அணி:

(1) பிறிது மொழிதல்.

(2) கருத்துடையடைமொழி.

VII. பொருளிலக்கணம்:

(1) அகப்பொருள்: முதல், கரு, உரிப் பொருள் இவை எனல்.

(2) புறப்பொருள்: திணைகள்: (சுருக்கமாக).

இலக்கணமும் - மொழிப்பயிற்சியும்

(ஆறும் படிவம்)

இலக்கணம் – பொதுவும் சிறப்பும்

1. எழுத்து

1. எழுத்தின் இடப்பிறப்பு

நம் உடலின் உட்புறமுள்ள நுரையீரல் காற்று நிரம்பியதாகும். நாம் பேச வேண்டும் என்று முயலும்போழ்து, நுரையீரலில் உள்ள காற்று அங்கிருந்து எழும்பி, மார்பு, கழுத்து, தலை, மூக்கு ஆகிய இடங்களில் பொருந்தி வெளி வருவதால் ஒலி உண்டாகிறது. இந்த ஒலியை உதடு, நா, பல், மேல் வாய் ஆகிய நான்கும் பல்வேறு எழுத்தொலி களாய் மாற்றுகின்றன. இவ்வாறு உண்டாவதே **எழுத்தின் பிறப்பு** எனப்படும்.

இவ்வாறு வாயினால் உச்சரிக்கும் எழுத்தைச் செவியினால் கேட்கின்றோம். செவிக்குப் புலனாகும் எழுத்து **ஒலி வடிவம்** உடையதாகும். இவ்வொலி வடிவ எழுத்தை எழுதும்போது, கண்ணால் காண்கிறோம். கண்ணிற்குப் புலனாகும் எழுத்து **வரிவடிவம்** உடையதாகும்.

இவ்வாறு உண்டாகும் எழுத்துக்களுள், உயிர் எழுத்துக்களும், இடையின எழுத்துக்களும் **கழுத்தை** இடமாகக் கொண்டு பிறக்கும். வல்லின எழுத்துக்கள் **மார்பை**

இடமாகக் கொண்டு பிறக்கும். மெல்லின எழுத்துக்கள் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கும்.

பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும், இடையினம், வல்லினம், மெல்லினம் ஆகிய மூன்றுக்குமுரிய பதினெட்டு மெய்யெழுத்துக்களும் முதலெழுத்துக்கள் எனப்படும்.

சார்பெழுத்துக்களுள் ஆய்த எழுத்து, அஃது, இஃது என்பவற்றில் வருவது போல, நுட்ப உச்சரிப்பொலி பெறுகிறது. இது பிறத்தற்கு இடம் தலை ஆகும். குற்றியலுகரம், குற்றியலிகரம் முதலிய மற்றைய சார்பெழுத்துக்களுக்குப் பிறப்பிடம் தத்தம் முதலெழுத்துக்களின் பிறப்பிடமேயாகும்.

2. எழுத்துக்களின் முயற்சிப் பிறப்பு*

1. அ, ஆ—இவ்வுயிர் எழுத்துக்கள், வாய்திறத்தலாகிய அங்காத்தல் முயற்சியால் பிறக்கும்.

2. இ, ஈ, எ, ஏ, ஐ—இவ்வைந்தும், வாய்திறத்தலுடன், மேல் வாய்ப் பல்லை அடி நாவின் விளிம்பு பொருந்தப் பிறக்கும்.

3. உ, ஊ, ஒ, ஓ, ஔ—இவ்வைந்தும் வாய்திறத்தலுடன், உதடு குவிவதால் பிறக்கும்.

4. க், ங்—இவை வாய்திறத்தலுடன், அடிநா, மேல்வாயின் (அண்ணம்) அடியைச் சேர்வதால் பிறக்கும்.

5. ச், ஞ்—இவை வாய்திறத்தலுடன், நடு நா, மேல்வாயின் நடுப் பகுதியைச் சேர்வதால் பிறக்கும்.

6. ட், ண்—இவை வாய்திறத்தலுடன், நுனி நா, மேல் வாயின் நுனியைச் சேர்வதால் பிறக்கும்.

* இவ்வாறு உடுக்குறியிட்டுள்ளவை சிறப்புப் பகுதிக்குரியவையாகும்.

7. த், ங்—இவை வாய்திறத்தலுடன், மேல் வாய்ப் பல்லின் அடியை நாவின் நுனி பொருந்துவதால் பிறக்கும்.

8. ப், ம்—இவை வாய்திறத்தலுடன், மேல் உதடும், கீழ் உதடும் பொருந்துவதால் பிறக்கும்.

9. ய்—இது வாய்திறத்தலுடன், மேல்வாயின் அடியை, நாவின் அடி பொருந்துவதால் பிறக்கும்.

10. ர், ழ்—இவை வாய்திறத்தலுடன், மேல்வாய் நுனியை நாவின் நுனி தடவுதலால் பிறக்கும்.

11. ல்—இது வாய்திறத்தலுடன், மேல் வாய்ப் பல்லடியை, நாவின் விளிம்பு தடித்துப் பொருந்துவதால் பிறக்கும்.

12. ள்—இது வாய்திறத்தலுடன், மேல்வாயை நாவின் விளிம்பு தடித்துத் தடவுதலால் பிறக்கும்.

13. வ்—இது வாய்திறத்தலுடன், மேல்வாய்ப் பல்லைக் கீழ் உதடு பொருந்துவதால் பிறக்கும்.

14. ற், ன்—இவை வாய் திறத்தலுடன், நாவின் நுனி மேல் வாயை மிகப் பொருந்துவதால் பிறக்கும்.

15. ஃ—ஆய்த எழுத்துத் தலையில் பிறந்து, வாயைத் திறத்தலாகிய முயற்சியால் பிறக்கும்.

ஏனைய சார்பெழுத்துக்கள் முயற்சியால் தத்தம் முதல் எழுத்துக்களைப் போலவே பிறக்கும்.*

3. ஐகார, ஔகார, மகர, ஆய்தக் குறுக்கங்கள்*

(1) ஐகாரக் குறுக்கம் :

ஐ, கை, தை என, ஐ என்னும் எழுத்துத் தனித்து உயிரெழுத்தாயிருக்கும்போதும், மெய்யுடன் கூடி உயிர்

மெய்யாகித் தனித்து நிற்கும்போதும், பொதுவாக நெடிலுக்குரிய இரண்டு மாத்திரை ஓசை உடையதாகும். ஆனால், இந்த எழுத்து, ஐப்பசி, இடையன், கவலை என மொழியின் முதலிலும், இடையிலும், கடையிலும் வரும்போது, முன்னும் பின்னும் வரும் எழுத்துக்களின் தொடர்பால், தன் மாத்திரை அளவில் குறுகும். இந்தக் குறுக்கமே ஐகாரக் குறுக்கம் எனப்படும். இவ்வாறு குறுகும் ஐகாரத்திற்கு மாத்திரை ஒன்றே ஆகும்.

(2) ஔகாரக் குறுக்கம் :

ஔ, வௌ என, ஔ என்னும் எழுத்துத் தனித்து உயிரெழுத்தாயிருக்கும் போதும், மெய்யுடன் கூடி உயிர் மெய்யாகித் தனித்து நிற்கும்போதும், பொதுவாக நெடிலுக்குரிய இரண்டு மாத்திரை ஓசை உடையதாகும். ஆனால், இந்த எழுத்து, ஔவை, வௌவால் என மொழிக்கு முதலில் வரும்போது தன் மாத்திரை அளவில் குறுகி, ஒரு மாத்திரை அளவே ஒலிக்கும். இஃது **ஔகாரக் குறுக்கம்** எனப்படும். ஔகாரக் குறுக்கம் மொழிக்கு முதலில் மட்டுமே வரும். மொழிக்கு இடையிலும், கடையிலும் வாராது.

எனவே, இடவகையால் ஐகாரக் குறுக்கம் மூன்றாயிற்று. ஔகாரக் குறுக்கம் ஒன்றாயிற்று.

(3) மகரக் குறுக்கம் :

மருண்ம், போன்ம், தரும்வளவன் இவ்வாறு ண், ன் என்னும் எழுத்துக்களை அடுத்து வரும் மகரமும், வகரத்தின் முன் வரும் மகரமும் குறுகி ஒலிக்கும். பொதுவாக மகர மெய் அரைமாத்திரை ஓசை உடையதாகும். இவ்வாறு மகர மெய் குறுகி ஒலிக்கும்போது, இதன் ஓசை கால்

மாத்திரை அளவில் குறுகும். இவ்வாறு குறுகுவது **மகரக் குறுக்கம்** எனப்படும். இடவகையால் மகரக்குறுக்கம் மூன்றாகும்.

(4) ஆய்தக் குறுக்கம் :

கல்+தீது=கஃறீது, முள்+தீது=முஃடீது

இவ்வாறு ல், ள் ஈற்றுப்புணர்ச்சியில் சில இடங்களில் தோன்றும் ஆய்தம், தன் இருபக்கங்களிலுமுள்ள எழுத்துக்களின் தொடர்பால் தன் ஓசையில் குறுகிவிடும். பொதுவாக, ஆய்தத்தின் ஓசையளவு அரை மாத்திரை ஆகும். இவ்வாறு குறுகும்போது, இது கால் மாத்திரை ஓசை அளவே உடையதாகும். இவ்வாறு ஆய்தம் குறுகுவது **ஆய்தக் குறுக்கம்** எனப்படும். இது திரிபு வகையால் இரண்டாகும்.

4. மெய்ம்மயக்கம்*

மெய்ம்மயக்கம் என்பது உடனிலை மெய்ம்மயக்கம், வேற்று நிலை மெய்ம்மயக்கம் என இரண்டு வகைப்படும்.

1. உடனிலை மெய்ம்மயக்கம் :

பக்கம்	சட்டம்	கப்பல்	இவ்வகை
அங்ஙனம்	கிண்ணம்	அம்மான்	கள்ளன்
அச்சம்	பத்து	வெய்யில்	சீற்றம்
அஞ்ஞானம்	முந்நீர்	அல்லி	மின்னல்

இவ்வாறு ர், ழ் என்னும் இரண்டு எழுத்துக்கள் தவிர, க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ல், வ், ள், ற், ன் என்னும் பதினாறு மெய்யெழுத்துக்களும் தம்மொடு தாம் மயங்கி (சேர்ந்து) நின்றன. இவ்வாறு மெய் எழுத்துக்கள் தம்மொடு தாமே (சேர்வது) மயங்குவது அதாவது ஒரு

மெய்யோடு அதே மெய் மயங்குவது உடனிலை மெய்ம் மயக்கம் எனப்படும்.

இவற்றுள் க, ச, த, ப எனும் நான்கு எழுத்துக்களும் உடனிலை மெய்ம்மயக்கத்துக்கே உரியவை. ர, ழ எனும் இரண்டும் உடனிலை மெய்ம்மயக்கத்தில் வரவேமாட்டா.

2. வேற்றுநிலை மெய்ம்மயக்கம் :

நுங்கு, சங்கம், தங்கம்—இவ்வாறு ஙகரத்தின் முன் ககரம் மயங்கிவரும்.

தஞ்சம், வஞ்சி, உரிஞ்யாது—என ஞகரத்தின் முன் சகரமும், யகரமும் மயங்கிவரும்.

வெண்கலம், எண்சுவடி, பண்ஞானம், வண்டல், வெண்பல், கண்மணி, விண்யாது, மண்வலிது—என ணகரத்தின் முன், க, ச, ஞ, ட, ப, ம, ய, வ ஆகியவை தனித் தனி மயங்கி வரும்.

சுந்தன், பொருந்யாது—என நகரத்தின் முன், தகரமும் யகரமும் தனித்தனி மயங்கிவரும்.

வம்பன், நலம்யாது, கலம்வருக—என மகரத்தின்முன் ப, ய, வ ஆகியவை தனித்தனி மயங்கிவரும்.

நாய்கடிக்கும், காய்சிறுத்தது, காய்தடித்தது, வாய் நல்லது, காய்பழுத்தது, செய்மகிழ்ச்சி, வாய்வலிது, மெய்ஞானம்—என, யகரத்தின் முன், க, ச, த, ந, ப, ம, வ, ஞ ஆகியவை தனித்தனி மயங்கிவந்தன.

i. ஓர்க, வார்சிலை, நீர்தீது, கார்நன்று, மார்பன், நேர்மை, சோர்வு, பேர்யாது, பேர்ஞானம்.

ii. வாழ்க, தாழ்ச்சி, ஆழ்தல், மகிழ்நன், சூழ்ப, தாழ்மை, தாழ்வு, தாழ்யானை, வாழ்ஞானம்.

என ரகர, ழகரங்களின் முன், க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ ஆகியவை தனித்தனி மயங்கிவரும்.

i. வாய்க்கும், பாய்ச்சல், காய்த்தல், காய்ப்பு,
வேய்ங்குழல், மேய்ஞ்சது, பாய்ந்தது, மொய்ம்பு

ii. பீர்க்கு, தேர்ச்சி, வியர்த்தல், பார்ப்பான்
ஆர்ங்கோடு, கூர்ஞ்சிறை, சேர்ந்தது, ஈர்ம்புனல்

iii. வாழ்க்கை, வீழ்ச்சி, வீழ்த்தல், காழ்ப்பு,
பாழ்ங்கிணறு, பாழ்ஞ்சுரங்கம், வாழ்ந்தான்,
பாழ்ம்பதி.

இவ்வாறு யகர, ரகர, ழகர மெய்களுக்கு முன், க், ச், த், ப், ங், ஞ், ந், ம் எனும் எட்டு மெய்களும் ஈரொற்றாய் மயங்கிவரும்.

பொய்த்தல், மொய்த்தல், உய்த்தல், கொய்தல், செய்தல்—இவற்றுள், யகரம் பொ, மொ, உ, கொ, செ எனும் குறில்களை அடுத்துவந்துள்ளன. இதுபோல, ரகரமும், ழகரமும் தனிக்குறிலை யடுத்துவரும் சொற்கள் தமிழில் இல்லை.

போலும் என்பது செய்யுளில் போன்ம் என்று உகரம் கெட்டு, மெய்திரிந்து (ல், ன் ஆகத்திரிந்து) வருகையில், மகர ஒற்றுக் குறுகி, ஈரொற்றாய் மயங்கிவரும்.

மருளும் என்பது செய்யுளில் மருண்ம் என்று உகரம் கெட்டு, மெய்திரிந்து (ள், ண் ஆகத் திரிந்து) வருகையில், மகர ஒற்றுக் குறுகி, ஈரொற்றாய் மயங்கி நிற்கும்.

நல்கியது, கால்சிறிது, சால்பு, பல்வகை, கல்யானை, வெள்கு, எள்சுவை, வாள்புகழ், கேள்வி, முள்யாது—

என லகர, ளகரங்களின் முன், க, ச, ப, வ, ய ஆகியவை தனித்தனி மயங்கிவரும்.

தெவ்யாது—என வகரத்தின் முன், யகரம் மயங்கி வரும்.

நிற்க, பயிற்சி, கற்பு—என, றகரத்தின்முன் க, ச, ப என்பவை தனித்தனி மயங்கிவரும்.

புன்கண், புன்சொல், பொன்ஞாண், துன்பம், வன்மை, கோன்யார், பொன்வண்டு, நன்று—என னகரத்தின் முன், க, ச, ஞ, ப, ம, ய, வ, ற ஆகியவை, தனித்தனி மயங்கிவரும்.

இவ்வாறு, ங், ஞ், ட், ண், ந், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்—என்னும் பதினான்கு மெய்யெழுத்துக்களும் வேறு மெய்களுடன் மயங்கிவந்தன. ஒரு மெய்யுடன் வேறுமெய் இவ்வண்ணம் மயங்குவதே வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனப்படும். இவற்றுள் ர, ழ என்பன வேற்று நிலை மெய்ம்மயக்கத்திற்கே உரியவை.

குறிப்பு :—ரகர, ழகர மெய்கள் இரண்டும் தம்மொடு தாமே மயங்கா; ஆகவே, உடனிலை மெய்ம்மயக்கத்தில் வரமாட்டா; வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்கே உரியன வாகும்.

க, ச, த, ப எனும் மெய்கள் நான்கும் தம்மொடு தாமே மயங்கும். ஆகவே, உடனிலை மெய்ம்மயக்கத்திற்கே உரியவை; வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தில் இவை வரமாட்டா.

ங், ஞ், ட், ண், ந், ம், ய், ல், வ், ள், ற், ன்—எனும் பன்னிரண்டு மெய்களும் தம்மொடு தாம் மயங்கி உடனிலை மெய்ம்மயக்கத்திலும் வரும்; பிறவற்றோடு மயங்கி வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திலும் வரும்.

5. இன எழுத்துக்கள்

1. உயிர் எழுத்துக்கள் :

குறில்		நெடில்
அ	—வுக்கு இனம்	ஆ
இ	,,	ஈ
உ	,,	ஊ
எ	,,	ஏ
ஒ	,,	ஓ

இவ்வெழுத்துக்கள் பிறப்பிடம், முயற்சி, உருவம், பொருள், அளவு முதலியவற்றில் ஒத்துள்ளன. 'ஐ' என்னும் எழுத்தை உச்சரித்துப் பாருங்கள். முடிவில் **இ** எனும் ஒலி அமைந்திருப்பது தெரியும். எனவே, **ஐ** எனும் எழுத்திற்கு **இ** எனும் எழுத்து இனமாகும். இவ்வாறே **ஔ** எனும் எழுத்தை உச்சரித்துப் பார்த்தால் முடிவில் **உ** எனும் ஒலி அமைவது தெரியும். எனவே, **ஔ** எனும் எழுத்திற்கு **உ** எனும் எழுத்து இனமாகும்.

இவ்வகையில், ஐந்து உயிர்க் குறில்களுக்கும் ஐந்து உயிர் நெடில்கள் இனமாயின; ஐ, ஔ எனும் நெடில்களுக்கு இ, உ எனும் குறில்கள் இனமாயின. ஆக, உயிர் எழுத்துக்களுள் இவை இன எழுத்துக்களாகும்.

2. மெய்யெழுத்துக்கள் :

வல்லினம்		மெல்லினம்
க்	க்கு இனம்	ங்
ச்	—	ஞ்
ட்	—	ண்
த்	—	ந்
ப்	—	ம்
ற்	—	ன்

இவை ஒன்றற்கொன்று இன எழுத்துக்களாகும். மேலே காட்டப்பட்டவாறு மெய்யெழுத்துக்களுள், வல்லின எழுத்துக்கள் ஆறனுக்கும் மெல்லின எழுத்துக்கள் ஆறும் முறையே இன எழுத்துக்களாகும்.

இடையின எழுத்துக்களாகிய **ய், ர், ல், வ், ழ், ள்** எனும் ஆறுக்கும் வேறு இன எழுத்துக்கள் இல்லை. இவை ஆறும் ஒன்றுக் கொன்று இன எழுத்தாகும்.

பிறப்பிடம், முயற்சி, அளவு, உருவம், பொருள், ஓசை முதலியவற்றுள் ஒன்றாலேனும் பலவற்றாலேனும் எழுத்துக்கள் ஒத்திருத்தல் **இனம்** எனப்படும்.

6. மொழிமுதல்–இறுதி எழுத்துக்கள்

1. மொழி முதல் எழுத்துக்கள் :

அன்பு, ஆண்டு, இசை, ஈகை, உணவு, ஊக்கம், எண், ஏற்றம், ஐந்து, ஒன்று, ஓலை, ஔகாரம்—

என உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் மொழிக்கு முதலில் வந்தன.

மெய்யெழுத்துக்கள் தனித்து மொழிக்கு முதலில் வரமாட்டா.

1. க்—கருணை, காய், கிளை, கீரை, குடம், கூடை, கெடுமதி, கேடு, கைப்பு, கொடை, கோடை, கௌவுதல்.

2. ச்—சங்கம், சான்று, சினம், சீர், சுண்டல், சூழல், செம்மை, சேவடி, சைவம், சொல், சோர்வு, சௌந்தர்யம்.

3. த்—தந்தை, தாய், திருவாளன், தீயவன், துடுப்பு, தூலம், தெற்கு, தேன், தைலம், தொண்டு, தோற்றம், தௌவுதல் (கெடுதல்).

4. ந்—நண்பன், நாணம், நித்திலம், நீளம், நுகர்ச்சி, நூறு, நெடில், நேர், நையாண்டி, நொடி, நோக்கம், நௌவி (மான்).

5. ப்—பண்பு, பாட்டு, பிணை, பீர்க்கு, புலி, பூனை, பெட்டி, பேச்சு, பைத்தியம், பொறுப்பு, போலி, பௌதிகம்.

6. ம்—மண், மாடு, மிகுதி, மீசை, முகம், மூக்கு, மெலி, மேன்மை, மைனா, மொட்டு, மோனை, மௌனம்.

இவ்வாறு, க், ச், த், ந், ப், ம் என்னும் ஆறு மெய் யெழுத்துக்களும் பன்னிரண்டு உயிரெழுத்துக்களுடன்கூடி மொழிக்கு முதலில் வரும்.

மெய்யெழுத்துக்கள் பதினெட்டில் மேற்கண்ட ஆறு எழுத்துக்கள் மட்டுமே பன்னிரண்டு உயிரெழுத்துக்களுடன் கூடி மொழிக்கு முதலில் வரும். வ், ய், ஞ், ங் எனும் நான்கு மெய்யெழுத்துக்கள், சில உயிரெழுத்துக்களுடன் மட்டும் கூடி மொழிக்கு முதலில் வரும். மேற்கண்ட ஆறெழுத்துக்களைப்போல எல்லா உயிரெழுத்துக்களுடன் கூடி மொழிக்கு முதலில் வாரா.

1. வ்—வண்டி, வாகை, விடுதி, வீரம், வெப்பம், வேம்பு, வைகை, வௌவால்.

இவ்வாறு வகரம், அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ என்னும் எட்டு உயிரெழுத்துக்களுடன் மட்டும் கூடி மொழிக்கு முதலில் வரும்.

2. ய்—யகரம், யார், யுத்தம், யூகம், யோசனை, யௌவனம்.

இவ்வாறு யகரம், அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்னும் ஆறு உயிரெழுத்துக்களுடன் மட்டும்கூடி மொழிக்கு முதலில் வரும்.

3. ஞ்—ஞண்டு, ஞாண், ஞெண்டு, ஞொள்கல் (அலைதல்)

இவ்வாறு ஞகரம், அ, ஆ, எ, ஒ என்னும் நான்கு உயிரெழுத்துக்களுடன் மட்டும் கூடி மொழிக்கு முதலில் வரும்.

4. ங்—(அங்)ஙனம், (இங்)ஙனம், (உங்)ஙனம், (எங்)ஙனம், (யாங்)ஙனம்—

என ஙகர மெய் அகர உயிருடன் மட்டும் கூடி, அ, இ, உ ஆகிய சுட்டும் எ, யா ஆகிய வினாவுமாகிய எழுத்துக்களை அடுத்து மொழிக்கு முதலில் வரும்.

இவ்வாறு சுட்டும் வினாவுமாகிய எழுத்துக்களை அடுக்காமல், ஙனம் என்னும் சொல் தனித்து வழங்குவது வழக்கத்தில் இல்லை. அதே போன்று உகரச் சுட்டும் இன்று வழக்கத்தில் இல்லையாதலின், உங்ஙனம் என்ற சொல்லும் வழக்காற்றில் இல்லை.

பதினெட்டு மெய்யெழுத்துக்களில், (1) க், ச், த், ந், ப், ம் என்னும் ஆறு மெய்யெழுத்துக்களும் பன்னிரண்டு உயிர் எழுத்துக்களுடன் கூடி மொழிக்கு முதலில் வரும். (2) வ் எனும் எழுத்து, எட்டே உயிரெழுத்துக்களுடன்கூடி

மொழிக்கு முதலில் வரும். (3) ய் எனும் எழுத்து ஆறே உயிரெழுத்துக்களுடன்கூடி மொழிக்கு முதலில் வரும். (4) ஞ் எனும் எழுத்து நான்கே உயிரெழுத்துக்களுடன் கூடி மொழிக்கு முதலில் வரும். (5) ங் எனும் எழுத்து அ எனும் ஒரே உயிரெழுத்துடன் கூடி மொழிக்கு முதலில் வரும்.

ஆக, இந்தப் பத்து மெய்யெழுத்துக்கள் தவிர, ண், ட், ல், ள், ழ், ர், ற், ன் என்னும் எட்டு மெய்யெழுத்துக்களும், உயிருடன்கூடி மொழிக்கு முதலில் வாரா. டப்பி, டிக்கட்டு, ரயில், ரம்பம், ரீங்காரம், லட்டு, லாடம், லாபம், லஞ்சம் முதலிய சொற்கள் இன்று வழக்கத்திலிருக்கின்றன அல்லவா? இவை தமிழ்ச் சொற்கள் அல்ல; பிறமொழிக்கலப்பால் தமிழில் வழங்குபவை. அங்ஙனமாயினும், ண, ள, ழ, ற, ன முதலிய எழுத்துக்கள் எவ்வகையாலும் மொழிக்கு முதலில் வருவதில்லை.

மேற்கண்ட எட்டு மெய்யெழுத்துக்கள் உயிருடன்கூடி மொழிக்கு முதலில் வாரா என்பது போன்று, மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் தனித்து நின்று மொழிக்கு முதலில் வருதலும் இல்லை. ப்ரபாவம், ப்ரசன்னம் என்று தமிழ் நூல்களில் காணப்படும் சில சொற்கள், சமஸ்கிருதச் சொற்களை அப்படியே எடுத்தாளும் அவாக் காரணமாக உள்ளவையேயாகும். ஃ ஆகிய ஆய்த எழுத்தும் மொழிக்கு முதலில் வராது.

இவற்றிலிருந்து, எளிதில் உச்சரிக்க முடியாத எழுத்துக்களை மொழிக்கு முதலில் வரக்கூடா எழுத்துக்கள் என நம் முன்னோர் நீக்கியிருப்பதை உணர்க.

மொழி முதலில் வரும் எழுத்துக்களின் முழு விவரம்:

உயிர் எழுத்துக்கள் —	12
பன்னிரண்டு உயிருடன் கூடி வரக் கூடியவை (க், ச், த், ந், ப், ம்) 6×12	72
வ் — (8 உயிருடன்)	8
ய் — (6 ,,)	6
ஞ் — (4 ,,)	4
ங் — (1 ,,)	1
ஆக மொத்தம்	103

எனவே, இவ்வாறு உயிரெழுத்துக்களும், உயிர்மெய் எழுத்துக்களுமாக நூற்றுமூன்று எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வரும்.

2. மொழியீற்று எழுத்துக்கள் :

உயிரீறு :—சில, அவா, எலி, தீ, பட்டு, பூ, சேஎ (அளபெடையில்), தே, மை, நொ (வருந்து), கோ, வெள (பறி) இவ்வாறு பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் மொழிக்கு ஈற்றில் வந்தன. இவ்வாறு உயிரெழுத்துக்கள் மொழிக்கு இறுதியில் வருவது உயிரீறு எனப்படும். இவற்றுள் எகரம் மட்டும் மெய்யுடன் சேர்ந்து மொழிக்கு இறுதியில் வராது.

மெய்யீறு :—உரிஞ் (உராய்), பண் (இராகம்), பொருந் (ஒத்திரு), மரம், நாய், மோர், கால், தெவ் (பகை), தமிழ், தேள், தேன்—இவ்வாறு, ஞ், ண், ந், ம், ய், ர், ல், வ், ழ், ள், ன் என்னும் பதினொரு மெய்யெழுத்துக்கள் மொழிக்கு இறுதியில் வரும்.

குற்றியலுகர ஈறு :—பாக்கு, அச்சு, பட்டு, ஒது, காப்பு, வயிறு—இவ்வாறு குற்றியலுகரம் மொழிக்கு இறுதியில் வரும்.

எனவே, இவ்வாறு பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், பதினொரு மெய்யெழுத்துக்களும், குற்றியலுகரமும் ஆகிய **இருபத்து நான்கு** எழுத்துக்கள் மட்டுமே மொழிக்கு ஈற்றில் வரும். மற்ற எழுத்துக்கள் மொழிக்கு ஈற்றில் வாரா.

மொழி ஈற்றில் வரும் எழுத்துக்களின் முழு விவரம்:

உயிர் எழுத்துக்கள்	11+1 (அளபெடையில் மட்டும்)
மெய் எழுத்துக்கள்	11
குற்றியலுகரம்	1
	23+1 = 24.

டிக்கட், மார்க்கட், பக்கெட், காண்ட், பீச், வாட்ச், மீட்டிங், பார்லாங் முதலிய சொற்களில் ஈற்றெழுத்து ட், ங், ச் என வருகிறது. ஆனால், இவை ஆங்கிலச் சொற்கள். இவற்றைத் தமிழில் இப்படியே ஒலிப்பது சரியன்று. எனவே, இவற்றின் ஈற்றில் உகரம் சேர்த்து டிக்கட்டு, மார்க்கட்டு, பக்கெட்டு, காண்ட்டு, பீச்சு, வாட்சு, மீட்டிங்கு, பர்லாங்கு என எழுதுதலே முறையாகும்.

பயிற்சி

1. வரிவடிவம், ஒலிவடிவம் என்பவை யாவை?
2. எழுத்துக்கள் எவ்வாறு பிறக்கின்றன?
3. உயிர் எழுத்துக்களின் பிறப்பிடம் யாது?
4. உயிர்க் குறில், இடையினம், வல்லினம்—இவற்றின் பிறப்பிடம் யாது?
5. ஃ, ஆ, ங், க, ய், ர், ஔ, ஐ, ற, ர—இவை எங்கெங்கிருந்து பிறக்கின்றன?

6. ஆ, ஏ, ஓ, ஔ—இவை எம்முயற்சியால் பிறக்கின்றன?
7. மேல்வாய்ப் பல்லின் அடியை நாவின் நுனி பொருந்துவதால் பிறக்கும் எழுத்துக்கள் யாவை?
8. ப், ழ், ஞ், ள், ண், ங், ற்—இவை எம்முயற்சியால் பிறக்கின்றன?
9. ஐகாரமும், மகரமும் எவ்வெவ்விடங்களில் குறுகும்?
10. ஔகாரம்—எத்தனை இடங்களில் குறுகும்?
11. ஆய்தம் குறுகி ஒலிப்பது ஏன்?
12. மெய்ம்மயக்கம் எத்தனை வகைப்படும்?
13. உடனிலை மெய்ம்மயக்கம் என்பது யாது?
14. காக்கை, வெந்நீர், பங்கயம், சஞ்சலம், பாழ்ங் கிணறு, வண்டல்—இவை என்னென்ன மெய்ம் மயக்கங்கள்?
15. உடனிலை மெய்ம்மயக்கத்துக்கே உரிய எழுத்துக் கள் எவை? வேற்று நிலை மெய்ம்மயக்கத்துக்கு மட்டும் உரியவை எவை?
16. ஈரொற்றுய் மயங்குதல் என்பது யாது?
17. இன எழுத்துக்கள் என்பவை யாவை?
18. இன எழுத்தே இல்லாத எழுத்துக்கள் யாவை?
19. மொழிக்கு முதலில் வரக்கூடிய எழுத்துக்கள் யாவை?
20. மொழிக்கு முதலில் வரக் கூடாதவை எவை?
21. மொழிக்கு ஈற்றில் வரக்கூடிய எழுத்துக்கள் எவை?
22. மொழிக்கு ஈற்றில் வரக்கூடாதவை எவை?

2. சொல்

1. இயற்சொல், திரிசொல்

பன்னெடுங்காலமாகத் தமிழக மக்கள் பிறநாடுகளுக்கும், பிறநாட்டு மக்கள் தமிழகத்திற்கும் போக வரவிருந்த தொடர்பால், தமிழ் மொழியில் பிற சொற்கலப்பு உண்டாகியுளது. தமிழிற் கலந்துள்ள பிற சொற்களில் பெரும்பாலானவை வடமொழிச் சொற்கள். ஏனைய மொழிச் சொற்களும் ஓரளவு நம் மொழியில் கலப்புற்றுள்ளன.

நம் தமிழ்மொழிக்கே உரிய சொற்களைத் **தமிழ்ச் சொற்கள்** எனவும், தமிழ்ச் சொற்களில் கற்றவர்க்கும் மற்றவர்க்கும் பொருள் விளங்குமாறுள்ள இயல்பான சொற்களை **இயற்சொற்கள்** எனவும், கற்றவர்க்கே பொருள் விளங்குமாறுள்ள சொற்களைத் **திரி சொற்கள்** எனவும், ஆரியமொழியிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொற்களை **வடமொழிச் சொற்கள்** எனவும், பிறமொழிகளிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொற்களைத் **திசைச் சொற்கள்** எனவும் வழங்குகின்றோம்.

1. இயற்சொல் :

பொன், மரம், காடு, மூக்கு, கிளை, ஆடு, நிலம் எனும் இத்தமிழ்ச் சொற்கள் கற்றவர், கல்லாதவர் முதலிய அனைவரும் எவர் உதவியுமின்றி எளிதில் பொருள் உணர்ந்து கொள்ளக்கூடியவாறு அமைந்த சொற்களாகும்.

இவ்வாறு எல்லோரும் எளிதில் பொருள் உணரும் வண்ணம் இயல்பாய் அமைந்த சொல் ஒவ்வொன்றும் **இயற்சொல்** எனப்படும்.

பொன், மரம், காடு, மூக்கு முதலியவை எளிதிற் பொருள் விளங்குமாறு இயல்பாய் அமைந்த பெயர்ச் சொற்கள். எனவே இவை, பெயர் **இயற்சொற்கள்** எனப் படும்.

பார்த்தான், நின்றான், பேசினான் முதலியவை, எளிதிற் பொருள் விளங்குமாறு இயல்பாய் அமைந்த வினைச் சொற்கள். எனவே இவை, **வினை இயற்சொற்கள்** எனப்படும்.

முருகனை, முருகனுக்கு, முருகனால்—முதலிய சொற்களில் சேர்ந்துவந்துள்ள ஐ, கு, ஆல் எனும் வேற்றுமை உருபுகள் எளிதில் பொருளை விளக்குமாறு இயல்பாய் அமைந்த இடைச் சொற்கள். எனவே இவை, **இடை இயற்சொற்கள்** எனப்படும்.

அன்பு, அழகு முதலியவை எளிதில் பொருள் விளங்குமாறு இயல்பாய் அமைந்த உரிச்சொற்கள். எனவே இவை, **உரி இயற்சொற்கள்** எனப்படும்.

2. திரிசொல் :

வாரணம், தத்தை, சுகம், ஏகினான், விரைந்தான் எனும் இத்தமிழ்ச் சொற்கள், கற்றவரே அன்றி மற்றவர் எளிதில் பொருள் உணர முடியாதவாறு அமைந்த சொற்களாகும். இவ்வாறு கற்றவர்க்கே பொருள் விளங்குமாறு அமைந்த சொற்கள் ஒவ்வொன்றும் **திரிசொல்** எனப்படும். இஃது ஒரு பொருள் குறித்த பல பெயர்த் திரி சொல், பல பொருள் குறித்த ஒரு பெயர்த் திரி சொல் என இரு வகைப்படும்.

தத்தை, கிள்ளை, சுகம், அஞ்சுகம், அரி—முதலியவை கிளி எனும் ஒன்றினையே குறிக்கும் பல பெயர்ச் சொற்

களாகும். எனவே இவை கற்றவர்க்கே பொருள் விளங்குமாறு அமைந்திருத்தலின், **ஒரு பொருள் குறித்த பல பெயர்த் திரிசொல்** என வழங்கப்படுகின்றன.

வாரணம் எனும் பெயர்ச் சொல், யானை, கோழி, சங்கு, கடல், பன்றி, சட்டை முதலிய பல பொருள்களைக் குறித்து வருகின்றது.

மாசு எனும் பெயர்ச் சொல், குற்றம், அழுக்கு, மேகம், கருமை முதலிய பல பொருள்களைக் குறித்து வருகின்றது.

அரி எனும் பெயர்ச்சொல் பகைவன், சக்கரம், பச்சை நிறம், குதிரை, சிங்கம், சூரியன், திருமால், காற்று, சந்திரன், குரங்கு, கிளி, பாம்பு முதலிய பல பொருள்களைக் குறித்து வருகின்றது.

ஆலி எனும் பெயர்ச் சொல் மழைத்துளி, காற்று, அழுதம், தோழி, தேள், வரம்பு முதலிய பல பொருள்களைக் குறித்து வருகின்றது.

ஆவணம் எனும் பெயர்ச் சொல் முறிச்சீட்டு, கடை, உரிமை, அடையாளம், தேர்ப்பீடம் முதலிய பல பொருள்களைக் குறித்து வருகின்றது.

இதழ்—பூவிதழ், உதடு, கண்ணிமை, பனையேடு, வகிர்ந்த ஓலை, கதவினிலை, பாளை, இலை முதலிய பல பொருள்களைக் குறித்து வருகின்றது.

இவை கற்றவர்க்கே பொருள் விளங்குமாறு அமைந்திருக்கின்றன. எனவே, இவை ஒவ்வொன்றும் **பல பொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல்** என வழங்கப்படுகிறது.

கருதினன், சிந்தித்தான், எண்ணினன்—என்னும் வினைச்சொற்கள் 'நினைத்தான்' எனும் ஒரே பொருளைத்

தருகின்றன. எனவே, இவை **ஒரு பொருள் குறித்த பல வினைத் திரிசொல்** என வழங்கப்படுகிறது.

வரைந்தான் எனும் வினைச் சொல், எழுதினான், கொண்டான், நீங்கினான், மணம் புரிந்தான், மாற்றினான் முதலிய பலபொருள்களைத் தருகின்றன. எனவே, இவை **பலபொருள் குறித்த ஒருவினைத் திரிசொல்** என வழங்கப் படுகிறது. இவ்வண்ணமே, ஒரு பொருள் குறித்த பல இடைத் திரிசொல், பல பொருள் குறித்த ஓர் இடைத் திரி சொல், ஒரு பொருள் குறித்த பல உரித் திரிசொல், பல பொருள் குறித்த ஓர் உரித் திரிசொல் ஆகியவைகளும் வரும்.

இயற்சொற்கள் அனைத்தும் உலக வழக்கில் இருப்பவை. திரிசொற்கள் பெரும்பான்மை செய்யுள் வழக்கிலும் சிறு பான்மை உலக வழக்கிலும் பயின்று வரும்.

2. வடசொல்—திசைச் சொல்

ஆரியத்தினின்று தமிழ் மொழியில் வந்து வழங்குபவை வடசொற்கள் எனவும், ஏனைய மொழிகளிலிருந்து தமிழில் வந்து வழங்குபவை திசைச் சொற்கள் எனவும் வழங்கப்படு கின்றன என்பதைப் படித்தீர்கள் அல்லவா ?

1. வடசொல் :

வடமொழிச் சொற்களைத் தமிழ் மொழி **தற்சமம், தற்பவம்** எனும் இருவகைப்படுத்தி ஏற்றுள்ளது. **தற்சமம்** என்பது தத் + சமம் எனப் பிரிந்து அதற்குச் சமமானது என்று பொருள்படும். குங்குமம், கமலம், காரணம், அமலம் என்பவை விகாரமின்றி, எவ்வித வேறுபாடுமின்றித் தமி ழில் வழங்குகின்றன. இவ்வாறு வழங்குவதே **தற்சமம்**

எனப்படும். அதாவது தமிழ்ச் சொல்லுக்குச் சமமான வடசொல் என்பதே இதன் பொருளாகும்.

தற்பவம் என்பது, தத்+பவம் எனப் பிரிந்து, அதனின்றும் பிறந்தது என்று பொருள்படும்.

வடசொல்	தற்பவம்	தமிழ்ச்சொல்
பங்கஜம்	பங்கயம்	(தாமரை)
வருஷம்	வருடம்	(ஆண்டு)
ஷண்முகம்	சண்முகம்	(ஆறுமுகம்)
பக்ஷி	பட்சி	(பறவை)
ஸமயம்	சமயம்	(வேளை)
தேஹம்	தேகம்	(உடல்)
புஜம்	புயம்	(தோள்)
ஜலம்	சலம்	(நீர்)
புஷ்பம்	புட்பம்	(மலர்)

இவ்வாறு வடசொற்கள் தமிழ் மொழியில் கலந்து வரும்போது, வடமொழிக்குரிய சிறப்பெழுத்துக்களான ஜ, ஷ, க்ஷ, ஸ, ஹ என்னும் ஐந்தெழுத்துக்களும், தமிழ் எழுத்துக்களாக மாற்றப்பட்டு ஒலி மாறி வழங்கப்படுகின்றன. இவ்வாறு வடசொற்கள் தமிழ் ஒலிக்கேற்பத் திரிந்து வருதல் **தற்பவம்** எனப்படும்.

2. திசைச் சொல் :

பல திசைகளிலிருந்து வந்து தமிழிற் கலந்துள்ள பிற மொழிச் சொற்கள் **திசைச் சொற்கள்** என வழங்கப்படுகின்றன.

திசைச் சொற்கள்		தமிழ்		உரிய நாடுகள்	
(1) பெற்றம்	=	பசு	—	தென்பாண்டி நாடு	
தள்ளை	=	தாய்	—	குட்ட	,,
அச்சன்	=	தந்தை	—	குட	,,
கையர்	=	வஞ்சகர்	—	கற்கா	,,
கிழார்	=	தோட்டம்	—	வேள்	,,
பாழி	=	சிறுகுளம்	—	பூழி	,,
செய்	=	வயல்	—	பன்றி	,,
கேணி	=	கிணறு	—	அருவா	,,
எகின்	=	புளி	—	அருவாவடதலை	,,
இகுளை	=	தோழி	—	சீத	,,
வெள்ளம்	=	நல்லநீர்	—	மலையமான்	,,
ஆய்	=	தாய்	—	புனல்	,,

இச்சொற்கள், பண்டைக் காலத்தில் செந்தமிழ் நாட்டையடுத்திருந்த தென்பாண்டி நாடு முதல் புனல் நாடு ஈறுகப் பன்னிரண்டு நாடுகளில் வழங்கப்பட்டுத் தமிழில் கலந்து திசைச் சொற்கள் என வழங்கப்படுபவையாகும்.

திசைச் சொற்கள்		தமிழ்		மொழி
(2) கொக்கு	=	மாமரம்	—	துளுவம்
சிக்குதல்	=	அகப்படுதல்	—	கன்னடம்
பண்டிகை	=	விழா	—	தெலுங்கு

இவை, தமிழிலிருந்து பிரிந்த பிற மொழிகளிலிருந்து தமிழில் வந்து வழங்கும் திசைச் சொற்கள் ஆகும்.

(3) மிட்டாய், அல்வா, அலாதி, அத்தர், ஆசாமி, உஷார், ஐவேஜி, ஜாஸ்தி, ஜில்லா, தபால், பங்களா, மாமூல்—முதலியவை உர்தூவிலிருந்து தமிழில் வந்து வழங்கும் திசைச் சொற்கள் ஆகும்.

(4) சாவி, அலமாரி, சன்னல், கிராம்பு, கக்கூசு, கோப்பை, மேசை—முதலியவை போர்த்துகீசிய மொழியி லிருந்து தமிழில் வந்து வழங்கும் திசைச் சொற்கள் ஆகும்.

(5) சைக்கிள், ரயில், மோட்டார், இஞ்சின், கவர்னர், பஸ், கோர்ட்டு, லீவ், பியூன், கார்டு, ரப்பர், டாக்டர்—முதலி யவை ஆங்கில மொழியிலிருந்து தமிழில் வந்து வழங்கும் **திசைச் சொற்கள்** ஆகும்.

(6) அலவாங்கு(கடப்பாரை), பீரவ் முதலியவை உலாந் தாக்காரர்களின் (டச்சு) மொழியிலிருந்து தமிழில் வந்து வழங்கும் **திசைச் சொற்கள்** ஆகும்.

(7) புட்டுவம் (நாற்காலி), மருவம் (மண்டபம்), வத்தை (தோட்டம்), வளவு (வீட்டு நிலம்) முதலியவை சிங்கள மொழியிலிருந்து யாழ்ப்பாணத்துத் தமிழில் வந்து வழங்கும் **திசைச் சொற்கள்** ஆகும்.

எனவே, தமிழில் வந்து வழங்குபவற்றுள், வடமொழி தவிர, மற்ற மொழிச் சொற்கள் அனைத்தும் **திசைச் சொற் கள்** எனப்படும்.

3. ஓரெழுத்தொரு மொழி *

கை வலிக்கிறது.

பை நிறையக் காசு போடு.

ஈ பறக்கிறது.

தீ எரிகிறது.

பூ வாங்கிவா.

இவ்வாறு, ஓரே எழுத்துத் தன்னை உணர்த்தாமல், பிற பொருள் கொடுத்து நிற்பதால், மொழி எனப்படுகிறது. இவ்வாறே **ஆ** எனும் ஓர் எழுத்து, பசு எனும் பொருளை

யும், **கோ** எனும் ஓர் எழுத்து, அரசன் எனும் பொருளையும், **தா** எனும் ஓர் எழுத்து, கொடு எனும் பொருளையும் கொடுக்கின்றன. இவ்வண்ணம் ஒரே எழுத்துத் தனித்து நின்று, ஒரு சொல் போலப் பொருள் தருவது **ஓரெழுத்தொரு மொழி** எனப்படும். (மொழி, பதம், சொல், வார்த்தை என்பன ஒரு பொருட் சொற்கள்.)

இவ்வாறு ஒரே எழுத்துத் தனித்து நின்று பொருள் தரும் மொழிகள் தமிழிற் பல உள.

* i. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ.
ii. மா, மீ, மூ, மே, மை, மோ.
iii. தா, தீ, து, தூ, தே, தை.
iv. பா, பீ, பூ, பே, பை, போ.
v. நா, நீ, நே, நை, நொ, நோ.
vi. கா, கு, கூ, கை, கோ, கௌ.
vii. வா, வீ, வே, வை, வௌ.
viii. சா, சீ, சே, சோ, யா.

இவையனைத்தும் ஓரெழுத்தொரு மொழிகளாகும்.

4. இலக்கணை *

ஒரு பொருளின் இலக்கணத்தை மற்றொரு பொருளுக்குத் தந்துரைப்பதை வட நூலார் இலக்கணை என்று கூறு

---

* ஊ–இறைச்சி. ஏ–அம்பு. ஐ–தலைவன், அழகு, இருமல், கடவுள், ஆசான். ஓ–மதகு நீர் தாங்கும் பலகை. மீ–உயர்வு, மேற்புறம். மே–மேன்மை. து–உண். தே–கடவுள். பே–நுரை. நே–அன்பு. நொ–துன்பம். கு–சிறுமை. கூ–பூமி, கூக்குரல். வீ–புற்வை. வே–வேவு, ஒற்று. வௌ–பறி, கொள்ளையிடு. சே–சிவப்பு, எருது, உயர்ந்த, அழிஞ்சில் மரம். சோ–அரண், மதிற்சுவர்.

வர். அது விட்ட இலக்கணை, விடாத இலக்கணை, விட்டும் விடாத இலக்கணை என மூன்று வகைப்படும்.

i. சென்றதுகொல் போந்ததுகொல் செவ்வி பெருந்துணையு
நின்றதுகொல் நேர்மருங்கிற் கையூன்றி—முன்றின்
முழங்குங் கடாயானை மொய்ம்மலர்த்தார் மாறற்
குழந்துபின் சென்றவென் நெஞ்சு.

இதில் மருங்கும், கையும், கையை ஊன்றுதலுமாகிய இலக்கணங்கள் நெஞ்சிற்கு இல்லாமையால் இது **விட்ட இலக்கணை**யாகும்.

ii. புளி தின்றான்—புளியாகிய சுவையைத் தின்பதில்லை. ஆனால், புளியினது பழத்தைத் தின்றான் என்பது உண்மையாதலின் இது **விடாத இலக்கணை.**

iii. "மதியுமிழ்ந்து கதிர்விழுங்கி வந்தஇம் மருள் மாலை"—மாலையானது, மதியை உமிழ்வது மில்லை; கதிரை விழுங்குவதுமில்லை. ஆனால், கதிர் மறைந்து மதிதோன்றுவது மாலை நேரத்தின் இயல்பாதலின் இது **விட்டும் விடாத இலக்கணை.**

'வயிறு வேளைக்குவேளை சோறு கேட்கிறது' என்பதும், 'பருதி இருள் பருகிப் பகலைக் கான்றது' என்பதும், 'பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும்' என்பதும், 'மாய்தலும் பிறத்தலும் வளர்ந்து வீங்கலும், தேய்தலும் உடைமையைத் திங்கள் செப்பு மால்' என்பதும், 'வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்' என்பதும், 'இசையா வொருபொருள் இல்லென்றல் யார்க்கும், வசையன்று, வையத் தியற்கை' என்பதும், 'வைகல் பூங்கழி வாய்வந்து மேயும் குருகினங்காள் கைகள் கூப்பிச் சொலீர்' என்பதும் **இலக்கணை**யேயாகும்.

பயிற்சி

1. இயற்சொல், திரிசொல் என்பவை யாவை?
2. அவற்றின் வகைகளைக் கூறுக.
3. தமிழில் வடசொல், திசைச் சொல் முதலியவை கலந்திருக்கக் காரணம் யாது?
4. இயற்சொல், திரிசொல்—இவற்றில் பழமையானது எது?
5. பல பொருள் குறித்த ஒரு பெயர்த் திரி சொல்லை, இந்நூலில் இல்லாத மூன்று எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.
6. பல பொருள் குறித்த ஒருவினைத் திரிசொல் என்பது யாது?
7. வடசொல், திசைச் சொல்—இவற்றின் வேறு பாட்டை விளக்குக.
8. தற்சமம், தற்பவம்—விளக்கங் கூறுக.
9. வட சொல்லைத் திசைச் சொல்லுடன் சேர்க்காமல் தனிப்படுத்தியதேன்?
10. திசைச் சொல் எனும் பெயர் எவற்றிற்கு வழங்கு கிறது?
11. ஓரெழுத் தொரு மொழி என்றால் என்ன?
12. இலக்கணை என்பது யாது?
13. 'தன்னெஞ்சே தன்னைச் சுடும்,' 'இரவெல்லாம் நின்றாயால் ஈர்ங்கதிர்த் திங்காள்!' 'நன்னீரை வாழியனிச்சமே','பகலவன் பனியை விரட்டினான்', 'கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்'—இவை என்ன இலக்கணைகள்?

5. பெயர்ச் சொல்

1. தான், தாம், எல்லாம் என்னும் பொதுப் பெயர்கள்:

அவன் **தான்** வந்தான்.
அவள் **தான்** வந்தாள். } அவர் **தாம்** வந்தார்.

அது **தான்** வந்தது. அவை **தாம்** வந்தன.

நாம் **எல்லாம்** வந்தோம்.
நீவிர் **எல்லாம்** வந்தீர்.
அவர் **எல்லாம்** வந்தனர்.
அவை **எல்லாம்** வந்தன.

இவற்றுள், தான், தாம், எல்லாம் என்னும் சொற்கள் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாக வந்துள்ளன. இங்ஙனம் வரும் பெயர்கள் **திணைப் பொதுப் பெயர்** என்று கூறப்படும். எல்லாம் என்னும் பொதுப் பெயர் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களுக்கும் பொதுவாக வருகின்றது. எனவே, இஃது **இடப் பொதுப் பெயர்** எனவும் வழங்கப்படும். இவற்றுள், தான் என்பது ஒருமைக்கே வரும்; தாம் என்பது பன்மைக்கே வரும்; எல்லாம் என்பதும் பன்மைக்கே வரும்.

2. உருபு மயக்கம் :

i. காலத்தினாற் செய்த நன்றி.
ii. அவன் புலியொடு ஒத்தான்.

இதில் i. காலம் என்பது கருவிப் பொருளாகவோ, கருத்தாப் பொருளாகவோ வராமல், இடப் பொருளாய் வந்தது. ஆகவே, **காலத்தினால்** என்பதில் உள்ள **ஆல்** எனும் மூன்றும் வேற்றுமையுருபு ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்திருக்கிறது. அதாவது **காலத்தில்** என்

திருக்க வேண்டுவது **காலத்தினால்** என்றிருக்கிறது. **இல்** உருபு நிற்றற்குரிய இடத்தில் **ஆல்** உருபு மயங்கி வந்தது.

ii. இதில் புலி என்பது உடனிகழ்ச்சிப் பொருளில் வராமல் செயப்படு பொருளில் வந்தது. ஆகவே, **புலியொடு** என்பதில் உள்ள மூன்றும் வேற்றுமை உருபு இரண்டாம் வேற்றுமைப் பொருளில் வந்திருக்கிறது. அதாவது **புலியை** என்றிருக்க வேண்டுவது புலியொடு என்றிருக்கிறது. **ஐ** உருபு நிற்றற்குரிய இடத்தில் ஒடு உருபு மயங்கி வந்தது.

இவ்வாறு ஒரு வேற்றுமை உருபு, மற்றொரு வேற்றுமையின் பொருளை உணர்த்தி வருமாயின் அஃது **உருபு மயக்கம்** எனப்படும். இதனை **வேற்றுமை மயக்கம்** எனக் கூறுவதுமுண்டு.

3. விளிவேற்றுமையில் அமையும் விகார விரிவு *

i. இ, உ, ஊ, ஐ, ஓ, ன், ள், ர், ல், ய் என்னும் பத்து எழுத்துக்களை ஈற்றில் பெற்ற **உயர்திணைப் பெயர்களும்,**

ii. ஆ, இ, உ, ஊ, ஐ, ண், ன், ள், ல், ய் என்னும் பத்து எழுத்துக்களை ஈற்றில் பெற்ற **பொதுப் பெயர்களும்,**

iii. ஞ், ந், எ ஆகிய மூன்று எழுத்துக்கள் ஒழிந்த, ஈற்றில் வரக்கூடிய ஏனைய எழுத்துக்கள் இருபத்தொன்றினை ஈற்றில் பெற்ற அஃறிணைப் பெயர்களும் விளி ஏற்கும்.

விளியானது, **அண்மை விளி, சேய்மை விளி** என இரண்டு வகைப்படும். புலம்பலில் விளித்தலையும் சேர்த்துப் **புலம்பல் விளி** ஆக்கி, இதனை மூன்று வகை என வழங்குவதும் உண்டு. அண்மை விளி இயல்பாய் நின்றும், ஈறு அழிந்தும் விளிப் பொருளை உணர்த்தும். சேய்மை விளி பல விகாரங்களை ஏற்றும், அளபு பெற்றும், விளிப் பொருளை உணர்த்தும். புலம்பல் விளி ஓகாரம் பெற்று விளிப் பொருளை உணர்த்தும்.

(1) ஐகார ஈற்றுப் பெயர் :

முதல் வேற்றுமை		விளி வேற்றுமை
i.	அன்னை	அன்னை—ஐ யீறு இயல்பாயிற்று.
	அன்னை	அன்னையே—ஏ மிகுந்தது.
	அன்னை	அன்னாய்—ஐ—ஆய் எனத் திரிந்தது.
	அன்னை	அன்னா—ஐ ஆ எனத் திரிந்தது.
ii.	கிள்ளை	கிள்ளை—ஐ யீறு இயல்பாயிற்று.
	கிள்ளை	கிள்ளையே—ஏ மிகுந்தது.
	கிள்ளை	கிள்ளாய் ஐ—ஆய் எனத் திரிந்தது.

இவ்வாறு, ஐகார ஈற்றுப் பொதுப் பெயரும், உயர்திணைப் பெயரும், அஃறிணைப் பெயரும் விளியில் இயல்பாதலும், ஏகாரம் மிகுதலும், ஈற்று ஐ, ஆய் எனவும் ஆ எனவும் திரிதலும் பெறும்.

தோழி—என இகர ஈறு பெற்ற உயர்திணைப் பெயர் அண்மை விளியில் இயல்பாய் நின்றும், சேய்மை விளியில் **தோழீ** என ஈறு நீண்டும், **தோழீஇ** என அளபெடுத்தும் மாறுதல்களை அடையும்.

வேந்து எனும் குற்றியலுகர ஈறுபெற்ற உயர்திணைப் பெயர் சேய்மை விளியில் வேந்தே என ஏகார ஈறு பெற்றும், குரு, திரு, தரு போன்ற முற்றியலுகர ஈறுபெற்ற பெயர்கள் குருவே, திருவே, தருவே என ஏகாரம் மிகுந்தும் மாறுதல்களை அடையும்.

(2) னகர ஈற்று உயர்திணைப் பெயர் :

முதல் வேற்றுமை	விளி வேற்றுமை
கிழான்	கிழா அன்—அளபெடுத்தது.
தோழன்	தோழ—ஈறுகெட்டது.
பெருமன்	பெருமான்—ஈற்றயல் நீண்டது.

மன்னன் மன்ன — ஈறுகெட்டு, ஈற்றயல் நீண்டது.
அப்பன் அப்பாவோ— ஈறுகெட்டு, ஈற்றயல் நீண்டு, ஓகாரம் மிகுந்தது.
ஐயன் ஐயாவே—ஈறுகெட்டு, ஈற்றயல் நீண்டு, ஏகாரம் மிகுந்தது.
ஐயன் ஐயாவோ—ஈறுகெட்டு, ஈற்றயல் நீண்டு, ஓகாரம் மிகுந்தது.
வாயிலான் வாயிலாய்—ஈற்று **ன் – ய்** ஆயிற்று.

வாயிலான் வாயிலாய் } ஈற்று **ன் – ய்** ஆகி,
வாயிலோய் } ஈற்றயல் **ஆ – ஓ** ஆகி,
வாயிலோயே } ஏகாரம் மிகுந்தது.

ஐயன் ஐய } ஈறு கெட்டு,
ஐயே } ஈற்றயல் **அ – ஏ** ஆனது.

இவ்வாறு னகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளியில் பல மாறுதல்களைப் பெறும். **சீமான்** போன்ற நெடிலை ஈற்றயலாகப் பெற்றுவரும் னகர மெய் அண்மை விளியிடத்து இயல்பாயும், சேய்மையிடத்து ஈற்றில் ஏகாரம் பெற்றும் நிற்கும். **தோழன்** என்பது **தோழனே** எனச் சேய்மை விளியில் ஈற்றில் ஏகாரம் பெற்றும், **தோழா** என ஈறு கெட்டு, ஈற்றயல் நீண்டும், **தோழ** என ஈறுமட்டும் கெட்டும் மாறுதல் அடையும்.

(3) ளகர ஈற்று உயர்திணைப் பெயர் :

முதல்வேற்றுமை	விளிவேற்றுமை	
வேள்	வேளன்	—அளபெடுத்தது.
அக்காள்	அக்கா	—ஈறுகெட்டது.
எமர்கள்	எமர்காள்	—ஈற்றயல் நீண்டது.
குழையாள்	குழையாய்	—ஈற்று **ள்–ய்** ஆனது.

அடிகள்	அடிகேள்	—ஈற்றயல் அ—ஏ ஆனது
மகள்	மகளே	—ஈற்றில் ஏகாரம் மிகுந்தது.

இவ்வாறு ளகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளியில் பல மாறுதல்களைப் பெறும்.

(4) ரகர ஈற்று உயர்திணைப் பெயர் :

முதல்வேற்றுமை	விளிவேற்றுமை	
சிறார்	சிறுஅர்	—அளபெடுத்தது.
தெவ்வர்	தெவ்விர்	—ஈற்றயல் அ—இ ஆனது.
வேந்தர்	வேந்தீர்	—ஈற்றயல் ஆ—ஈ ஆயிற்று,
மடவார்	மடவீர்	—ஈற்றயல் ஆ—ஈ ஆயிற்று.
சான்றார்	சான்றீர், சான்றீரே	ஈற்றயல் ஆ — ஈ ஆகி, ஏகாரம் ஏற்றது.
தோழியார்	தோழியாரே, தோழீரே	ஈற்றில் ஏ மிகுந்து, ஈற்றயல் யா கெட்டு, அதனயல் இ—ஈ ஆயிற்று,
தமர்	தமரீர்	—ஈற்றில் ஈர் ஏற்றது.

இவ்வாறு ரகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளியில் பல மாறுதல்களைப் பெறும்.

(5) லகர, யகர ஈற்று உயர்திணைப் பெயர் :

முதல்வேற்றுமை	விளிவேற்றுமை	
மால்	மாஅல்	—அளபெடுத்தது.
தாழ்குழல்	தாழ்குழால்	—ஈற்றயல் நீண்டது.
சேய்	சேஎய்	—அளபெடுத்தது.

இவ்வாறு, லகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளியில் அளபெடுத்தலும், ஈற்றயல் நீளலும், யகர ஈற்று உயர்

திணைப் பெயர்கள் அளபெடுத்தலுமாகிய மாறுதல்களைப் பெறும்.

(6) ணகர ஈற்று அஃறிணைப் பெயர், விரவுப் பெயர் :

முதல்வேற்றுமை		விளிவேற்றுமை	
i.	அலவன் (நண்டு)	அலவ	—ஈறு கெட்டது.
	கலுழன் (கருடன்)	கலுழா	—ஈறுகெட்டு, ஈற்றயல் நீண்டது.
ii.	சாத்தன் —	சாத்த	—ஈறு கெட்டது.
	கொற்றன் —	கொற்றா	—ஈறு கெட்டு, ஈற்றயல் நீண்டது.

இவ்வாறு ணகர ஈற்று i. அஃறிணைப் பெயர்களும், ii. விரவுப் பெயர்களும் (உயர்திணையிலும் அஃறிணையிலும் கலந்து வரும் பொதுப்பெயர்கள்) விளியில் சில மாறுதல்களைப் பெறும்.

(7) லகர, ளகர ஈற்று அஃறிணைப் பெயர், விரவுப் பெயர் :

முதல்வேற்றுமை		விளிவேற்றுமை	
i.	குறுமுயல்	குறுமுயால்	ஈற்றயல் நீண்டது.
	கிளிகள்	கிளிகாள்	,,
ii.	தூங்கல்	தூங்கால்	– ஈற்றயல் நீண்டது.
	மக்கள்	மக்காள்	,,

இவ்வாறு லகர, ளகர ஈற்று அஃறிணைப் பெயர்களும், விரவுப் பெயர்களும் விளியில் ஈற்றயல் நீளுவதாகிய மாறுதலைப் பெறும்.

(8) **உயிரீற்று, மெய்யீற்று அஃறிணைப் பெயர் :**

கிளி—கிளியே, யானை—யானையே, மாடு—மாடே, நிலம்—நிலமே, நீர்—நீரே, வான்—வானே, தீ—தீயே என உயிரீறு, மெய்யீறு பெற்ற அஃறிணைப் பெயர்கள் விளி ஏற்றால் ஈற்றில் ஏகாரம் பெறும். கிள்ளை, நாரை போன்ற ஐகார ஈறுபெற்ற அஃறிணைப் பெயர்கள் சில, ஏகார ஈறு பெறுவதுடன், ஐ—ஆய் எனத் திரிந்தும் விளியை உணர்த்தும்.

அண்மை விளியில் பெரும்பான்மைச் சொற்கள் இயல்பாகவே நிற்கும். சில சொற்கள் ஈறு அழிந்து நிற்கும். சேய்மை விளியில் அளபெடுத்தலும் பிற மாறுதல்களும் உண்டாகும். புலம்பல் விளியில் பெரிதும் ஓகாரமே மிகும்.

6. ஐம்பாற் பெயர்களுக்குரிய விகுதிகள் *

(1) **ஆண்பாற் பெயர் விகுதிகள் :**

முருகன், நாட்டான், வடமன், கோமான், பிறன்—இவற்றின் விகுதிகளாயுள்ள **அன், ஆன், மன், மான், ன்** என்பவை ஆண்பாற் பெயர் விகுதிகள் ஆகும்.

வில்லையுடையவன் **வில்லி** என வருகையில், **இ** என்பதும், தம்பி, நம்பி, **எம்பி** என வருகையில் **பி** என்பதும், **எந்தை** என வருகையில் **தை** என்பதும், **எம்முன்** என வருகையில், முன் என்பதும், **தோன்றல்** என வருகையில் **அல்** என்பதும் விகுதிகளாகின்றன.

(2) **பெண்பாற் பெயர் விகுதிகள் :**

குழையள், இல்லாள், அரசி, மகள்—இவற்றின் விகுதிகளாயுள்ள **அள், ஆள், இ, ள்** என்பவை பெண்பாற் பெயர் விகுதிகள் ஆகும். தங்கை, மங்கை, நங்கை, எங்கை என வருகையில் **கை** என்பது விகுதியாகின்றது.

(3) **பலர்பாற் பெயர் விகுதிகள் :**

வீரர், ஊரார், தாய்மார், அவர்**கள்,** பிறர்—இவற்றின் விகுதிகளாயுள்ள **அர், ஆர், மார், கள், ர்** என்பனவ பலர் பாற் பெயர் விகுதிகள் ஆகும்.

(4) **ஒன்றன்பாற் பெயர் விகுதி :**

நல்ல**து**—இதன் விகுதியாயுள்ள **து** ஒன்றன்பாற் பெயர் விகுதியாகும்.

(5) **பலவின்பாற் பெயர் விகுதிகள் :**

நல்ல**ன,** அ**வை,** அ**வ்,** இ**வ்,** எ**வ்,** ஆடு**கள்**—இவற்றின் விகுதிகளாயுள்ள **அ, வை, வ், கள்** என்பவை பலவின்பாற் பெயர் விகுதிகள் ஆகும்.

படர்க்கை இடத்துவரும் பெயர் விகுதிகளே ஐம்பால் களையும் அறிவிக்கக்கூடியவை. தன்மை, முன்னிலை இடங் களின் பெயர் விகுதிகள் பால்களை உணர்த்தமாட்டா.

விடலை, கோ, வேள், ஆடூஉ முதலியன உயர்திணை ஆண்பாற் பெயர்களாகவும், **மாது, தையல், மகடூஉ** முதலி யன உயர்திணைப் பெண்பாற் பெயர்களாகவும் இவ்விரு பால்களுக்குமுரிய விகுதி பெறுமல் வருகின்றன.

பயிற்சி

1. திணைப் பொதுப் பெயர் என்பது யாது?
2. இடப்பொதுப் பெயர் என்பது எதன் பெயர்? இப்பெயர் வரக் காரணமென்ன?
3. உருபு மயக்கத்தின் மற்றொரு பெயர் யாது?
4. உருபு மயக்கம் என்றால் என்ன? இந்நூலில் இல்லாத எடுத்துக்காட்டுகள் இரண்டுடன் விளக்குக.

5. இந்நகர்க்கே வாழ்கின்றேம், மணற்கு ஈன்ற நாணற் கிழங்கு—இவை என்ன உருபு மயக்கங்கள் ?
6. விளி எத்தனை வகைப்படும்?
7. புலம்பல் விளியில் அமையும் விகாரம் யாது ?
8. விளி ஏற்கக் கூடிய பெயர்கள் எவை ?
9. ஐகார ஈற்றுப் பெயர்கள் விளி ஏற்கையில் அடையும் மாறுதல்கள் எவை ?
10. னகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளியேற்கையில் எம் மாறுதல்களை அடையும் ?
11. சான்றோர், காவலான், நம்பியார்—இவை விளியேற்கையில் எவ்வகை மாறுதல்களடையும் ?
12. ஆண்பாற் பெயர் விகுதிகள் எவை ?
13. விகுதிகள் பெறுமல் வரும் ஆண், பெண்பாற் பெயர்கள் எவை ?
14. பெண்பாற் பெயர் விகுதிகள் யாவை ?
15. காடுகள், தேவிமார், ஊரன், அது, பொன்னி, போந்தவை-இவற்றுள் உள்ள விகுதிகள் எவ்வெப்பாலுக் குரியவை ?

7. வினைச் சொல்

1. தெரிநிலை, குறிப்பு வினைகள்

வினைச் சொற்கள் தெரிநிலை வினை, குறிப்பு வினை என்று இரண்டு வகைப்படும்.

1. **தெரிநிலை வினை :**

தச்சன் முக்காலி செய்தான்

இச்சொற்றொடரில் **செய்தான்** என்பது வினை முற்று. இது,. செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய் பொருள் என்னும் ஆறனையும் வெளிப்படையாக உணர்த்து கிறது.

செய்பவன்	—	தச்சன் – (கருத்தா)
கருவி	—	மரம்
நிலம்	—	பட்டறை
செயல்	—	செய்தல் (தொழில்)
காலம்	—	இறந்தகாலம்
செய்பொருள்	—	முக்காலி (செயப்படு பொருள்)

எனவே, செய்தான் எனும் வினைமுற்று செய்பவனாகிய தச்சனையும், செய்தற்கு வேண்டிய கருவியையும், செய்யும் இடத்தையும், செயலையும், செயல் நிகழ்ந்த காலத்தையும், செய்யப்பட்ட பொருளையும் வெளிப்படையாகக் காட்டியது. இவ்வாறு தொழிலும், காலமும், பிறவும் வெளிப்படத் தெரியுமாறு வரும் வினைமுற்றுக்கள் **தெரிநிலை வினைமுற்றுக்கள்** எனப்படும்.

தெரிநிலை வினைமுற்றுக்களுள் சில செயப்படுபொருள் குறைந்தும், செயப்படு பொருளும் கருவியும் குறைந்தும் வருவதுண்டு.

செய்தான் என்னும் வினை முக்காலி எனும் செயப்படு பொருளை உணர்த்தியது. நடந்தான், ஓடினன், நின்றான், வந்தான் முதலிய வினைகளில் செயப்படுபொருள் இல்லை.

தெரிநிலை வினைமுற்றில், பகுதி செயலைக் காட்டும்; இடைநிலை காலத்தைக் காட்டும். விகுதி செய்பவனைக் காட்டும். நடந்த, நடந்து என்பனபோன்ற தெரிநிலைப்

பெயரெச்சத்திலும், வினை எச்சத்திலும் செயலும், காலமும் வெளிப்படையாகத் தெரியும். மற்றவை குறிப்பாகத் தோன்றும்.

தெரிநிலை வினையானது, தன்வினை, பிறவினை, செயப்படுபொருள்குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாவினை, செய்வினை, செயப்பாட்டு வினை என ஆறு வகைப்படும்.

ii. குறிப்பு வினை :

இவன் செல்வன் (செல்வமுடையவன்)		பொருள்
அவன் தஞ்சாவூரான்	—	இடம்
முருகன் கார்த்திகையான்	—	காலம்
முருகன் நெடுந்தோளன்	—	சினை
கண்ணன் கரியன்	—	குணம்
கண்ணன் கடுநடையன்	—	தொழில்

இவற்றுள், செல்வன், தஞ்சாவூரான், கார்த்திகையான், தோளன், கரியன், நடையன் என்பவை, அன், ஆன் முதலிய விகுதிகளைப் பெற்றுக் கருத்தாவை உணர்த்த, பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் எனும் ஆறனடியாகப் பிறந்த பகுபதங்கள் காலத்தைக் குறிப்பாக உணர்த்தும் பயனிலையாக நின்றன. இவ்வாறு வருபவை குறிப்பு வினை முற்றுக்கள் எனப்படும்.

எனவே, செயலும் காலமும் வெளிப்படையாகத் தெரியாமல் சொல்பவனுடைய குறிப்பினின்று அறிய நிற்கும் வினைச்சொல் குறிப்பு வினையாகும். இதனை வினைக் குறிப்பு என வழங்குதலும் உண்டு.

வேறு, உண்டு, இல்லை என்பவை, இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவான குறிப்பு வினை முற்றுக்கள்

ளாகும். அன்று என்பதும் மேற்கண்டவாறுள்ள பொது வினையேயாகும். யார் என்னும் வினாக் குறிப்புவினை, உயர்திணையாகிய மூன்று பால்களுக்கும், மூவிடங்களுக்கும் பொதுவாக வரும். எவன் என்னும் வினாக்குறிப்புவினை அஃறிணைப் பால்கள் இரண்டுக்கும் பொதுவாக வரும். (எவன் = என், என்னை, என்ன)

1. ஐம்பால் வினைமுற்று *

i. ஆண்பால் வினைமுற்று :

மகிழ்ந்தனன், மகிழ்ந்தான்.

இவற்றிலுள்ள அன், ஆன் என்பவை ஆண்பால் வினை முற்று விகுதிகள். இவ்விகுதிகளுள் ஒன்றைப் பெற்று வரும் வினை ஆண்பால் வினைமுற்று ஆகும்.

ii. பெண்பால் வினைமுற்று :

பாடினள், பாடினாள்.

இவற்றிலுள்ள அள், ஆள் என்பன பெண்பால் வினை முற்று விகுதிகள். இவற்றுள் ஒன்றைப் பெற்று வரும் வினை, பெண்பால் வினைமுற்று ஆகும்.

iii. பலர்பால் வினைமுற்று :

செய்தனர், நடந்தார், சொல்லுப, பாடன்மார்-இவற்றிலுள்ள அர், ஆர், ப, மார் என்பன பலர்பால் வினைமுற்று விகுதிகள். இவற்றுள் ஒன்றைப் பெற்றுவரும் வினை, பலர் பால் வினைமுற்று ஆகும்.

iv. ஒன்றன்பால் வினைமுற்று :

செய்தது, கூவிற்று, பொருட்டு (பொருளையுடையது) இவற்றிலுள்ள து, று, டு என்பன ஒன்றன்பால் வினை

முற்று விகுதிகள். இவற்றுள் ஒன்றைப் பெற்று வரும் வினை ஒன்றன்பால் **வினைமுற்று** எனப்படும்.

v. பலவின்பால் வினைமுற்று :

செய்தன நடந்தன — **அ** விகுதி—உடன்பாடு.
செய்யா நடவா — **ஆ** விகுதி—எதிர்மறை.

இவற்றிலுள்ள **அ, ஆ** என்பன பலவின்பால் வினை முற்று விகுதிகள். இவற்றுள் ஒன்றைப் பெற்றுவரும் வினை **பலவின் பால் வினைமுற்று** எனப்படும். **அ** விகுதி உடன் பாட்டையும், **ஆ** விகுதி எதிர்மறையையும் உணர்த்தும்.

இவ்வாறு வினைமுற்றுக்கள் பால்வகை நோக்கி, ஐவகைப்படும். தன்மை, முன்னிலை, ஏவல், வியங்கோள் வினைமுற்றுக்கள் விகுதிகளால் பால் உணர்த்துதல் இன்மை யின், படர்க்கையின் பாற்படும்.

2. சினைவினை-முதல்வினை *

i. சினைவினை :

கண் துடித்தது	—	துடித்தல்	—	சினைவினை
கால் ஒடிந்தது	—	ஒடிதல்	—	,,
இலை உதிர்ந்தது	—	உதிர்தல்	—	,,
கை நடுங்கியது	—	நடுங்குதல்	—	,,
கிளை முறிந்தது	—	முறிதல்	—	,,

கண், கால், இலை, கை, கிளை என்பன சினைப் பெயர்கள். சினைப் பெயரின் தொழிலைக் குறிக்கும் வினைச் சொல் **சினை வினை** எனப்படும். (சினை = உறுப்பு)

கிளை முறிந்து விழுந்தது.—இதில் கிளை என்பது சினை. விழுந்தது என்பது சினையின் செயலைக் காட்டும் வினை. சினைப் பெயர் சினைவினை கொண்டு முடிந்தது.

ii. **முதல் வினை :**

மனிதன்	**விழுந்தான்**	விழுதல்	முதல் வினை
மாடு	**வந்தது**	வருதல்	,,
மரம்	**முறிந்தது**	முறிதல்	,,

மனிதன், மாடு, மரம் என்பவை முதற் பெயர்கள். முதற்பெயரின் தொழிலைக் குறிக்கும் வினைச் சொல் **முதல் வினை** எனப்படும்.

வால் அறுந்து ஓடியது.—இதில் வால் என்பது சினை. அறுந்து என்பது சினைவினை. ஓடியது முதல்வினை. இதில், சினைவினை சினைவினையுடன் சேர்ந்ததுடன், முதல்வினையைக் கொண்டும் முடிந்தது.

i. நாளெல்லாம் வேலை செய்து கை ஓய்ந்து தளர்ந்தது.

ii. நாளெல்லாம் வேலை செய்து கை ஓய்ந்து தளர்ந்தான்.

முதல் வரியில் ஓய்ந்து என்பது சினைவினைஎச்சம். தளர்ந்தது என்பது சினை வினைமுற்று. எனவே, சினைவினை, சினை வினையுடன் முடிந்தது.

இரண்டாவது வரியில், ஓய்ந்து என்பது சினைவினை எச்சம். தளர்ந்தான் என்பது முதல்வினைமுற்று. எனவே, சினைவினை முதல்வினைகொண்டு முடிந்தது. ஆக, சினைவினை சினையுடனும் முடியும், முதல் வினையுடனும் முடியும்.

3. ஆக்க வினை *

செயற்கைப் பொருளின் தொழிலைக் கூறும் வினையே **ஆக்க வினை** என்று கூறப்படும்.

i. கடுவும் கைபிழி எண்ணெயும் பெற்றமையால் மயிர் நல்லவாயின.

எருப்பெய்து களைகட்டு நீர்பாய்ச்சினமையால் பயிர் நல்லவாயின.

இவ்விரு சொற்றொடர்களும் காரணமும் ஆக்கமும் பெற்றன.

ii. மயிர் நல்லவாயின } என்பன காரணச் சொல் தொக்கு
பயிர் நல்லவாயின } ஆக்கம் பெற்றன.

iii. கடுவும் கைபிழி எண்ணெயும் பெற்றமையால் மயிர் நல்ல. எருப்பெய்து களைகட்டு நீர் பாய்ச்சினமையால் பயிர் நல்ல. இவை ஆக்கச் சொல் தொக்கு வந்தன.

iv. மயிர் நல்ல, பயிர் நல்ல—என்பவை காரணம், ஆக்கம் ஆகிய இரண்டும் தொக்கு வந்தன.

எனவே, முதலில் உள்ள வரிகளில் எண்ணெய் பெற்றமையால், நீர்பாய்ச்சினமையால் என்பவை காரணச் சொற்கள். இரண்டாவது உள்ள வரிகளில் அக்காரணச் சொற்கள் இல்லை. ஆனால், நல்ல **ஆயின** என்ற ஆக்கச் சொல் இருக்கிறது. மூன்றாவதுள்ள வரிகளில், ஆயின என்னும் ஆக்கச் சொல் தொக்கிவந்துள்ளது. நான்காவது வரியில் காரணச் சொல், ஆக்கச் சொல் இரண்டும் தொக்கன.

இவ்வாக்கியங்களில் எண்ணெய் பெற்றமையால் மயிர் நல்லவாயின என்பதில் ஆயின எனும் வினைமுற்று மயிர்

தன் இயல்பு திரிந்து நல்லதாக மாறியதைத் தெரிவிக்கிறது. எண்ணெய் சேர்ந்தமையே மயிர் மாறியதற்குக் காரண மாதலின், இவ்வாறு ஒரு காரணம் பற்றித் தன் தன்மை திரிதல் செயற்கை எனப்படும். இவ்வகையில் செயற்கைப் பொருளின் தொழிலைக் கூறும் வினை **ஆக்க வினை** எனப்படு கிறது.

ஒரு காரணத்தால் தன்மை வேறுபட்ட பொருளைக் கூறுங்கால் காரணமும் ஆக்கமும் கொடுத்தே கூற வேண்டும். அவை தொக்கு வருதல் செய்யுள் விகாரம் எனப்படும். வழக்காற்றில் அவை தொக்கி வரினும் குற்றம் இல்லை எனக் கொள்ளுதல் வேண்டும்.

4. காலங்காட்டும் முறைகள்

காலங் காட்டக் கூடியவை தெரிநிலை வினைச் சொற்களேயாகும். குறிப்பு வினைகள் வெளிப்படையாகக் காலங் காட்டமாட்டா. பெயர்ச் சொற்கள் காலங்காட்டவேமாட்டா. தெரிநிலை வினைச் சொற்களில் காலத்தைக் காட்டக் கூடிய உறுப்புக்கள் இருக்கின்றன. இடைநிலை, பகுதி, விகுதி என்னும் உறுப்புக்களுள் ஒன்று வினைச் சொல்லின் உறுப்பாக நின்று காலத்தை உணர்த்தும்.

i. இடை நிலை காலங்காட்டுதல் :

(அ)	செய்தான்	— த் —	இடைநிலை
	உண்டான்	— ட் —	,,
	சென்றான்	— ற் —	,,
	ஓடினான்	— இன் —	,,

இச்சொற்கள், **த், ட், ற், இன்** என்பனவற்றை இடைநிலைகளாய்ப் பெற்று இறந்தகாலம் காட்டின. எனவே,

இவை இறந்தகால இடை நிலைகள் எனப் பெயர் பெறும். போனான் என்னும் சொல்லில் இன் எனும் இடைநிலை இகரத்தை இழந்து ன் மட்டும் நின்று இறந்தகாலம் காட்டியது. எஞ்சியது என்னும் சொல்லில் இன் எனும் இடைநிலை ன் எனும் எழுத்தை இழந்து, இ மட்டும் நின்று இறந்தகாலம் காட்டியது. போயது என்னும் சொல்லில் ய் எனும் எழுத்து இடைநிலையாக வந்து இறந்தகாலம் காட்டியது. எனவே, த், ட், ற், இன், ன், இ, ய் என்பன இடைநிலைகளாக நின்று இறந்தகாலத்தைக் காட்டும்.

(ஆ) செல்கிறான் —கிறு இடைநிலை
கற்கின்றான் —கின்று ,,
செல்லாநின்றான் —ஆநின்று ,,

இச்சொற்கள், கிறு, கின்று, ஆநின்று என்பனவற்றை இடைநிலைகளாகப் பெற்று நிகழ்காலம் காட்டின. எனவே, இவை நிகழ்கால இடைநிலைகள் எனப் பெயர் பெறும். இவற்றுள் ஆநின்று வழக்காற்றில் அருகி வருகின்றது.

(இ) நடப்பான் — ப் — இடைநிலை
செய்வான் — வ் — ,,

இச்சொற்கள் ப், வ் என்பனவற்றை இடைநிலைகளாகப் பெற்று, எதிர்காலம் காட்டின. எனவே, இவை எதிர்கால இடைநிலைகள் எனப் பெயர் பெறும்.

இவ்வாறு வினைச் சொற்களில் இடைநிலைகளே மூன்று காலங்களையும் தெளிவாகக் காட்டக் கூடிய உறுப்புக்களாயிருக்கின்றன. இடைநிலையால் காலம் காட்டப்படும் சொற்களே பெரும்பான்மையினவாகும்.

ii. **பகுதி காலங் காட்டுதல் :**

(அ)	புக்கான்	—	புகு	—	பகுதி
	நக்கான்	—	நகு	—	,,
	தக்கான்	—	தகு	—	,,
(ஆ)	இட்டான்	—	இடு	—	,,
	சுட்டான்	—	சுடு	—	,,
	நட்டான்	—	நடு	—	,,
(இ)	உற்றான்	—	உறு	—	,,
	செற்றான்	—	செறு	—	,,
	பெற்றான்	—	பெறு	—	,,

இச்சொற்கள் இறந்தகாலம் காட்டி நின்றன வெனி னும், இவற்றில் காலங்காட்டுதற்குரிய இடைநிலைகள் இல்லை. பகுதிகளே காலம் காட்டுகின்றன. எனவே, கு, டு, று ஆகிய மூன்று உயிர்மெய் ஈறுகளையுடைய சில குறிலிணைப் பகுதிகள், விகுதி ஏற்கும் பொழுது, இறுதி மெய் இரட் டித்து விகாரமடைந்து இறந்தகாலத்தைக் காட்டும். எடுத் துக் காட்டாக, புகு எனும் பகுதி ஆன் விகுதியை ஏற்கும் போது, புக்கு+ஆன் என இறுதி மெய் இரட்டப் பெற்று இறந்தகாலம் காட்டும். இதேபோல, நகு என்பது நக்கு எனவும், தகு என்பது தக்கு எனவும், இடு என்பது இட்டு எனவும், சுடு என்பது சுட்டு எனவும், நடு என்பது நட்டு எனவும், உறு என்பது உற்று எனவும், செறு என்பது செற்று எனவும், பெறு என்பது பெற்று எனவும் மெய் இரட்டிக்கப் பெற்றன.

iii. **விகுதி காலங் காட்டுதல் :**

(அ)	செல்லும்	—	உம்	—	விகுதி	எதிர்காலம்
	தின்னும்	—	உம்	—	,,	எதிர்காலமும் நிகழ்காலமும்
	சாயும்	—	உம்	—	,,	,,

இச்சொற்களின் விகுதியாயுள்ள உம் (செய்யுமென் வினைமுற்று விகுதி) முதலில் எதிர்காலத்தையும், பின் னிரண்டில் எதிர்காலம், நிகழ்காலம் ஆகிய இரண்டினையும் காட்டியது. எனவே, உம் எனும் விகுதி நிகழ்காலமும், எதிர்காலமும் காட்டும்.

(ஆ) என்ப	— ப —	விகுதி —	எதிர்காலம்
என்மார்	— மார் —	,,	,,
வாராய்	— ஆய் —	,,	,,
தாரீர்	— ஈர் —	,,	,,
உண்மின்	— மின் —	,,	,,
செய்யும்	— உம் —	,,	,,
வாழ்க	— க —	,,	,,
வாழிய	— இய —	,,	,,
வாழியர்	— இயர் —	,,	,,

இச்சொற்களில் விகுதிகளாயுள்ள ப, மார் என்னும் படர்க்கைப் பலர்பால் விகுதிகளும், ஆய், ஈர், மின், உம் என்னும் ஏவல் வினைமுற்று விகுதிகளும், க, இய, இயர் என்னும் வியங்கோள் வினைமுற்று விகுதிகளும் எதிர் காலம் காட்டின.

(இ) சாயும் (பொழுது) என்பதில் உள்ள உம் என்னும் பெயரெச்ச விகுதி எதிர்காலம் காட்டியது. இது சிறு பான்மை நிகழ்காலமும் காட்டும்.

(ஈ) உண்ணு (இருந்தான்)	— ஆ —	விகுதி
ஓடி (வந்தேன்)	— இ —	,,
போய் (நின்றான்)	— ய் —	,,

இவ்வினை எச்சச் சொற்களின் விகுதிகளாயுள்ள ஆ, இ, ய் என்பன இறந்தகாலம் காட்டின.

(உ) உண்ண (வந்தேன்) — அ விகுதி
உண்ண (வருகிறேன்) — அ ,,
உண்ண (வருவேன்) — அ ,,

இந்தத் தெரிநிலை வினைஎச்ச விகுதியாகிய **அ** என்பது **இறந்தகால, நிகழ்கால, எதிர்கால** மென்னும் **மூன்று காலத்தையும்** காட்டும்.

(ஊ) செய்யின் (மகிழ்வேன்) — **இன்** — விகுதி
வந்தால் (தருவேன்) — **ஆல்** — ,,
வந்தக்கால் (முடியும்) — **கால்** — ,,
செய்வான் (வந்தேன்) — **வான்** — ,,
காண்பான் (நின்றேன்) — **பான்** — ,,

இவ்வினைஎச்சச் சொற்களின் விகுதிகளாகிய **இன், ஆல், கால், வான், பான்** என்பன **எதிர்காலம் காட்டும்.**

(எ) வந்து (வந்தேன்) — **து**
உண்டு (உண்டேன்) — **டு**
சென்று (சென்றேன்) — **று**
} ஒருமை விகுதிகள்

வந்தும் (வந்தோம்) — **தும்**
உண்டும் (உண்டோம்) — **டும்**
சென்றும் (சென்றோம்) — **றும்**
} பன்மை விகுதிகள்

இவ்வாறு **து, டு, று** என்பன **ஒருமையிலும், தும், டும், றும்** என்பன **பன்மையிலும் விகுதிகளாக நின்று இறந்த காலம்** காட்டின.

(ஏ) உண்கு (உண்பேன்) — **கு**
வருது (வருவேன்) — **து**
சேறு (செல்வேன்) — **று**
} ஒருமை விகுதிகள்

செய்கும் (செய்வோம்) — **கும்**
வருதும் (வருவோம்) — **தும்**
சேறும் (செல்வோம்) — **றும்**
} பன்மை விகுதிகள்

இவ்வாறு கு, து, று என்பன ஒருமையிலும், கும், தும், றும் என்பன பன்மையிலும் விகுதிகளாக நின்று எதிர்காலம் காட்டின.

து, டு, று, கு, தும், டும், றும், கும் என்பன காலம் காட்டுவது வழக்காற்றில் இன்று இல்லை.

இடை நிலைகளே வினைச் சொற்களில் பெரும் பான்மையும் காலம் காட்டும் உறுப்பாகும். பகுதிகளும் விகுதிகளும் காலங்காட்டும் உறுப்புகளாகச் சிறுபான்மை வரும்.

5. சிலவகை வினை எச்சங்களின் வாய்பாடுகள்

வந்து ஓடினான், நடந்து சென்றான், கண்டு மகிழ்ந் தான். இவற்றுள், வந்து நடந்து, கண்டு என்பன இறந்த கால வினையெச்சங்கள். இவை செய்து எனும் வாய் பாட்டு வினையெச்சம் எனப்படும்.

காண்குபு வந்தேன்.—(கண்டு வந்தேன்.)
உண்குபு சென்றேன்.—(உண்டு சென்றேன்.)

இவற்றுள், காண்குபு, உண்குபு என்பன இறந்தகால வினைஎச்சங்கள். இவை செய்பு எனும் வாய்பாட்டு வினையெச்சங்களாகும்.

உண்ணூ மகிழ்ந்தேன்.—(உண்டு மகிழ்ந்தேன்.)
காணூ வந்தேன்.—(கண்டு வந்தேன்.)

இவற்றுள், உண்ணூ, காணூ என்பன இறந்தகால வினைஎச்சங்கள். இவை செய்யா எனும் வாய்பாட்டு வினை எச்சங்களாகும்.

உண்ணூ சென்றேன்.—(உண்டு சென்றேன்.)
காணூ வந்தேன்.—(கண்டு வந்தேன்.)

இவற்றுள், உண்ணூ, காணூ என்பன இறந்தகால வினைஎச்சங்கள். இவை செய்யூ எனும் வாய்பாட்டு வினைஎச்சங்களாகும்.

யான் கண்டென அவன் ஓடினான்.
அவன் உண்டென நான் சென்றேன்.

இவற்றுள், கண்டென, உண்டென என்பவை இறந்த கால வினைஎச்சங்கள். இவை செய்தென எனும் வாய் பாட்டு வினைஎச்சங்களாகும்.

அவன் உண்ண நான் மகிழ்கிறேன்.
நான் நடக்க அவனுடன் வருகிறேன்.

இவற்றுள், உண்ண, நடக்க என்பவை நிகழ்கால வினைஎச்சங்கள். இவை செய எனும் வாய்பாட்டு வினை எச்சங்களாகும்.

முருகன் கற்பின் நான் தேர்ச்சி பெறுவேன்.
நன்கு உண்ணின் வலுவுடனிருக்கலாம்.

இவற்றுள், கற்பின், உண்ணின் என்பவை எதிர்கால வினைஎச்சங்கள். இவை செயின் எனும் வாய்பாட்டு வினைஎச்சங்களாகும்.

அவன் செய்யிய இருந்தான்.
இவன் உண்ணிய வந்தான்.

இவற்றுள், செய்யிய, உண்ணிய என்பன எதிர்கால வினைஎச்சங்கள். இவை செய்யிய எனும் வாய்பாட்டு வினைஎச்சங்களாகும்.

நான் உண்ணியர் சென்றேன்.

அவர் செய்யியர் வந்தார்.

இவற்றுள், உண்ணியர், செய்யியர் என்பவை எதிர் கால வினைஎச்சங்கள். இவை செய்யியர் எனும் வாய்பாட்டு வினைஎச்சங்களாகும்.

புலி கொல்வான் வந்தது.

அவன் பிடிப்பான் போனான்.

அவன் உண்பாக்கு இருந்தான்.

இவற்றுள், கொல்வான், பிடிப்பான், உண்பாக்கு என்பவை எதிர்கால வினைஎச்சங்கள். கொல்வான் என்பது வான் ஈற்று வினைஎச்சம் என்றும், பிடிப்பான் என்பது பான் ஈற்று வினைஎச்சம் என்றும், உண்பாக்கு என்பது பாக்கு ஈற்று வினைஎச்சம் என்றும் வழங்கப்படும்.

செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென என்னும் வாய்பாட்டு வினைஎச்சங்கள் இறந்த காலம் காட்டும்.

செய எனும் வாய்பாட்டு வினைஎச்சம் ஒன்றே நிகழ் காலம் காட்டும்.

செயின், செய்யிய, செய்யியர் எனும் வாய்பாட்டு வினை எச்சங்களும், வான், பான், பாக்கு எனும் விகுதி களைக் கொண்டு முடியும் வினைஎச்சங்களும் எதிர்காலம் காட்டும்.

இதுவரை எடுத்துக் காட்டப்பட்ட வினைஎச்சங்கள் அனைத்தும், காலமும் தொழிலும் உணர்த்தி நிற்கும் தெரி நிலை வினை எச்சங்களாகும்.'

இ, உ, ய், பு, ஆ, ஊ என்னும் வினைஎச்ச விகுதிகள் இறந்தகாலம் காட்டும். அ எனும் வினைஎச்ச விகுதி முக்

காலமும் உணர்த்தும். அ என்னும் விகுதியுடன் கு விகுதி சேர்ந்து எதிர்கால முணர்த்தும். இன், ஆல், கால், இய, இயர், வான், பான், பாக்கு, கடை, வழி, இடத்து, உம் என்பன எதிர்காலம் உணர்த்தும் விகுதிகள். மல், மை, மே, உ, மைக்கு, கால், கடை, வழி, இடத்து என்பன எதிர் மறை ஆகார இடைநிலை பெற்று எதிர்மறையில் வரும்.

ஏல், எனின், ஆயின், ஏனும் — என்னும் நான்கி னோடும், முற்று வினைகள் இயைந்து ஒரு சொன்னீர்மைப் பட்டுச் செயின் எனும் வாய்பாட்டு வினை எச்சங்களாக வரும்.

அன்றி வராது, இன்றி நடவாது—இவற்றுள், அன்றி, இன்றி எனும் வினையெச்சங்கள் காலங் காட்டவில்லை. எனவே, காலம் வெளிப்படையாகக் காட்டாதவை குறிப்பு வினை எச்சங்கள் எனப்படும். உடன்பாடு, எதிர்மறை ஆகிய இரண்டிலும் வினையெச்சம் வரும்.

அன்றி, இன்றி, அல்லது, அல்லாமல், அல்லால், இல்லாமல், இல்லாக்கால், மெல்ல, இல்லாக்கடை, இல்லாவழி, இல்லாவிடத்து—முதலியவை குறிப்பு வினை எச்சங்களாகும். அ, றி, து, ஆல், மல், கால், கடை, வழி, இடத்து முதலியவை குறிப்பு வினை எச்ச விகுதிகளாகும்.

பயிற்சி

1. வினைச் சொல் என்பது யாது?
2. தெரிநிலை, குறிப்பு வினைமுற்றுக்கள் என்பவை யாவை?
3. தெரிநிலை வினைமுற்று எத்தனை வகைப்படும்?
4. படர்க்கையின் பாற்படும் வினைமுற்றுக்கள் யாவை?
5. சினை வினை, முதல்வினை என்பவை யாவை?
6. சினைவினைக்கும் முதல்வினைக்கு முள்ள வேறு பாடு யாது?

7. ஆக்கவினை என்பது யாது?
8. காலங் காட்டும் உறுப்புக்கள் எவை?
9. இறந்தகால இடைநிலைகள் எவை?
10. ன், இ, ய் என்பன இறந்தகால இடைநிலைகளாதல் எங்ஙனம்?
11. பகுதியே காலங் காட்டக் கூடும் என்பதை, இந்நூலில் இல்லாத மூன்று சொற்களை எடுத்துக் காட்டாகத் தந்து விளக்குக.
12. எதிர் காலம் காட்டக் கூடிய விகுதிகள் யாவை?
13. 'உம்' எனும் விகுதி எவ்வெக் காலம் காட்டும்?
14. அ விகுதி எவ்வெக் காலத்திற்குரியது?
15. து, று, டு, தும், றும், டும்—இவ்விகுதிகள் எங்ஙனம் எவ்வெக்காலம் காட்டும்?
16. வினைஎச்சங்களின் வாய்பாடுகளை விளக்குக.
17. இறந்தகால வினைஎச்சங்களுக்குரிய வாய்பாடுகள் யாவை?
18. விகுதிகளைக் கொண்டு எதிர்காலங் காட்டும் வினைஎச்சங்கள் யாவை?
19. தெரிநிலை வினைஎச்ச விகுதிகள் யாவை?
20. குறிப்பு வினைஎச்ச விகுதிகள் எவை?

6. இடைச் சொல்*

(அந்தில், ஆங்கு, மா, முன்னிலை அசைச் சொற்கள்)

அந்தில் :

இந்த இடைச்சொல் **அசைநிலை**யாகியும், **இடப்பொரு**ளாகியும் வரும்.

"அந்தில் கழலினன் கச்சினன்" என்பதில் அந்தில் அசைநிலையாக (வேறு பொருள் ஏதும் தராதநிலை) வந்துள்ளது.

'வருமே சேயிழை அந்தில் கொழுநன் காணிய' என்பதில் அந்தில் என்பது அவ்விடத்தில் எனப் பொருள் பட நிற்றலால் இடப் பொருளாக வந்துள்ளது.

ஆங்கு :

இந்த இடைச் சொல்லும் அந்தில் என்பதைப் போலவே அசைநிலையாகியும் இடப்பொருளாகியும் வரும்.

'ஆங்குஅத் திறனல்ல யாம்கழற' என்பதில், ஆங்கு என்பது வேறு பொருள் ஏதும் இல்லாமல் அசைநிலையாக வந்துளது.

'ஆங்காங்கு ஆயினுமாக' என்பதில் ஆங்கு என்பது இடப்பொருளை உணர்த்தி நிற்கிறது.

மா :

இந்த இடைச்சொல் வியங்கோள் வினையை அடுத்து வரும் அசைச் சொல்லாகும்.

'மாயக் கடவுட் குயர்கமா வலனே'
'புற்கை யுண்கமா கொற்கை யோனே'

இவ்விரண்டடிகளிலும் மா எனும் அசைச் சொல் உயர்க, உண்க என்னும் வியங்கோள் வினைகளை அடுத்து எப் பொருளையும் உணர்த்தாமல் வந்திருக்கிறது. இது வியங் கோள் அசைச் சொல் எனப்படும்.

முன்னிலை அசைச் சொற்கள் :

மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ, யாழ என்னும் இப்பத்து இடைச்சொற்களும் முன்னிலையிடத்து வரும் அசைச்சொற்களாகும்.

1. 'சிலையின் செழுந்தழையன் சென்மியா' — மியா
2. 'தண்டுறை யூர! காணிக எனவே' — இக
3. 'காமஞ்செப்பாது கண்டது மொழிமோ — மோ
4. 'சென்மதி பெரும!' — மதி
5. 'சொல்லியரத்தை நின் வெகுளி' — அத்தை
6. 'நீயொன்று பாடித்தை' — இத்தை
7. 'காணியவா வாழிய மலைச்சாரல்' -- வாழிய
8. 'சிறிது தவிர்ந்தீக மாள நின் பரிசில ருய்ம்மார்'—மாள
9. 'சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே' -- ஈ
10. 'நீயே செய்வினை மருங்கிற் செலவயர்ந்தி யாழ' —யாழ

(செல் + ஈ என்பதில் **செல்** என்பது முன்னிலை வினை. ஈ என்பது முன்னிலை அசை. இவ்வசை றகர ஒற்றை ஊர்ந்து நிற்க, முன்னின்ற லகர ஒற்று னகர ஒன்றாய்த்திரிந்து நின்று, சென்றீ என்றாயிற்று.)

"விழுமிய பெறலரும் பரிசில் நல்குமதி பலவுடன் மலைகிழவோனே" எனும் திருமுருகாற்றுப்படை அடியில் மதி எனும் முன்னிலை அசைச் சொல் படர்க்கை இடத்து வந்திருக்கிறது.

பயிற்சி

1. அந்தில் எனும் அசைச் சொல் எத்தனை வகையில் வரும்?
2. ஆங்கு என்பது எத்தனை வகையில் வருகிறது?
3. வியங்கோள் வினைமுற்றை அடுத்துவரும் அசைச் சொல் யாது?
4. முன்னிலை அசைச்சொற்கள் எத்தனை வகைப் படும்?

5. இவை முன்னிலை அசைகள் என்று கூறப்படுவ தேன்?
6. 'சென்றீ பெரும' என்பதில் ஈ முன்னிலை அசை யாதல் எங்ஙனம்?
7. மதி எனும் அசைச் சொல் எவ்வெவ்விட அசை யாக வரும்?
8. அசைச்சொல் என்பதன் பொருள் என்ன?
9. மதி, வாழிய, மாள போன்றவை எவ்வசைகளாகப் பயன்படுத்தப்படுகின்றன?

3. பொது

1. செய்யுள் விகாரங்கள்

இரு சொற்களுக்கிடையில் ஓர் எழுத்துப் புதிதாகத் தோன்றுதல் **தோன்றல் விகாரம்** எனவும், ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாகத் திரிதல் **திரிதல் விகாரம்** எனவும், உள்ள எழுத்து மறைந்து போதல் **கெடுதல் விகாரம்** எனவும் முன்னரே படித்திருக்கிறீர்கள். இங்குச் செய்யுளுக்கே உரிய ஒன்பதுவகை விகாரங்களைப் படிப்போம்:

(1) வலித்தல் விகாரம்:

குறுத்தாட் பூதம்—இது, **குறுந்தாள்** பூதம் எனப் படுவதில் மெல்லினமாகிய் நகர ஒற்று, வல்லினமாகிய **தகர** ஒற்றாகத்திரிந்தது. இவ்வாறு மெல்லின ஒற்று வல்லின ஒற்றாகத்திரிவது **வலித்தல் விகாரம்** எனப்படும்.

(2) மெலித்தல் விகாரம்:

தண்டையின் இனக்கிளி கடிவோள்—இது, **தட்டையின்** எனப்படுவதில், வல்லினமாகிய டகர ஒற்று, மெல்

இனமாகிய ணகர ஒற்றாகத்திரிந்தது. இவ்வாறு வல்லின ஒற்று மெல்லின ஒற்றாகத் திரிவது **மெலித்தல் விகாரம்** எனப்படும்.

(3) நீட்டல் விகாரம் :

கற்பக நீழலைக் காக்கும் தேவர்—இது, **நிழல்** எனப் படுவதில் முதலாகிய **நி** எனும் குறில் **நீ** என நீண்டு நின்றது. இவ்வாறு குறில் நெடிலாகத் திரிவது **நீட்டல் விகாரம்** எனப்படும்.

(4) குறுக்கல் விகாரம் :

திருத்தார்நன் றென்றேன் **தியேன்** — இது, **தீயேன்** எனப்படுவதில் முதலாகிய **தீ** எனும் நெடில் **தி** எனக் குறுகித் திரிந்தது. இவ்வாறு நெடில் குறிலாகத் திரிவது **குறுக்கல் விகாரம்** எனப்படும்.

இந்த நான்குவகை விகாரங்களும் **திரிதல் விகாரத்தில்** அடங்கும்.

(5) விரித்தல் விகாரம் :

நெல் விளையும்மே—இது, **விளையுமே** எனப்படுவதில் மகர ஒற்று விரிந்து நின்றது. இவ்வாறு விரிந்து வருதல் **விரித்தல் விகாரம்** எனப்படும்.

இது **தோன்றல் விகாரத்தில்** அடங்கும்.

(6) தொகுத்தல் விகாரம் :

சிறியிலை வெதிரின்—இது, **சிறியவிலை** எனப்படுவ தில், யகர உயிர்மெய் குறைந்து நின்றது. இவ்வாறு தொக்குவருவது **தொகுத்தல் விகாரம்** எனப்படும்.

(7) முதற் குறை :

மரையிதழ் புரையும் அஞ்செஞ்சீறடி—இது, **தாமரை யிதழ்** எனப்படுவது முதல் குறைந்தது. இவ்வாறு சொல்லின் முதல் எழுத்துக் குறைந்து வருவது **முதற்குறை** எனப்படும்.

(8) இடைக் குறை :

வேதின வெரிநின் ஓதி முதுபோத்து—இது, **ஓந்தி** எனப்படுவது இடையெழுத்துக் குறைந்து நின்றது. இவ்வாறு இடையெழுத்துக் குறைந்து வருவது **இடைக்குறை** எனப்படும். (ஓந்தி – ஓணான்).

(9) கடைக் குறை :

நீல் உண் துகிலிகை கடுப்ப—இது, **நீலம்** என்பது கடைக் குறைந்து நின்றது. இவ்வாறு ஈற்றெழுத்துக் குறைந்து வருவது **கடைக் குறை** எனப்படும்.

தொகுத்தல் விகாரமும், முதல், இடை, கடை எனும் மூவழிக் குறைதல் விகாரங்களும் **கெடுதல் விகாரத்தில்** அடங்கும். முதலிடைகடை எனும் மூவழிக் குறைதல் விகாரங்கள் பகாப் பதத்தில் மட்டுமே அமையும்.

எனவே, வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல், முதற்குறை, இடைக்குறை, கடைக் குறை ஆகிய இந்த ஒன்பது விகாரங்களும் **தோன்றல், திரிதல், கெடுதல்** எனும் மூவகையுள் அடங்குமெனினும் செய்யுளுக்கே உரியவையாகு மாதலின், இவ்வை **செய்யுள் விகாரங்கள்** எனப்படும்.

2. சொல் முடிபு: பெயரும் வினையும் முடியும் முறை

புகழேந்தி படித்தான். — குமரன் குதித்தான்.

இவ்வாறு, பெயர்ச் சொல் (எழுவாய்) முதலிலும், வினைச் சொல் (பயனிலை) இறுதியிலும் நின்று முடிவதே முறையாகும். எனினும், விரைவு, துணிவு, மகிழ்ச்சி, வெகுளி, உயர்வு முதலிய குறிப்பை உணர்த்த நேருகையில் அதற்கேற்றவாறு, **படித்தான் புகழேந்தி–குதித்தான் குமரன்** என வினைமுற்று முதலிலும் பெயர் கடையிலுமாக நிற்றலும் உண்டு.

புகழேந்தி தொல்காப்பியத்தைப் படித்தான்.

இவ்வாறு சொற்றொடர்கள் எழுவாய் முதலிலும், பயனிலை இறுதியிலும், செயப்படுபொருள் இடையிலுமாக அமைந்து வருதலே இயல்பாகும்.

பயனிலைக்குச் சிறப்புத் தரக் கருதி, **படித்தான் தொல் காப்பியத்தைப் புகழேந்தி** எனவும், செயப்படு பொருளுக் குச் சிறப்புத் தரக் கருதி, **தொல்காப்பியத்தைப் புகழேந்தி படித்தான், தொல்காப்பியத்தைப் படித்தான் புகழேந்தி** எனவும் எழுதுதல் உண்டு.

இவ்வாறு சொற்றொடர்கள், பெயரை முதலிலும் வினையை ஈற்றிலும் கொண்டு முடிவது போல், வினையை முதலிலும் பெயரைக் கடைசியிலும் கொண்டு முடிவதும் உண்டு.

எழுவாய் பெரும்பான்மை வினையையும், **அவன் முருகன்** என்பது போலச் சிறுபான்மை பெயரையும், **கந்தன் யாவன்** என்பது போல வினாவையும், **கந்தன்**

வருகை என்பது போலத் தொழிற் பெயரையும், கந்தன் வந்தவன் என்பது போல வினையாலணையும் பெயரையும், கந்தன் அவன் என்பதுபோலச் சுட்டுப் பெயரையும் கொண்டு முடியும்.

கருவூரின் கிழக்கு. — கந்தனது பை.

இவ்வாறு எல்லைப் பொருளில் வரும் இன் எனும் ஐந்தாம் வேற்றுமை உருபும், அது எனும் ஆறும் வேற்றுமை உருபும் சொற்றொடரில் பெயரைக் கொண்டு முடியும்.

பாட்டைப் பாடினன்.—பாடினன் பாட்டை.
கையால் அடித்தான்.—அடித்தான் கையால்.
எனக்குக் கொடுத்தான்.—கொடுத்தான் எனக்கு.
நகரின்கண் இருந்தான்.—இருந்தான் நகரின்கண்.

இவ்வாறு இரண்டாம் வேற்றுமை, மூன்றும் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமைகள் வினையைக் கொண்டு முடிதலும், வேற்றுமை யுருபுகள் சொற்றொடரின் ஈற்றில் நின்று முடிதலும் உண்டு.

பிணிக்கு மருந்து—மணியின் கண் ஒளி

என்னுமாறு வேற்றுமை யுருபுகள் பெயரையே கொண்டு முடிதலும் உண்டு. எனினும், பிணிக்குக் (கொடுக்கும்) மருந்து, மணியின்கண் (இருக்கும்) ஒளி என இவை வினை வேண்டி நிற்றலால் இவை வினையொடு பொருந்தும் பெயர்களாய் ஈற்றில் நின்றன என்னலாம்.

விளி வேற்றுமையாகிய முருகா என்பது ஈற்றில் வா என வினை பெற்று முடிவதும் வா முருகா என முதலில் வினையை ஏற்பதும் உண்டு.

வந்த சிறுவன்—எனப் பெயரெச்சம் பெயர்க்கு முன்னும், வந்து போனன்—என வினைஎச்சம் வினைக்கு

முன்னும் நின்று முடிதலே இயல்பாம். **போனன் வந்து** என் வினைஎச்சம் முற்றுவினைக்குப் பின் நின்று முடிதலும் உண்டு. ஆனல், பெயரெச்சம் பெயருக்குப் பின் வருவதில்லை.

பெயரும் வினையும் முடியும் முறை எங்ஙனமாயினும், எழுவாயும் பயனிலையும் திணை, பால், எண், இடம் என்பவற்ருல் ஒத்திருத்தல் இன்றியமையாத தாகும்.

இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாக உள்ள உண்டு, இல்லை, **வேறு** எனும் குறிப்பு வினைகளும் மேற்காட்டியது போலவே, முதலில் நின்றும் ஈற்றில் நின்றும் (தோழன் இல்லை—இல்லை தோழன்) சொற்றொடர்கள் முடியும்.

3. இடைப் பிற வரல் *

வேற்றுமை உருபுகளும், வினைமுற்றுக்களும், பெயரெச்சங்களும், வினை எச்சங்களும் கொண்டு முடியும் பெயர்க்கும் வினைக்கும் இடையே, வருமொழியுடன் இயைந்துநிற்கத் தக்க பிற சொற்கள் வரப் பெறுதலே **இடைப் பிற வரல்** எனப்படும்.

வேற்றுமை ஏற்ற சொல்	பிற (சொற்கள்) வரல்	கொண்டு முடியும் சொல்
புகழேந்தி	(வயிருர)	உண்டான்.
வீட்டை	(அழகு பெறச்)	செய்தான்.
கம்பால்	(நையப்)	புடைத்தான்.
பள்ளிக்குச்	(செல்வம் வேண்டி)	நாட்டியமாடினுள்.
மலையினின்று	(உருண்டு)	வீழ்ந்தான்.
அரசனது	(மதம் பிடித்த)	யானை.
ஊர்க்கண்	(உயர்ந்த)	மாளிகை.
வெற்றிவேலா	(விரைந்து)	ஓடிவா.

இவ்வாறு வேற்றுமை உருபுகளை ஏற்றுநின்ற பெயர் களுக்கும், அவை கொண்டு முடியும் சொற்களுக்கும் இடையே, 'வயிறார', 'அழகுபெற', 'நைய' முதலிய பிற சொற்கள் வந்துள்ளன.

வினைமுற்று	பிற(சொற்கள்) வரல்	கொண்டுமுடியும் சொல்
வந்தான்	(குமரிக்குப் போன)	கந்தன்
திரும்பினார்	(அமெரிக்கா சென்ற)	தலைவர்

இவ்வாறு வினைமுற்றுக்களுக்கும் அவை கொண்டு முடிந்த பெயர்ச் சொற்களுக்கும் இடையே 'குமரிக்குப் போன', 'அமெரிக்கா சென்ற' என்னும் பிற சொற்கள் வந்துள்ளன.

பெயரெச்சம்	பிற(சொற்கள்)வரல்	கொண்டுமுடியும் சொல்
வந்த	(முதல்)	அமைச்சர்
சென்ற	(மும்முடி)	வேந்தர்

இவ்வாறு பெயரெச்சங்களுக்கும் அவை கொண்டு முடிந்த பெயர்ச் சொற்களுக்கும் இடையே 'முதல்', 'மும் முடி' எனும் பிற சொற்கள் வந்துள்ளன.

வினைஎச்சம்	பிற(சொற்கள்)வரல்	கொண்டுமுடியும்சொல்
வந்து	(இன்று ஊர்க்குப்)	போயினான்
நின்று	(மனமாரப்)	பாடினார்

இவ்வாறு வினை எச்சங்களுக்கும் அவை கொண்டு முடிந்த வினைமுற்றுக்களுக்கும் இடையில், 'இன்று ஊர்க்கு' எனவும், 'மனமார' எனவும் பிற சொற்கள் வந்துள்ளன.

இவ்வாறு ஒரு சொற்றொடரில் நிலைமொழிக்கும், கொண்டு முடியும் பெயர்க்கும் வினைக்கும் இடையே வரு

மொழியுடன் **இயைந்து நிற்கத்தக்கவாறு** வரும் பிற சொற்களே **இடைப் பிற வரல்** எனப்படும்.

உண்டு விருந்தோடு வந்தான் என்னுமிடத்து, இடையில் வந்துள்ள **விருந்து** எனும் சொல் வருமொழியுடன் இயைதலின்றி 'விருந்தோடுண்டு வந்தான்' என நிலைமொழியுடனும் இயைதலால் இது போல்வன இடையில் வரப் பெறுவென அறிக.

4. வினா வகை *

(1) '**ஐயா, இச் செய்யுளின் பொருள் யாது?**' இது, பொருள் தெரியாத மாணவன் அதைத் தெரிந்து கொள்ள ஆசிரியரைக் கேட்ட வினா.

இவ்வாறு தெரியாத ஒன்றனைக் குறித்துத் தெரிந்து கொள்ளும் பொருட்டுப் பிறரைக் கேட்கும் வினா **அறியா வினா** எனப்படும்.

(2) '**திருவள்ளுவர் வரலாறு பற்றி நீ யாது அறிவாய்?**'—இது, மாணவன் ஆற்றலை அறிதற் பொருட்டு ஆசிரியர் விடுத்த வினா.

இவ்வாறு ஒன்றினைக் குறித்து நன்கு அறிந்திருந்து, அது பிறர்க்குத் தெரியுமா வென்பதை அறிதற் பொருட்டுக் கேட்கும் வினா **அறிவினா** எனப்படும்.

(3) '**இது நல்லதா? கெட்டதா?**'—தனக்கு ஐயமாக இருப்பதொரு பொருளைக் குறித்து, ஐயந் தீர்த்துக் கொள்ளுதற் பொருட்டுக் கேட்கும் வினா **ஐய வினா** எனப்படும்.

(4) '**பருப்பிருக்கிறதா வணிகரே?**' — வாங்கும் கருத்துடன் கேட்கும் வினா **கொளல் வினா** எனப்படும்.

(5) 'தம்பிக்கு ஆடை இல்லையோ ?' —கொடுக்கும் எண்ணத்துடன் விடுக்கும் வினா **கொடை வினா** எனப்படும்.

(6) "தம்பீ சோறுண்டனையா ?"—இது, சோறு உண்ணவில்லை யெனின், 'வந்துண்'! என ஏவுதற் பொருட்டு விடுக்கும் வினா. ஆதலின் இஃது **ஏவல் வினா** எனப்படும்

இவ்வாறு வினாக்கள், **அறியாமை, அறிவு, ஐயம், கொள்ளுதல், கொடை, ஏவல்** என **ஆறு** வகைப்படும்.

5. விடை வகை *

1. 'சென்னைக்கு வழி யாது ?' என்ற வினாவிற்கு '**இது**' என்பது விடையாயின், அது **சுட்டு விடை** எனப் படும்.

2. '**நீ இதைச் செய்வாயா ?**' என்ற வினாவிற்குச் '**செய்வேன்**' என்பது விடையாயின் அது **நேர்விடை** அல்லது **உடன்பாட்டு விடை** எனப்படும்.

3. அதே வினாவிற்குச் '**செய்யேன்**' என்பது விடையாயின், அது **மறை விடை** அல்லது **எதிர்மறை விடை** எனப்படும்.

4. '**நீ சற்று இங்கு வருவாயா ?**' என்ற வினாவிற்கு '**நீ வா**' என்பது விடையாயின், அஃது **ஏவல் விடை** எனப் படும்.

5. '**நீ இது செய்வாயா ?**' என்ற வினாவிற்குச் **செய் யேனோ?** என்பது விடையாயின்,அது **வினாவெதிர் வினாதல்** எனப்படும்.

6. '**நீ இது செய்யாயா ?**' என்ற வினாவிற்கு **உடம்பு நொந்தது** என்பது விடையாயின், அஃது **உற்றதுரைத்தல்** எனப்படும்.

7. அதே வினவிற்கு 'உடம்பு நோகும்' என்பது விடையாயின், அஃது உறுவது கூறல் எனப்படும்.

8. "நீ இது செய்வாயோ!" என்ற வினவிற்கு, மற்றையது செய்வேன் என்பது விடையாயின், அஃது இனமொழி எனப்படும்.

இவ்வாறு, சுட்டு விடை, உடன்பாட்டு (நேர்) விடை, எதிர்மறை (மறை) விடை, ஏவல் விடை, வினவெதிர் வினுதல் விடை, உற்றதுரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை என விடைகள் எட்டு வகைப்படும்.

6. அடைமொழி *

ஒன்றனைச் சிறப்பிக்க வரும் மொழி அடைமொழி எனப்படும். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறும், இனமுள்ள பொருள்களுக்கும் இனமில்லாப் பொருள்களுக்கும் அடை மொழிகளாய் வரும்.

இனமுள்ளவை	இனமில்லாதவை	அறுவகைப் பெயர்
பாற்குடம்	— உப்பளம் —	பொருள்
கொல்லை வரகு	— ஊர்மன்று(சபை) —	இடம்
ஐப்பசி விளக்கு	— நாளரும்பு —	காலம்
காய் மரம்	— இலைமரம் —	சினை
வெண்டாமரை	— செங்காவி —	குணம்
ஊதுகோல்	— தோய்தயிர் —	தொழில்

மேலே உள்ளவற்றுள், குடம், அளம் முதலிய பெயர்களைப் பால், உப்பு முதலிய பொருட் பெயர்களும், வரகு, மன்று முதலிய பெயர்களைக் கொல்லை, ஊர் முதலிய இடப் பெயர்களும், விளக்கு, அரும்பு முதலிய பெயர்களை

ஐப்பசி, நாள் முதலிய காலப் பெயர்களும், மரம் எனும் பெயரைக் காய், இலை முதலிய சினைப் பெயர்களும், தாமரை, காவி முதலிய பெயர்களை வெண்மை, செம்மை முதலிய குணப் பெயர்களும், கோல், தயிர் முதலிய பெயர்களை ஊது, தோய் முதலிய விகுதி குன்றிய தொழிற் பெயர்களும் அடுத்து வந்துள்ளன. இங்ஙனம் அடுத்து வரும் மொழி **அடைமொழி** எனப்படும். அடை மொழியினால் அடுக்கப்படுவது **அடைகொளி** எனப்படும். இவ்வாறு அறுவகைப் பெயரும் அடை மொழியாக வருதற்கு உரியன என்பது மேற் கண்டவற்றிலிருந்து தெரிகிறது.

இவற்றில் அளம் எனவே உப்பு என்பதும், மன்று எனவே ஊர் என்பதும், தயிர் எனவே தோய்தல் என்பதும் தாமே வந்து இயைகின்றன. உப்பிலா அளமும், ஊரில்லா மன்றும், தோய்தலில்லாத் தயிரும் இல்லை. எனவே, இவை இனமில்லன வென்பதுடன், அடையில்லாமலே அவ்வறு வகைப் பெயர்களையும் உணர்த்தும்.

இனமுள்ளவைகளை அடை கொடாது கூறினால் பொருள் விளங்காமல் பொதுமையில் நிற்கும். குடம் என்று மட்டும் கூறினால் அது நீர்க்குடம், எண்ணெய்க் குடம், நெய்க்குடம் எனப் பல வகையான குடங்களை உணர்த்தும். பால் எனும் அடை கொடுத்துப் பாற்குடம் என்று கூறினால்தான் அது குறிப்பிட்ட ஒன்றினைப் பிரித்தறிதற்குத் துணை செய்வதாயுளது. இவ்வாறே கோல் என்று மட்டும் கூறினால், அது, செங்கோல், உழக்கோல், ஊன்றுகோல், கைத்தடிக், கோல் எனப் பலவகைக் கோல்களை உணர்த்தி நிற்கும். ஊது எனும் அடை கொடுத்து ஊதுகோல் என்று கூறினால்தான் அது குறிப்

பிட்ட ஒன்றினைப் பிரித்தறிதற்குத் துணை செய்யும். எனவே, இவ்வாறுள்ள அடைமொழி **இனமுள்ள அடைமொழி** என வழங்கப்படுகிறது. தோய் தயிர், உப்பு அளம் முதலிய இனமில்லாதவற்றின் அடைமொழி **இயற்கையடை மொழி** எனக் கூறப்படுகிறது.

7. பொருள்கோள் *

பொருள்கோள் என்பது, செய்யுளில் சொற்களின் பொருள் கொள்ளும் முறைமை எனப் பொருள் படும். இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நால்வகைச் சொற்களாலும் எழுவாய் பயனிலைகள் முன் பின்னாக வைத்துச் செய்யப்படும் செய்யுட்களைப் பொருள் கொள்ளும் வகையில் அமைக்கும் முறையே **பொருள்கோள்** ஆகும்.

இது, யாற்று நீர்ப் பொருள்கோள், மொழி மாற்றுப் பொருள்கோள், நிரல் நிறைப் பொருள்கோள், பூட்டுவிற் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள், அளை மறி பாப்புப் பொருள்கோள், கொண்டு கூட்டுப் பொருள் கோள், அடிமறி மாற்றுப் பொருள்கோள் என **எட்டு** வகைப்படும்.

1. யாற்று நீர்ப் பொருள்கோள் :

'சொல்லரு சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருஇருந்(து) ஈன்று மேல்அலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே'

இப்பாட்டினுள், **சொல்** எனும் எழுவாயினை முதல் எடுத்து, அதன் தொழிலாகிய **இருந்து, ஈன்று, நிறுவி, இறைஞ்சி** எனும் வினை எச்சங்கள் ஒன்றை ஒன்று கொள்ளு

மாறு இடையிலே முறையாக வைத்து, **காய்த்த** என்னும் பயனிலையை இறுதியில் கூட்டி முடித்தமையால் இது யாற்று நீர் ஒழுக்குக்கு எடுத்துக் காட்டாயிற்று. திரும்பாமல் ஒரே முகமாக ஓடுகின்ற யாற்று நீரின் ஓட்டம் போல, சொற்கள் முன் பின்னாக மாறாமல் நேராகவே பொருள் கொள்ள விருப்பதால் இது **யாற்று நீர்ப் பொருள்கோள்** எனப்படும்.

2. மொழிமாற்றுப் பொருள்கோள் :

'சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்குநிலை என்ப
கானக நாடன் சுனை.'

இப்பாட்டில், **ஆழ** என்னும் பயனிலைக்குப் பொருத்தமான **அம்மி** எனும் மொழியினை மிதப்ப என்னும் பயனிலைக்கும், **மிதப்ப** எனும் பயனிலைக்குப் பொருத்தமான **சுரை** என்னும் மொழியினை ஆழ என்னும் பயனிலைக்குமாக மாற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

இரண்டாவது வரியில் **நீத்து** எனும் பயனிலைக்குப் பொருத்தமான **முயல்** எனும் மொழியினை நிலை என்னும் பயனிலைக்கும், **நிலை** எனும் பயனிலைக்குப் பொருத்தமான **யானை** என்னும் மொழியினை **நீத்து** எனும் பயனிலைக்குமாக மாற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

அம்மி ஆழ, சுரை மிதப்ப, முயற்கு நீத்து, யானைக்கு நிலை என மொழிகளை மாற்றியமைத்துப் பொருள் கொள்ள வேண்டும்.

இவ்வாறு, செய்யுளில் கூறப்படும் பொருளுக்குப் பொருத்தமான மொழிகளை ஓரே அடிக்குள் முறை மாற்றி

வழங்குதல் மொழிமாற்றுப் பொருள்கோள் எனப்படும். (ஓரடியில் இரண்டு சொல்லும் இரண்டு பயனிலைகளும் வந்தாலல்லாமல் மொழிமாற்ற இயலாது.)

3. நிரல்நிறைப் பொருள்கோள்:

i. 'கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி
மதிபவள முத்தம் முகம்வாய் முறுவல்
பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச் சாயல்
வடிவினளே வஞ்சி மகள்.'

இப்பாட்டில், முதல் மூன்று வரிகளும் பெயர்ச் சொற்களும் பெயர்ப் பயனிலைகளுமாய் நின்ற பெயர் முறை நிரல் நிறைப் பொருள்கோளாகும்.

இதில் முதல் வரியில், கொடி, குவளை, கொட்டை என்பன நுசுப்பு (இடுப்பு), கண், மேனி (உடல்) முதலியவற்றுக்கும், இரண்டாவது வரியில், மதி (சந்திரன்), பவளம், முத்து என்பன முகம், வாய், முறுவல் (பற்கள்) முதலியவற்றுக்கும், மூன்றாவது வரியில் பிடி (பெண்யானை), பிணை (பெண் மான்), மஞ்ஞை (மயில்) என்பன நடை, நோக்கு (பார்வை), சாயல் (தோற்றம்) முதலியவற்றுக்கும் நிரல்நிறையாக உவமை கூறப்பட்டிருத்தல் காண்க.

ii. 'மாசு போகவும் காய்பசி நீங்கவும்
கலிபுனல் மூழ்கி அடிசில் கைதொட்டு'

இதில் மாசுபோக – கலிபுனல் மூழ்குதலும், காய்பசி நீங்க அடிசில் (சோறு) கைதொடுதலும் (உண்ணல்) நிரல் நிறையாக வந்துள்ளது காண்க.

இதில் முடிவனவும் முடிப்பனவுமாகிய வினைச் சொற்கள் வேறு வேறு நிற்றலால் வினை முறை நிரல்நிறைப் பொருள்கோளாகும்.

iii. 'காதுசேர் தாழ்குழையாய் கன்னித துறைச்சேர்ப்ப!
போதுசேர் தார்மார்ப! போர்ச்செழிய!—நீதியால்
மண்அமிழ்தம் மங்கையர்தோள் மாற்றுரை ஏற்றார்க்கு
நண்ணிய வாய பொருள்'

இதில், கா, து, சேர், தாழ், குழை, ஆய் என்னும் ஆறும் முன்னிலை ஏவல் சொற்கள். இவற்றை, கா மண் (நாட்டை நீ நன்கு ஆட்சி செய்), து அமிழ்தம் (அமிழ்தத்தை நீ உண்), சேர் மங்கையர் தோள், தாழ் மாற்றுரை (பகைவரை), குழை (இரங்கு) ஏற்றார்க்கு, ஆய் (ஆராய்ந்துபடி) நண்மையான இம்மை மறுமைக்கான அறப்பொருள்களை, எனக் கூட்டி நிரல்நிறையாகப் பொருள் கொள்ளுதல் வேண்டும். இது, முடிவனவாகிய பெயரும் முடிப்பனவாகிய வினையும் வேறு வேறு நிரல்பட நிற்றலால், பெயர் வினை முறை நிரல் நிறைப் பொருள்கோள் எனப்படும்.

'ஆடவர்கள் எவ்வாறு அகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமும் ஊரகமும் பஞ்சரமா — நீடியமால்
நின்றான் இருந்தான் கிடந்தான் இதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு'

இதில், நெடுமால் வெஃகாவிற் கிடந்தான், பாடகத்தில் இருந்தான், ஊரகத்தில் நின்றான் என மாற்றிக் கூட்டிப் பொருள் உணர்க. இவ்வாறு பெயர்ச் சொற்களையும் வினைப் பயனிலைகளையும் மாற்றிக் கூட்டிப் பொருள் கூறுமாறு அமைத்தல் எதிர் நிரல் நிறைப் பொருள்கோள் ஆகும்.

4. பூட்டுவிற் பொருள்கோள் :

'திறந்திடுமின் தீயவை பிற்காண்டு மாதர்
இறந்து படின்பெரிதாம் ஏதம் — உறந்தையர்கோன்
தண்ணார மார்பில் தமிழ்நர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு.'

இச்செய்யுளில் முதல் வரியில் முதலில் உள்ள சொல் '**திறந்திடுமின்**' என்பது. கடைசி வரியில் கடைசியில் உள்ள சொல் '**கதவு**' என்பது. இவ்விரண்டு சொற்களும் தம்முள் பொருள் நோக்க முடையவையாகிக் கதவு திறந்திடு மின் என வருதல் காண்க. இது போல், செய்யுள் முதலி னும் ஈற்றினும் நிற்கும் மொழிகள் தம்முள் பொருள் நோக் குடன் அமைதல் **பூட்டுவிற் பொருள்கோள்** எனப்படும்.

5. தாப்பிசைப் பொருள்கோள் :

'உண்ணாமை யுள்ள துயிர்நிலை **ஊன்**உண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு'

இச் செய்யுளில் **ஊன்** என இடையிலே நின்ற சொல், ஊன் உண்ணாமையுள்ளதென முதலிலும், ஊன் உண்ண வெனப் பின்னரும் சென்றடைந்திருப்பது காண்க.

தாப்பிசை என்பது ஊஞ்சல் போல, இடை நின்ற சொல் இரு மருங்கும் சென்று ஓட்டுவதாகும். (தாப்பு — ஊஞ்சல்).

இவ்வாறு செய்யுளிடையில் நின்ற சொல் முதலிலும் இறுதியிலும் சென்று பொருளைக் கூறுவது **தாப்பிசைப் பொருள்கோள்** எனப்படும்.

6. அளைமறிபாப்புப் பொருள்கோள் :

'தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து
தண்டூன்றித் தளர்வார் தாமும்

சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து
  நாற்கதியில் சுழல்வார் தாமும்
மூழ்ந்த பிணிநலிய முன்செய்த
  வினையென்றே முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து
  நெறி முன்னி முயலா தாரே'

இச்செய்யுளில், வாழ்ந்த பொழுதினே வான் எய்தும் நெறி முன்னி முயலாதார் என்ற ஈற்றடி, மூழ்ந்த......முனிவார், சூழ்ந்த...சுழல்வார், தாழ்ந்த...தளர்வார் எனத் தலைகீழாக இடையிலும் முதலிலும் சென்றடைந்தவாறு காண்க.

அளை மறி பாப்பு என்பது புற்றிலே தலைவைத்துமடங்கிச் சுருண்டு கிடக்கும் பாம்பு எனப் பொருள்படும். (அளை = புற்று).

இச்செய்யுளில், கடைசியடியில் ஈற்றில் நின்ற சொல் அதன் இடையிலும் முதலிலும் சென்று பொருள் கொள்ளுதல் அளை மறி பாப்புப் பொருள்கோளாகும்.

7. கொண்டு கூட்டுப் பொருள்கோள் :

'தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி
அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார் வரின்'

இச்செய்யுளில், வங்கத்துச் சென்றார் வரின், அஞ்சனம் (மை) போன்ற பைங்கூந்தலை உடையவளது மாமேனியின் மேல் தெங்கங்காய் (தேங்காய்) போலத் திரண்டுருண்ட கோழி வெண் முட்டையை உடைத்தன்ன பசலை தணிவாகும் எனக் கொண்டு கூட்டி ஆற்றொழுக்குப் போலாக்குக.

இவ்வாறு செய்யுள் அடிகள் பலவற்றிலும் விரவிக் கிடக்கும் சொற்களை எடுத்துப் பொருளுக்கு ஏற்ற இடத்தில் வரிசைப்படக் கூட்டிப் பொருள் கொள்ளுவது **கொண்டு கூட்டுப் பொருள்கோள் எனப்படும்.**

8. அடி மறி மாற்றுப் பொருள்கோள் :

i. 'நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத்தாம் துய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும்
மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்'

இச்செய்யுளில், 'கொடுத்துத்தான் துய்ப்பினும் ஈண்டுங் கால் ஈண்டும்; விடுக்கும் வினையுலந்தக்கால்; மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்; (இஃதுணரார்) நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்' என அடிகளைப் பொருளுக் கேற்றவாறு எடுத்துக் கூட்டிக் கொள்ளவேண்டும்.

ii. 'மாறுக் காதலர் மலைமறந் தனரே
ஆறுக் கண்பனி வரலா னவே
வேறு மென்றோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழியான் வாழு மாறே'

இச்செய்யுளில், ஏதேனும் ஓர் அடியை எடுத்து, ஏதேனும் ஓர் இடத்தில் கூட்டிப்பாடினாலும், பொருளும் ஓசையும் வேறுபடாதிருத்தலைக் காண்க.

இவ்வாறு பொருளுக்கு ஏற்ற இடத்தில் எடுத்துக் கூட்டும் அடியினையுடையதும், ஏதேனும் ஓர் அடியை எடுத்து, அச்செய்யுளின் முதல் இடை கடை முதலிய ஏதேனும் ஓரிடத்தில் கூட்டினாலும் பொருளுடன் ஓசை மாட்சியும் பொருட்சிறப்பும் வேறுபடாத அடியினை

யுடையதும் ஆகிய பொருள்கோளே **அடிமறி மாற்றுப் பொருள்கோள்** எனப்படும். (அடிமறி=அடிமடங்குதல்).

பயிற்சி

1. செய்யுள் விகாரங்கள் எத்தனை வகைப்படும்?
2. திரிதல் விகாரத்தில் அடங்கக் கூடிய செய்யுள் விகாரங்கள் எவை?
3. வலித்தல் விகாரம் என்பது யாது?
4. விரித்தல் விகாரம்—விளக்குக.
5. பகாப்பதத்தில் மட்டும் அமையும் விகாரங்கள் எவை?
6. செய்யுள் விகாரங்கள் எத்தனை? விகாரம் எனக் கூறப்படுவதேன்?
7. பெயரும் வினையும் சொற்றொடரில் எவ்வெவ்வாறு முடியும்?
8. எழுவாய் எவ்வெப்பயனிலை கொண்டு முடியும்?
9. நான்காம், ஆறும் வேற்றுமை யுருபுகள் சொற்றொடரில் கொண்டு முடிதல் எங்ஙனம்?
10. வினையொடு பொருந்தும் பெயர்கள் என்று கூறப் பட்டிருப்பதன் கருத்து யாது?
11. வினைஎச்சம் முற்றுவினைக்குப் பின் நின்று முடிதல்போல், பெயரெச்சம் ஏன் நின்று முடிவதில்லை?
12. இடைப்பிறவரல் என்பது யாது?
13. வினாவகை எத்தனை? அவற்றின் பெயர்களைக் கூறுக.
14. விடை வகைகளைப் பெயர்களுடன் இந்நூலில் இல்லாத சில மேற்கோள்களைக் காட்டி விளக்குக.

15. உடன்பாட்டு விடை, எதிர்மறை விடை—இவற்றின் வேறு பெயர்கள் யாவை?

16. அடைமொழி என்றால் என்ன?

17. அடைமொழி கொள்வதில் இனமுள்ளவை, இனமில்லாதவை என்பவை யாவை?

18. அடை கொளி என்றால் என்ன?

19. இயற்கை அடைமொழி, இனமுள்ள அடைமொழி—இவற்றின் வேறுபாடு யாது?

20. யாற்று நீர்ப் பொருள்கோள் என்பது யாது?

21. நிரல் நிறைப் பொருள்கோள்—விளக்கந் தருக.

22. தாப்பிசை என்பதன் பொருள் யாது?

23. அளைமறி பாப்புப் பொருள்கோள் என்பதன் பொருள் யாது?

24. ‘உடுத்ததுவும் மேய்த்ததுவும் உம்பர்கோன் தன்னால்
எடுத்ததுவும் பள்ளிக்கு இயையப்—படுத்ததுவும்
அந்நாள் எறிந்ததுவும் அன்பின் இரந்ததுவும்
பொன் ஆவரை இலைகாய் பூ’—

இச்செய்யுள் எப்பொருள்கோளின்பாற் படும்?

25. ‘அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலில் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலும் குற்றமே யாம்.’

இந்தச் செய்யுள் அடிமறிமாற்றுப் பொருள்கோள் என்பதைத் தக்கவாறு விளக்கி மெய்ப்பிக்க.

4. புணர்ச்சி

1. குற்றுகரப் புணர்ச்சி (விரிவாக)

சிறப்பு விதிகள்

குற்றியலுகரம் :

வல்லினத்தின்மீது ஊர்ந்த உகரம், தனிக் குறிலைச் சார்ந்து வாராமல், பிறசொற்களின் ஈற்றில் நின்றால், தன் ஒரு மாத்திரை அளவில் குறைந்து ஒலிக்கும். அது **குற்றுகரம்** அல்லது **குற்றியலுகரம்** எனப்படும்.

1. சுக்கு — வன்றொடர்க் குற்றியலுகரம்
2. கெஞ்சு — மென்றொடர்க் குற்றியலுகரம்
3. மார்பு — இடைத் தொடர்க் குற்றியலுகரம்
4. காடு — நெடில் தொடர்க் குற்றியலுகரம்
5. அஃது — ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்
6. கயிறு — உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்

ஈற்றுக்கு அயலெழுத்தை நோக்கக் குற்றியலுகரம் மேற்கண்டவாறு ஆறு வகைப்படும்.

குற்றியலுகரம், உயிரை முதலாகவுடைய வருமொழியுடன் புணர்கையில், தான் ஏறியுள்ள மெய்யை விட்டு ஓடிப் பின் பொதுவிதி பெற்றுப் புணரும் என்பதையும், வருமொழி முதலில் யகரம் வரின், தான் ஏறியுள்ள மெய்யை விட்டு ஓடாமல் இகரமாகத் திரியும் என்பதையும் முன் வகுப்புக்களில் விளக்கமாகப் படித்திருக்கிறீர்கள்.

குற்றியலுகரம்-சிறப்பு விதி :

இங்கு, அதே குற்றியலுகரம் சிறப்பு விதியாற் புணரும் வகைகளைப் படிப்போம் :

சுட்டு + தின் = சுட்டுத்தின் —வன்றொடர் —அல்வழி
கட்டு + கொடு = கட்டுக்கொடு – வன்றொடர் – வேற்றுமை

அறுவகைக் குற்றியலுகரத் தொடர்களில், வன்றொடர்க் குற்றியலுகரத்திற்கு முன் வல்லினம் வரின் அல்வழியாயினும் வேற்றுமையாயினும் மிகும்.

ஆனால், வன்றொடர்க் குற்றியலுகரம் ஒழிந்த மற்றை ஐந்து தொடர்களும் இவ்வாறு புணர்வதில்லை.

(1) உண்டு + செல் = உண்டு செல்—மென்றொடர்
செய்து + பார் = செய்துபார்—இடைத் தொடர்
விறகு + பெரிது = விறகு பெரிது—உயிர்த்தொடர்
கூறு + போடு = கூறுபோடு—நெடிற்றொடர்
கஃசு + கடுகு = கஃசு கடுகு—ஆய்தத்தொடர்
(கஃசு = கால்பலம்)

என, வன்றொடர்க் குற்றியலுகரம் ஒழிந்த ஏனைய ஐந்து குற்றியலுகரங்களுக்கு முன் வந்த வல்லினம் அல்வழியில் இயல்பாயிற்று.

(2) அஃது + கொடு = அஃது கொடு—ஆய்தத் தொடர்
மிளகு + தொகையல் = மிளகு தொகையல்—உயிர்த் தொடர்
காசு + தேடு = காசு தேடு—நெடிற்றொடர்
மார்பு + குடைச்சல் = மார்பு குடைச்சல்—இடைத் தொடர்

ஆக, இடைத் தொடர், ஆய்தத் தொடர், உயிர்த் தொடர், நெடிற்றொடர் முதலிய நான்கு தொடர்க் குற்றியலுகரங்களுக்கு முன்வரும் வல்லினம், (அல்வழியில் இயல்

பாகியதைப் போலவே) வேற்றுமையிலும் இயல்பாயிற்று எனவே, இடைத் தொடர், ஆய்தத் தொடர், உயிர்த் தொடர், நெடிற்றொடர்க் குற்றியலுகரங்கள் வல்லினத் துடன் புணர்கையில் அல்வழியிலும் வேற்றுமையிலும் (மிகாமல்) இயல்பாகும்.

(3) பஞ்சு + கூடை = பஞ்சுக்கூடை
குரங்கு + கால் = குரங்குக் கால்
பாம்பு + புற்று = பாம்புப் புற்று

என, மென்றொடர்க் குற்றியலுகரத்திற்கு முன் வரும் வல்லினம் (அல்வழியில் இயல்பானதைப் போல) வேற்றுமை யில் இயல்பாகாமல் மிகுந்துவிடும். எனவே, மென் றொடர்க் குற்றியலுகரம் வல்லினத்துடன் புணர்கையில் வேற்றுமையில் மிகும்; அல்வழியில் மிகாது.

டு, று ஈற்றுக் குற்றுகரங்கட்குச் சிறப்பு விதி:

(1) அசடு + பையன் = அசட்டுப் பையன்
முரடு + ஆடு = முரட்டாடு
துறடு + கோல் = துறட்டுக் கோல்
வயிறு + கடுப்பு = வயிற்றுக் கடுப்பு
கயிறு + ஏணி = கயிற்றேணி
களிறு + வால் = களிற்றுவால்

இவ்வாறு வேற்றுமையில் டு, று ஈறுபெற்ற உயிர்த் தொடர்க் குற்றியலுகரங்களில் ட, ற ஒற்றுக்கள் இரட்டித்து வரும்.

(2) ஆடு + கால் = ஆட்டுக்கால்
யாறு + நீர் = யாற்றுநீர்
காடு + மரம் = காட்டுமரம்
சோறு + உருண்டை = சோற்றுருண்டை

இவ்வாறு வேற்றுமைச் சந்தியில் டு, று ஈறுபெற்ற நெடிற்றொடர்க் குற்றியலுகரங்களில் ட, ற ஒற்றுக்கள் இரட்டித்து வரும்.

(3) நாடு + கிழவோன் = நாடு கிழவோன்
சோறு + போடு = சோறு போடு
காடு + அழித்தான் = காடழித்தான்
மிடறு + அணியல் = மிடறணியல்
சுவடு + அடையாளம் = சுவடடையாளம்

இவ்வாறு வேற்றுமைச் சந்தியில், டு, று ஈறுபெற்ற நெடிற்றொடர், உயிர்த் தொடர்க் குற்றியலுகரங்களில் ட, ற ஒற்றுக்கள் சிறுபான்மை இரட்டாமலும் வரும்.

(4) காடு + அரண் = காட்டரண்
களிறு + யானை = களிற்றியானை

இவ்வாறு அல்வழியில் டு, று ஈறுபெற்ற நெடிற்றொடர், உயிர்த் தொடர்க் குற்றியலுகரங்களில் ட, ற ஒற்றுக்கள் இரட்டித்து வரும்.

எனவே, நெடில் தொடர், உயிர்த் தொடர்க் குற்றிய லுகரங்களில் உள்ள ட, ற ஒற்றுக்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் பெரும்பாலும் இரட்டித்து நிற்கும். சிறு பான்மை இரட்டாமலும் இருக்கும். அல்வழிப் புணர்ச்சியில் சிறுபான்மை இரட்டித்தும் நிற்கும். மேற்கண்டவாறு இவை இரட்டிக்கும்போது அவற்றின் முன் வல்லினம் வரின்மிகும்.

மென்றொடர்க் குற்றியலுகரங்கள் சிலவற்றுக்குச் சிறப்பு விதி:

(1) மருந்து + பை = மருத்துப் பை
கரும்பு + நாண் = கருப்பு நாண்
கரும்பு + வில் = கருப்புவில்

இரும்பு	+	உலக்கை	=	இருப்புலக்கை
சிலம்பு	+	அதிகாரம்	=	சிலப்பதிகாரம்
நஞ்சு	+	அரவம்	=	நச்சரவம்
கன்று	+	ஆ	=	கற்று
குரங்கு	+	கால்	=	குரக்குக்கால்

இவ்வாறு வேற்றுமைப் புணர்ச்சியில் சில மென்றொடர்க் குற்றியலுகரங்கள் வன்றொடர்க் குற்றியலுகரங்களாக மாறிவிடும்.

(2) குரங்கு + மனம் = குரக்குமனம்
என்பு + உடல் = எற்புடல்

என அல்வழியிலும் மென்றொடர்க் குற்றியலுகரம் சிறுபான்மை வன்றொடராகிவிடும்.

(3) வண்டு + கால் = வண்டுக் கால்
பந்து + திரட்சி = பந்துத்திரட்சி
ஞெண்டு + கால் = ஞெண்டுக் கால்

என வேற்றுமைப் புணர்ச்சியில் மென்றொடர்க் குற்றியலுகரங்கள் வன்றொடராக மாறாமலிருப்பனவே பலவாகும்.

(4) குரங்கு + குட்டி = குரங்குக்குட்டி
குரக்குக்குட்டி

பாம்பு + தோல் = பாம்புத் தோல்
பாப்புத் தோல்

இரும்பு + தூண் = இரும்புத் தூண்
இருப்புத் தூண்

இவ்வாறு சில மென்றொடர்க் குற்றியலுகரங்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் விகற்பித்தும் வரும்.

(5) அன்பு + தளை = அன்புத் தளை, அற்புத் தளை (அன்பாலாகிய தளை, அன்பாகிய தளை) என இவ்வாறு சில மென்றொடர்க் குற்றியலுகரங்கள் அல்வழி, வேற்றுமையாகிய இரண்டு புணர்ச்சிகளிலும் விகற்பித்து வந்துள்ளன.

எனவே, வல்லினம் வந்து புணரும் போது சில மென்றொடர்க் குற்றியலுகரங்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் தம் இன வன்றொடர்க் குற்றியலுகர மொழிகளாகத் திரிந்து நிற்கும்; அல்வழிப் புணர்ச்சியிலும் சிறுபான்மை இவ்வாறு திரியும். சில அல்வழி, வேற்றுமை ஆகிய இருவழிப் புணர்ச்சியிலும் விகற்பித்து வரும். அவற்றின் முன் வல்லினம் மிகும்.

ஐகாரம் பெறும் மென்றொடர்க் குற்றியலுகரங்கள் :

(1) பண்டு + காலம் = பண்டைக் காலம்
இன்று + தினம் = இன்றைத் தினம்

(2) அன்று + கூலி = அற்றைக் கூலி
இன்று + நாள் = இற்றை நாள்

(3) ஒன்று = ஒற்றை
இரண்டு = இரட்டை

(4) நேற்று = நேற்றை
வெட்டு = வெட்டை

(5) ஓராண்டு = ஓராட்டை
ஈராண்டு = ஈராட்டை

இவ்வாறு (1) சில மென்றொடர்க் குற்றியலுகரங்கள் ஐகாரச் சாரியை இறுதியில் பெற்று வரும். (2) சில மென்றொடர்க் குற்றியலுகரங்கள் ஐகாரச் சாரியை இறுதியில் பெறுவதுடன் ஈற்றுக்கயல் வல்லினமாக மாறப் பெற்றும்

வரும். (3) வருமொழிப் புணர்ச்சியின்றியே சில மென்றொடர்களும், (4) சில வன்றொடர்களும் ஒரு மொழியாய் நின்று ஈற்றில் ஐகாரம் பெற்று வருதலும் உண்டு. (5) தொடர் மொழியாய் நின்று மென்றொடர்க் குற்றிய லுகரம் ஈற்றில் ஐகாரம் பெற்று நிற்றலும் உண்டு.

அங்கு, இங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, யாங்கு, ஆண்டு, ஈண்டு, யாண்டு—எனும் மென்றொடர்க் குற்றிய லுகரச் சொற்கள் இடப் பொருளுணர்த்தும் (ஏழாம் வேற்றுமை) இடைச் சொற்களாகிப் புணர்கையில், இவற்றின் முன் வரும் வல்லினம் மிகும்.

அன்று, இன்று, என்று, பண்டு முதலியவை காலப் பொருளுணர்த்தும் இடைச் சொற்களாகிப் புணர்கையில், இவற்றின் முன்வரும் வல்லினம் மிகாமல் இயல்பாகும்.

திசைப் பெயர்களுக்குச் சிறப்பு விதி :

(1) வடக்கு + கிழக்கு = வடகிழக்கு
வடக்கு + மேற்கு = வடமேற்கு
வடக்கு + திசை = வடதிசை
வடக்கு + மலை = வடமலை
வடக்கு + வேங்கடம் = வடவேங்கடம்

(2) தெற்கு + கிழக்கு = தென் கிழக்கு
தெற்கு + மேற்கு = தென் மேற்கு
தெற்கு + குமரி = தென்குமரி
தெற்கு + மலை = தென் மலை

(3) மேற்கு + திசை = மேற்றிசை
மேற்கு + நாடு = மேனாடு
மேற்கு + ஊர் = மேலூர்

(4) குடக்கு + திசை = குடதிசை
குடக்கு + நாடு = குடநாடு
குணக்கு + கடல் = குணகடல்
குணக்கு + திசை = குணதிசை

(5) கிழக்கு + திசை = கீழ்திசை, கீழ்த்திசை, கீழத்திசை
„ + கரை = கீழ்கரை, கீழ்க்கரை, கீழக்கரை
„ + காற்று = கீழ் காற்று, கீழ்க்காற்று, கீழைக்காற்று
„ + நாடு = கீழ் நாடு, கீழ நாடு, கீழைநாடு
„ + சேரி = கீழ் சேரி, கீழ்ச் சேரி, கீழைச்சேரி.

இவற்றுள் (1) **வடக்கு** என்னும் நிலைமொழி, ஈற்று உயிர் மெய்யும் அதனை அடுத்து நின்ற ககர ஒற்றும் கெட, வருமொழியுடன் புணர்ந்தது.

(2) **தெற்கு** என்னும் நிலைமொழி, ஈற்று உயிர்மெய் கெட, அதனையடுத்து நின்ற றகர ஒற்று னகர ஒற்றாகத் திரிந்து வருமொழியுடன் புணர்ந்தது.

(3) **மேற்கு** என்னும் நிலைமொழி, ஈற்று உயிர்மெய் கெட, அதனை யடுத்துநின்ற றகர ஒற்று லகர ஒற்றாகத் திரிந்து, பொது விதி பெற்று வருமொழியுடன் புணர்ந்தது.

மேற்கு+திசை=மேலைத்திசை என, ஈற்று உயிர்மெய் கெட்டு, றகர ஒற்று லகர ஒற்றாகி, அகரம் இயைந்து பொது விதி பெற்று வருமொழியுடன் புணர்ந்தது.

(4) **குடக்கு, குணக்கு** என்னும் நிலைமொழிகள், ஈற்று உயிர் மெய்யும், அதனையடுத்து நின்ற ககர ஒற்றும் கெட, வருமொழியுடன் புணர்ந்தன.

(5) **கிழக்கு** என்னும் நிலைமொழி, ஈற்று உயிர்மெய்யும், அதனையடுத்து நின்ற ககர ஒற்றும், அதனையடுத்துள்ள உயிர் மெய்யில் அகரமும் கெட கிழ என்றாகி, முதல் நீண்டு கீழ என்றாகி, வருமொழியுடன் புணர்ந்தது. இப்புணர்ச்சியில் வல்லினம் மிகுதலும் இயல்பாதலும் உண்டு.

(கிழக்கு+கரை=கீழக்கரை என, ஈற்று உயிர் மெய்யும் அதனையடுத்த ககர ஒற்றும் கெட, முதல் நீண்டு பொதுவிதி பெற்று வருமொழியுடன் புணர்ந்தது காண்க).

கீழைச்சேரி, மேலைச்சேரி என ஐகாரம் பெற்றுப் புணர்தலும் உண்டு. வடக்கூர், தெற்கூர், வடக்கு மலை, தெற்குமலை, தெற்கு வடக்கு—என்றெல்லாம் விகாரமின்றிப் பொது விதி பெற்றுப் புணர்தலும் உண்டு.

இவற்றுள், வட கிழக்கு என்பது உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. வடதிசை என்பது வடக்காகிய திசை என விரிந்து பண்புத் தொகையாகும். வடமலை என்பது வடக்கின்கண்மலை என விரிந்து ஏழாம் வேற்றுமைத் தொகையாகிறது. கீழ் மேல் தென் வடல் என்பது உம்மைத் தொகையாகும்.

தெங்கு என்பதற்குச் சிறப்பு விதி:

தெங்கு+காய்=தேங்காய்—தெங்கு என்னும் மென்றொடர்க் குற்றியலுகர மொழியின் முன் காய் என்னும் சொல் வந்து புணரின் (வேற்றுமைப் புணர்ச்சியில்), நிலைமொழியின் முதல் நீண்டு தேங்கு என்றாகி, ஈற்றில் உள்ள

உயிர்மெய்யாகிய கு கெட்டு, தேங் என்றாகி, காயுடன் புணர்ந்து தேங்காய் என்றாகிறது. இது தெங்கங்காய் என வருதலும் உண்டு.

2, தேன், அகம் : இவை புணரும் முறை

தேன் என்பதற்குச் சிறப்பு விதி :

(1) தேன் + சுவை = தேன் சுவை
தேன் + மணம் = தேன் மணம்
தேன் + யாறு = தேன் யாறு
} வேற்றுமை

(2) தேன் + பெரிது = தேன் பெரிது
தேன் + மலிவு = தேன் மலிவு
தேன் + யாது = தேன் யாது
} அல்வழி

தேன் எனும் சொல் வேற்றுமையிலும் அல்வழியிலும் வல்லினம், மெல்லினம், இடையினமாகிய மூவின மெய்களுக்கும் முன் இயல்பாயிற்று.

(3) i. தேன் + குடம் = தேன்குடம், தேக்குடம், தேங்குடம்.

ii. தேன் + குழம்பு = தேன்குழம்பு, தேக்குழம்பு, தேங்குழம்பு.

என, தேன் எனும் மொழி வல்லெழுத்துடன் புணர்கையில், i. வேற்றுமையிலும், ii. அல்வழியிலும் இயல்பாகப் புணர்தலும், னகர மெய் கெட்டு, வரு மொழியின் முதலெழுத்தாவது, அதற்கு இனமான மெல்லெழுத்தாவது மிகுதலும் உண்டு.

(4) தேன் + மொழி = தேன்மொழி, தேமொழி— அல்வழி

தேன் + மலர் = தேன்மலர், தேமலர் — வேற்றுமை

தேன் என்னும் மொழிக்கு முன் மெல்லினம் வந்தால், தேன் என்பதிலுள்ள னகர மெய் கெட்டும் கெடாமலும் புணர்தல் உண்டு.

(5) தேன் + யாறு = தேன்யாறு—வேற்றுமை
தேன் + யாது = தேன்யாது—அல்வழி

தேன் எனும் மொழிக்கு முன் இடையினம் வந்தால், அல்வழி, வேற்றுமை ஆகிய இரண்டிலும் இயல்பாகும்.

அகம் என்பதற்குச் சிறப்பு விதி:

அகம் + செவி = அஞ்செவி
அகம் + கை = அங்கை

இவ்வாறு அகம் என்னும் இடப்பெயர் முன் செவி, கை எனும் சினைப் பெயர்கள் வந்து புணரின், (நிலைமொழியாகிய அகம் என்பதன்) ஈற்று மகரமெய், வருமொழி முதலிலுள்ள வன்மைக்கு இனமாகத் திரிந்து, **அகஞ் செவி, அகங்கை** என வரும்; இடையிலுள்ள ககர உயிர் மெய் கெட்டு, **அஞ்செவி, அங்கை** எனவும் புணரும்.

3. ணகர னகர ஈறு; லகர ளகர ஈறு;

ண—ன ஈறு ; வேற்றுமை :

(1) மண் + கலம் = மட்கலம்
பொன் + தட்டு = பொற்றட்டு

இவ்வாறு வேற்றுமையில், **ணகர னகர ஈறுகள், வல்லினம் வந்து புணர்கையில் டகரமாகவும் றகரமாகவும் திரியும்.**

(2) மண் + மேடு = மண்மேடு
பொன் + மணி = பொன்மணி

இவ்வாறு வேற்றுமையில், ணகர னகர ஈறுகள் மெல்லினம் வந்து புணர்கையில் இயல்பாயின.

(3) மண் + வீடு = மண்வீடு
பொன் + வளையல் = பொன்வளையல்

இவ்வாறு வேற்றுமையில், ணகர னகர ஈறுகள், இடையினம் வந்து புணர்கையில் இயல்பாயின.

(1) மண் + சரிந்தது = மண் சரிந்தது.
பொன் + பெரிது = பொன் பெரிது.
(2) மண் + மறைந்தது = மண் மறைந்தது.
பொன் + மங்கியது = பொன் மங்கியது.
(3) மண் + வலிது = மண் வலிது.
பொன் + வலிது = பொன் வலிது.

இவ்வாறு அல்வழியில், ணகர னகர ஈறுகள், மூவின மெய்களும் வந்து புணர்கையில் இயல்பாயின. கண் + பொறி = கட்பொறி, பொன் + கோடு = பொற்கோடு எனப் பண்புத் தொகையிலும், பண் + சொல் = பட் சொல், பொன் + சுணங்கு = பொற் சுணங்கு என உவமைத் தொகையிலும் திரிதலும் உண்டு.

மண் + சுமந்தான் = மண் சுமந்தான், பொன் + கொடுத்தான் = பொன் கொடுத்தான் என இரண்டாம் வேற்றுமைத் தொகையிலும், விண் + பறந்தது = விண் பறந்தது, கான் + புகுந்தான் = கான் புகுந்தான் என ஏழாம் வேற்றுமைத் தொகையிலும், வருமொழி வினையாயின் திரியாமல் இயல்பாகும். மண் கூடை, புண்கை என இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையிலும் ஒவ்வோரிடத்தில் திரியாமல் இயல்பாகும்.

தனிக் குறிலைச் சாராமல் வரும் ணகர னகரங்கள் :

(1) i. அரண் + நன்மை = அரணன்மை
தூண் + நன்மை = தூணன்மை
பசும்பொன் + நன்மை = பசும்பொனன்மை
மான் + நன்மை = மானன்மை
ii. தூண் + நன்று = தூணன்று
அரண் + நன்று = அரணன்று
வான் + நன்று = வானன்று
செம்பொன் + நன்று = செம்பொனன்று

இவ்வாறு, (i) வேற்றுமையிலும், (ii) அல்வழியிலும் **ணகர னகர ஈறுகளின் முன்வந்த நகரம் முறையே ணகரமாகவும் னகரமாகவும் திரியும்.** இதற்கிணங்க, நிலை மொழியில் தனிக் குறிலைச் சாராமல் வந்த **ணகர னகர ஈறுகள் கெடும்.**

(2) i. பாண் + குடி = பாண்குடி
(பாண் = பாடுவதைத் தொழிலாக உடைய குலம்)
அமண் + பாடி = அமண்பாடி (அமண் = சமணர்)
உமண் + சேரி = உமண்சேரி
(உமண் = உப்பள வேலை செய்யும் குலம்)

ii. பரண் + கால் = பரண் கால்
கவண் + கல் = கவண் கல்

(i) குலம் பற்றியும் (ii) பரண், கவண் என்னும் இரு பெயர் பற்றியும் ஈற்றில் நின்ற ணகரம், வல்லினம் வந்து புணர்கையில் வேற்றுமையில் திரியாமல் இயல்பாகும். பாணக்குடி அமணப்பாடி, உமணச்சேரி என அகரச் சாரியை பெற்று வருதலும் உண்டு.

(3) எண் + கடிது = எட்கடிது
சாண் + கோல் = சாட்கோல்

என, எள்ளின் திரி சொல்லாகிய எண் எனும் பெயரி லும், நீட்டலளவைப் பெயராகிய சாண் எனும் பெயரிலும் ஈற்றில் நிற்கும் ணகரம், வல்லினம் வந்து புணர்கையில் அல் வழியிலும் வேற்றுமையிலும் டகரமாகத் திரியும். எண் கடிது, சாண் கோல் என இயல்பாக நிற்றலே பெரும் பான்மையாம்.

(4) எயின் + குடி = எயின் குடி, எயினக் குடி.
(எயின் = வேடர் குலம்.)
எயின் + தோட்டம் = எயின் தோட்டம், எயினத் தோட்டம்.

என னகர வீற்றுக் குலப் பெயர், வல்லினம் வந்து புணர்கையில் ஈறு திரியாமல் இயல்பாதலும், அகரச் சாரியை பெறுதலும் உண்டு.

எயின மரபு, எயின வாழ்வு என மற்றக் கணங்கள் வந்து புணர்கையில் அகரச் சாரியை பெறுதலும், எயினக் கன்னி, எயினப் பிள்ளை என அல்வழிச் சந்தியில் அகரச் சாரியை பெறுதலும் உண்டு.

(5) மீன்+செவி=மீன்செவி, மீற்செவி.

'மீன்' எனும் னகர வீற்றுச் சொல், வருமொழி முதலில் வல்லெழுத்து வந்து புணர்ந்தால், றகரத் தொடு விகற்பித்து நிற்கும். (விகற்பித்தல்=நிலைமொழி ஈறு ஒரு முறை இயல்பாயும் ஒருமுறை திரிந்தும் வருதல்).

தனிக்குறிலைச் சார்ந்து வரும் ணகர னகரங்கள் :

(1) i. மண் + தூண் = மட்டூண்
பொன் + தகடு = பொற்றகடு
ii. மண் + தீயது = மண்டீயது
பொன் + தீயது = பொன்றீயது

இவ்வாறு (i) வேற்றுமையிலும் (ii) அல்வழியிலும் தனிக்குறிலைச் சார்ந்துவரும் ணகர னகர ஈறுகளின் முன் வந்த தகரம், முறையே டகர மாகவும் றகரமாகவும் திரியும்.

(2) i. மண் + நன்மை = மண்ணன்மை
பொன் + நன்மை = பொன்னன்மை
ii. மண் + நன்று = மண்ணன்று
பொன் + நன்று = பொன்னன்று

இவ்வாறு (i) வேற்றுமையிலும், (ii) அல்வழியிலும் தனிக்குறிலைச் சார்ந்துவரும் ணகர னகர ஈறுகளின் முன் வந்த நகரம், முறையே ணகரமாகவும் னகரமாகவும் திரியும்.

(3) தன் + பகை = தன்பகை, தற்பகை
என் + பகை = என்பகை, எற்பகை

தன், என் எனும் விகாரச் சொற்களின் இறுதியிலுள்ள னகரம் வல்லினம் வந்து புணர்கையில், ஒருகால் திரிந்தும் ஒருகால் திரியாமலும் நிற்கும். ஆனால், நின் என்னும் விகார மொழியின் இறுதி னகரம் திரியாமல் இயல்பாகும்.

(4) தன்+கொண்டான், என்+சேர்ந்தான், நின்+புறங்காப்ப என்பன தற்கொண்டான், எற்சேர்ந்தான், நிற்புறங்காப்ப என்னும் இரண்டாம் வேற்றுமைத் தொகைகளில் திரிந்தே நிற்கும்.

தனிக் குறிலைச்சார்ந்த லகர ளகர ஈறுகள் :

(1) கல் + குறிது = கல்குறிது, கற்குறிது.
முள் + சிறிது = முள் சிறிது, முட்சிறிது
அல் + பகல் = அல் பகல், அற்பகல்
உள் + புறம் = உள்புறம், உட்புறம்

இவ்வாறு, **லகர ளகரங்கள் அல்வழியில் வல்லினம் வந்து புணர, உறழ்ந்து வந்தன.** (உறழ்தல்=ஒருகால் இயல்பாகியும் ஒருகால் திரிந்தும் வரும். உறழ்ச்சி யென்பது விகற்பம் என்றும் வழங்கப்படும்.)

(2) கல்+கடித்தான்=கற்கடித்தான்.
கள்+குடித்தான்=கட் குடித்தான்.

இவ்வாறு, தனிக் குற்றெழுத்தைச் சார்ந்த **ல, ளக்கள்** இரண்டாம் வேற்றுமைத் தொகையின் வருமொழி வினை யாய விடத்தும் திரிந்தே நிற்கும்.

(3) சொல் + மாரி = சொன்மாரி
முள் + முனை = முண் முனை } வேற்றுமை

சொல் + முற்றியது = சொன்முற்றியது
முள் + மிகுந்து = முண் மிகுந்தது } அல்வழி

இவ்வாறு, **வேற்றுமையிலும் அல்வழியிலும், லகர ளகர ஈறுகள், மெல்லினம் வந்து புணர, முறையே னகர ணகரங்களாகத் திரியும்.**

(4) பல் + வலிமை = பல் வலிமை
வாள் + வீரம் = வாள் வீரம் } வேற்றுமை

வில் + யாது = வில் யாது
கொள் + விளைந்தது = கொள் விளைந்தது } அல்வழி

இவ்வாறு, **வேற்றுமையிலும் அல்வழியிலும், லகர ளகர ஈறுகள், இடையினம் வந்து புணர இயல்பாகும்.**

(5) கல் + தீமை = கற்றீமை } வேற்றுமை
முள் + தீமை = முட்டீமை }
கல் + தீயது = கற்றீயது } அல்வழி
முள் + தீயது = முட்டீயது }

இவ்வாறு, வேற்றுமை அல்வழி இரண்டிலும், லகரத்தின் முன் வரும் தகரம் றகரமாகவும், ளகரத்தின் முன் வரும் தகரம் டகரமாகவும் திரியும்.

(6) கல் + தீது = கஃறீது
முள் + தீது = முஃடீது

இவ்வாறு, தனிக் குறிலைச் சார்ந்த லகர ளகர ஈறுகள் அல்வழியில், வருமொழி முதலில் தகரம் வந்து திரிந்த விடத்து ஆய்தமாகத் திரியும்.

தனிக் குறிலைச் சாராத லகர ளகர ஈறுகள் :

(1) பால் + குடம் = பாற்குடம்
அருள் + பெருமை = அருட்பெருமை

இவ்வாறு, லகர ளகரங்கள் வேற்றுமையில், வல்லினம் வந்து புணர, முறையே றகர டகரங்கள் ஆயின.

(2) அல்வழியில் பண்புத் தொகையில் வேல்+படை= வேற்படை, அருள்+செல்வம்=அருட் செல்வம் எனவும், உவமைத் தொகையில் வேல்+கண்=வேற்கண், வாள்+கண்=வாட் கண் எனவும் வல்லினம் வந்து புணர, லகரம் றகரமாகவும் ளகரம் டகரமாகவும் திரியும். உம்மைத் தொகையில், கால்+கை=கால் கை, பொருள்+புகழ்=பொருள் புகழ் எனவும், எழுவாய்த் தொடரில் குயில்+கரிது=குயில் கரிது, பொருள்+பெரிது=பொருள் பெரிது எனவும் இயல்பாகும். இரண்டாம் வேற்றுமைத் தொகையிலும்

மூன்றும் வேற்றுமைத் தொகையிலும் வருமொழி வினையாயவிடத்து இயல்பாகும்.

(3) வேல் + தீது = வேறீது } எழுவாய்த் தொடர்
வாள் + தீது = வாடீது

பயில் + தொகை = பயிறொகை } வினைத் தொகை
அருள் + தேவன் = அருடேவன்

கால் + தலை = காறலை } உம்மைத் தொகை
தாள் + தலை = தாடலை

உண்பல் + தமியேன் = உண்பறமியேன் } வினைமுற்றுத் தொடர்
வந்தாள் + தேவி = வந்தாடேவி

தோன்றல் + தொடர் = தோன்றறொடர் } விளித் தொடர்
வேள் + தீயாய் = வேடீயாய்

இவ்வாறு, தனிக் குறிலைச் சாராத லகர ளகரங்கள், தகரந் திரிந்த விடத்து அல்வழியில், எழுவாய்த் தொடரிலும், வினைத் தொகையிலும், உம்மைத் தொகையிலும், வினைமுற்றுத் தொடரிலும், விளித் தொடரிலும் கெடும்.

(4) வேல்+தொட்டான்=வேறொட்டான், தாள்+தொழுதான்=தாடொழுதான் என இரண்டாம் வேற்றுமைத் தொகையின் வருமொழி வினையாய விடத்தும், நிலைமொழி உயர்திணைப் பெயராயின், தோன்றல்+தாள்=தோன்றறாள், வேள்+தோள்=வேடோள் என வேற்றுமைத் தொகையிலும் தனிக்குறிலைச் சாராத லகர ளகரங்கள் தகரந்திரிந்துவிடத்துக் கெடும்.

(5) நிலைமொழி உயர்திணையாயிருந்து குரிசில்+தடிந்தான்=குரிசிற்றடிந்தான், அவள்+தொடர்ந்தான்=அவடொடர்ந்தான் என இரண்டாம் வேற்றுமைத் தொகையின் வருமொழி வினையாயிருப்பின் தனிக் குறிலைச்சாராத லகர ளகரங்கள் கெடாது திரியும்.

(6) வேல் + நன்மை = வேனன்மை
பொருள் + நன்மை = பொருணன்மை
வேல் + நீண்டது = வேனீண்டது
வாள் + நன்று = வாணன்று

தனிக் குற்றெழுத்தைச் சாராத லகர ளகரங்கள் வேற்றுமையிலும் அல்வழியிலும் வரும் ந திரிந்தவிடத்துக் கெடும்.

(7) வில்+நீண்டது=வின்னீண்டது, புள்+நீண்டது =புண்ணீண்டது, வில்+நீட்சி=வின்னீட்சி, புண்+நீட்சி =புண்ணீட்சி என அல்வழியிலும் வேற்றுமையிலும், லகரத்தின் முன்வரும் நகரம் னகரமாகவும், ளகரத்தின் முன் வரும் நகரம் ணகரமாகவும் திரியும்.

4. சாரியைகள்

(1) அ, அத்து, அம், அன், இன், அற்று :

செய்தது	— செய் + த் + அ + து —	அ	சாரியை
மரத்தில்	— மரம் + அத்து + இல் —	அத்து	,,
எதற்கு	— எது + அன் + கு —	அன்	,,
மன்றம்	— மன்று + அம் —	அம்	,,
வீட்டிற்கு	— வீடு + இன் + கு —	இன்	,,
இவற்றை	— இவ் + அற்று + ஐ —	அற்று	,,

பகுதியுடன் விகுதியும் இடை நிலைகளும், பெயர்ச் சொற்களோடு வேற்றுமை யுருபுகளும், ஒரு சொல்லும் மற்றொரு சொல்லும் இயைந்து புணரும்போது அவை களைச் சார்ந்து வரும் இடைச் சொற்கள் சாரியை எனப்படும்.

ஆலங்காய்—ஆல்+அம் + காய் என இரு சொற்கள் புணர்கையில் அம் எனும் ஒரு சாரியை வந்து இயைந்திருப்பதுபோல, காலினுக்கு=கால்+இன்+ உ +கு என்னும் சொல்லில் இன், உ எனும் இரண்டு சாரியைகள் வந்து இயைந்திருக்கின்றன. புளிக்கறி—புளி+கறி — என்னும் சொற்கள் புணர்கையில் சாரியை வேண்டப்படவில்லை.

இவ்வாறு ஒரு சொல் மற்றொரு சொல்லுடன் சார்ந்து இயைந்து வருகையில், சாரியைகள் ஒன்றும் பலவுமாக வருதலும் உண்டு; வராமலே தவிர்தலும் உண்டு.

(2) 'அத்து' சாரியை அடையும் மாறுதல் :

மக + அத்து + ஐ = மகத்தை
உலகம் + அத்து + இல் = உலகத்தில்

இவ்வாறு இயல்பினாலும் விதியினாலும் நின்ற அகர உயிர் முன் அத்துச்சாரியை வந்தால், அதன் முதலில் உள்ள அகரம் கெடும். இவ்வாறன்றி, உருபேற்ற உயிரீறாக இருந்தால், அவை+அத்து=அவையத்து என அத்துச் சாரியையின் முதலில் உள்ள அகரம் கெடுவதில்லை.

(3) 'அற்று' சாரியை :

i. எல்லாம் + ஐ = எல்லாவற்றையும்
எல்லாம் + ஆல் = எல்லாவற்றாலும்

எல்லாம் எனும் பொதுப்பெயர் அஃறிணைப் பொருளில் வருமாயின் அதனுடன் ஆறு உருபுகளும் புணர்ந்தால் இடையில் அற்று என்னும் சாரியையும் உருபின்பின் முற்றும்மையும் வரும்.

ii. **அவை, இவை, எவை, கரியவை, நெடியவை**— முதலிய ஐகார ஈற்று அஃறிணைப் பெயர்கள் உருபேற்குமிடத்து, **அவற்றை** (அவ் + அற்று + ஐ) **அவற்றால்,**

அவற்றிற்கு, அவற்றின், அவற்றது, அவற்றின் கண்—என ஈற்று ஐகாரம் கெட்டு, அற்றுச் சாரியை பெறும். நான்கனுருபும் ஏழனுருபும் ஏற்கு மிடத்து முறையே, அவ்+அற்று+இன்+கு=அவற்றினுக்கு எனவும், அவ்+அற்று+இன்+கண்=அவற்றின்கண் எனவும், அற்றுச் சாரியைமேல் இன் சாரியையும் பெறும். இவ்வாறே மற்றவையும் வரும்.

iii. பல, சில, சிறிய, பெரிய, அரிய முதலிய அகர ஈற்று அஃறிணைப் பன்மைப் பெயர்களும், யா என்னும் அஃறிணைப் பன்மை வினைப் பெயரும், உருபேற்குமிடத்து பல+அற்று+ஐ=பலவற்றை, பலவற்றால், பலவற்றிற்கு, பலவற்றின், பலவற்றது, பலவற்றின்கண்—என அற்றுச் சாரியை பெறும். முன்னர்க்காட்டப்பட்டது போலவே, நான்கனுருபும், ஏழனுருபும் ஏற்கு மிடத்து முறையே, பல+அற்று+இன்+கு=பலவற்றினுக்கு எனவும், பல+அற்று+இன்+கண்=பலவற்றின்கண் எனவும், அற்றுச் சாரியைமேல் இன் சாரியையும் பெறும். மற்றவற்றையும் இவ்வாறே கொள்ளுதல் வேண்டும்.

5. பல, சில—இவை புணரும் முறை

1. பல+பல=பலபல, சில+சில=சிலசில—என இவை புணர்கையில் இயல்பாயின.

2. பல+பல=பலப்பல, சில+சில=சிலச்சில—என இங்கு வல்லினம் மிகுந்து வந்துள்ளது.

3. பல+பல=பற்பல, சில+சில=சிற்சில—என இங்கு நிலைமொழி ஈற்று அகரம் கெட்டு, லகரம் றகர மெய்யாகத் திரிந்துவந்துளது.

4. பல+பல—பல்பல, சில+சில=சில்சில—என இங்கு நிலைமொழியீற்று அகரம் மட்டும் கெட்டு வந்தது.

5. பல + கலை — பல கலை, பல்கலை.
சில + கலை — சில கலை, சில்கலை.
பல + நாள் — பல நாள், பன்னாள்.
சில + நாள் — சில நாள், சின்னாள்
பல + அணி — பலவணி, பல்லணி.
சில + அணி — சிலவணி, சில்லணி.
பல + ஆயம் — பலவாயம், பல்லாயம்
பல + மணி — பலமணி, பன்மணி
பல + ஞானம் — பலஞானம், பன்ஞானம்
பல + தாழிசை — பலதாழிசை, பஃறாழிசை
பல + தொடை — பலதொடை, பஃறொடை

இவ்வாறு பல, சில என்னும் இருபெயர்கள் முன்னும் பிறபெயர் வரின், நிலைமொழியீற்றின் அகரம் கெடாதும் கெட்டும் விகற்பமாகும்.

6. மெய்யீற்றில் இயல்பு புணர்ச்சி*

பால் + உண்டான் — பாலுண்டான் — வேற்றுமை
புகழ் + அரிது — புகழரிது — அல்வழி

இவ்வாறு நிலைமொழியின் ஈற்றில் நின்ற மெய்யெழுத்தின் மேல், வருமொழி முதலில் வரும் உயிர் எழுத்து இயைந்து நிற்பது இயல்பு புணர்ச்சியாகும்.

கண் + பெரிது — கண்பெரிது
பொன் + புதிது — பொன்புதிது

இவ்வாறு அல்வழியில் வல்லினம் வர நிலைமொழி ஈற்றில் நின்ற மெய்யெழுத்து இயல்பாகும்.

கண் + மாண்டது = கண்மாண்டது
பொன் + மாண்டது = பொன்மாண்டது

இவ்வாறு, அல்வழியில் மெல்லினம் வர, இயல்பாகும்.

கண் + வலிது = கண்வலிது
பொன் + யாது = பொன்யாது

இவ்வாறு அல்வழியில் இடையினம் வர இயல்பாயிற்று. எனவே, அல்வழியில் ணகர னகர ஈறுகளின் முன் மூவின மெய்கள் வந்து புணர்ந்தாலும் இயல்பாகும். வேற்றுமையில் மெல்லின இடையினங்கள் வந்து புணர இயல்பாகும். ணகர னகர ஈறுகள், வல்லினம் வந்து புணர்கையில் இரண்டாம் வேற்றுமைத் தொகையிலும், ஏழாம் வேற்றுமைத் தொகையிலும், வருமொழி வினையாயின் இயல்பாகும். மண் கூடை என்பது போல இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையிலும் ஒவ்வோரிடத்தில் இயல்பாகும்.

தேன் எனும் சொல் வேற்றுமையிலும் அவ்வழியிலும் மூவின மெய்கள் வந்து புணர்ந்தாலும் இயல்பாகும். (விளக்கம்83–ஆம் பக்கம் காண்க.)

பரண், அமண், உமண் முதலிய குலம்பற்றிய பெயர்கள், பாண், கவண், எயின் எனும் சொற்கள் ஆகியவற்றின் ஈற்று ணகரம், வேற்றுமையில் வல்லினம் வந்து புணர்கையில் பொதுவாக இயல்பாகும். (சில விடங்களில் அகரச்சாரியை பெற்றுவரும்) மீன் எனும் சொல் வல்லினம் வரப்புணர்ந்தால் இயல்பாகவும் இருக்கும்; (திரிந்தும் வரும்.) எகின் + தலை = எகின் தலை, எகின் + பெரிது = எகின் பெரிது என 'எகின்' (அன்னப்பறவை) எனும் சொல் அகரச் சாரியை பெறாத போது இரு வழியிலும் இயல்பாகும்.

குயின்+சிறுமை=குயின்சிறுமை, ஊன்+பெருமை =ஊன் பெருமை, குயின்+சிறிது=குயின் சிறிது, ஊன்+சிறிது=ஊன் சிறிது என, குயின் (முகில்), ஊன் எனும் சொற்களின் முன்வரும் வல்லினம் இருவழியிலும் இயல்பாகும்.

தன்+பகை = தன்பகை, என் + பகை = என்பகை, நின்+பகை=நின்+பகை — தன், என், நின் இவற்றின் முன் வரும் வல்லினம் இயல்பாகும்.

மான்+குளம்பு – மான்குளம்பு, அழகன்+கை – அழகன் கை என, வேற்றுமைச் சந்தியில் இயல்பாதலும் உண்டு.

குளம்+வலிது=குளம் வலிது, குளம்+யாது=குளம் யாது, மரம்+வலிது=மரம் வலிது, அருளும்+அரசன்= அருளும் அரசன், கொல்லும்+யானை=கொல்லும் யானை என மகரஈற்று மொழிமுன் உயிரும் இடையினமும் வரின் அல்வழிச் சந்தியிலே மகர ஈறு கெடாது இயல்பாகும்.

வேய்+கடிது=வேய்கடிது, வேர் + கடிது = வேர் கடிது, வீழ்+கடிது, – வீழ்கடிது – என ய், ர், ழ் இம் மூன்று ஒற்றுக்களின் முன்னும் வல்லினம் வந்து புணர, அல்வழிச் சந்தியில் இயல்பாகும். (மிகுந்தும் வரும்.)

கீழ்+குலம்=கீழ்குலம், கீழ்+சாதி=கீழ்சாதி – என்பன ஒருகால் இயல்பாகும்; (ஒருகால் மிக்கும் வரும்.)

கல் +யாது=கல்யாது, கல்+வன்மை=கல்வன்மை
முள்+யாது=முள்யாது,முள்+வன்மை=முள் வன்மை

என, கல், முள் எனும் சொற்களின் முன் இடையினம் வந்து புணர இருவழியும் இயல்பாயின.

கால்+கடிது = கால்கடிது, தேள் + கொடிது = தேள்கொடிது என, கால், தேள் என்னும் தனிக்குறிலைச்

சாராத லகர ளகர ஈறுகள், வல்லினம் வந்து புணர அல்வழியில் இயல்பாயின. கடல்புகமண்டி, வாள்போந்தட்ட, நீள்கழல் மறவர் என வேற்றுமையில் இயல்பாதலும் உண்டு.

ஆ+ன்+கன்று = ஆன்கன்று, ன் — சாரியை
வண்டு+இன்+கால் = வண்டின்கால் — இன் – சாரியை

வேற்றுமைப் புணர்ச்சியில் ன், இன் என்னும் சாரியை இடைச் சொற்களின் முன் வரும் வல்லினம் இயல்பாகும்.

மழ+களிறு = மழகளிறு – என உரிச்சொல் முன் வல்லெழுத்து இயல்பாயிற்று.

அவ்+வாழை = அவ்வாழை, இவ்+யானை = இவ்யானை, உவ்+யாவை – உவ்யாவை என அவ், இவ், உவ் எனும் வகர ஈற்றுச் சுட்டுப் பெயர் முன் இடையினம் வர இயல்பாகும்.

7. வினா - சுட்டுக்களின் புணர்ச்சி

(1)

எ + ஆடு = எவ்வாடு		எகர வினா
எ + யாறு = எவ்யாறு		
அ+ அரசன் = அவ்வரசன்		அகரச்சுட்டு
அ+ யானை = அவ்யானை		
இ+ அரசி = இவ்வரசி		இகரச்சுட்டு
இ+ யாக்கை = இவ்யாக்கை		
உ + அன்னம் = உவ்வன்னம்		உகரச்சுட்டு
உ + யாழ் = உவ்யாழ்		

இவ்வாறு, எகர வினாவின் முன்னரும், மூன்று சுட்டெழுத்துக்களின் முன்னரும், உயிரும், யகரமும் வர, வகர மெய் தோன்றிப் புணரும்.

(2) எ + காக்கை = எக்காக்கை
எ + மாடு = எம்மாடு
எ + வண்டி = எவ்வண்டி

அ	+	குரங்கு	=	அக்குரங்கு
அ	+	மனிதன்	=	அம்மனிதன்
அ	+	பண்டம்	=	அப்பண்டம்
இ	+	வாழ்வு	=	இவ்வாழ்வு
இ	+	சட்டை	=	இச்சட்டை
இ	+	நாய்	=	இந்நாய்
உ	+	வீடு	=	உவ்வீடு
உ	+	நூல்	=	உந்நூல்
உ	+	பாய்	=	உப்பாய்

இவ்வாறு, எகர வினாவின் முன்னரும், மூன்று சுட்டெழுத்துக்களின் முன்னரும் உயிரும் யகரமும் தவிர்த்த மற்றவை வந்து புணர்ந்தால், **வந்த அம்மெய்களே** தோன்றும்.

(3) அ+இடை=ஆ+ய்+இடை=ஆயிடை – இவ்வாறு செய்யுளில் – **அ** எனும் சுட்டு **ஆ** என நீண்டு வந்தால் இடையில் **யகரம்** தோன்றும்.

அது+பெரிது=அதுபெரிது, இது+சிறிது – இது சிறிது, உது+கண்டான்=உதுகண்டான் – எனச் சுட்டுப் பெயர்களின் முன் வரும் வல்லினம் இயல்பாகும்.

3. செய்யுளுக்கு ஏற்ற சிறப்பு விதிகள் சில*

ஆகாரம் :

(1) '**ஆயிடைத்** தமிழ் கூறும் நல்லுலகத்து' – இதில், மேலே காட்டியுள்ளபடி, **அ**+இடை என்பதில் **அ** எனும் சுட்டானது செய்யுளில் நீண்டு **ஆ** என்றாகி, யகர மெய் தோன்றி, **ஆயிடை** எனப் புணர்ந்துள்ளது. இது செய்யுளுக்கே உரிய விதியாகும்.

(2) i. 'நில விரி கானல்வாய்'
ii. 'மருவிலென் செய்யுமோ **நிலவு**'
iii. 'நிலா வணங்கு வெண்மணல்மேல் நின்று'

இவற்றுள் **i.** '**நிலா**' என்பது '**நில**' எனக்குறுகியது. அதாவது குற்றெழுத்தின் பின் நின்ற ஆகாரம் குறுகி அகர ஈருய் நின்றது.

ii. நில எனக் குறுகிய சொல் உகரச் சாரியை பெற்று நிலவு என்ருகியது.

iii. மேற்கண்ட இரண்டும் அன்றி **நிலா** எனத் தன்னியல்பாய் நின்றது.

எனவே செய்யுளில், குற்றெழுத்தின் பின் நின்ற ஆகாரம் குறுகி அகர ஈருய் நிற்றலும், அக்குறுகுதலுடன் உகரச் சாரியை பெறுதலும், இரண்டும் அன்றித் தன்னியல்பாய் நிற்றலும் ஆகிய மூன்று விதிகளுள் ஒன்றை ஏற்று வரும்.

நிலா—நிலவு, சுரு—சுறவு, இரு—இறவு, கனு—கனவு,—இவை ஆ காரம் குறுகி, உகரம் ஏற்றன. கடா, மிடா என்பனவற்றில் ஆகாரம் குறுகாமல் இயல்பாய் நிற்கும்.

அன்றி, இன்றி :

i. நாளன்று போகிப் புள்ளிடை
ii. விண்ணின்று பொய்ப்பின்

செய்யுளில் **அன்றி, இன்றி** எனும் எதிர்மறைக் குறிப்பு வினையெச்சங்களின் ஈற்றிலுள்ள இகரமானது உகரமாய்த் திரிந்து அன்று, இன்று என வருதலும் உண்டு. இவ்வாறு திரியும் உகரத்தின் முன் வல்லினம் இயல்பாகும்.

அதான்று :

அதான்றம்ம வெண்பா வீறே

இவ்வாறு, **அது** என்னும் சுட்டுப் பெயர் முன் வரும் அன்று எனும் எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று செய்யுளில் ஆன்று என முதல் நீளும். அது+அன்று என்னும் இவ்விரு சொற்களும் அதான்று எனச் செய்யுளில் வருவது போல அதுவன்று, அதன்று எனவும் வரும். இவ்விதி, இது, உது என்பனவற்றிற்கு இல்லை.

செய்யுளுக்குரிய விகாரங்களான வலித்தல் விகாரம், மெலித்தல் விகாரம், நீட்டல் விகாரம், குறுக்கல் விகாரம், விரித்தல் விகாரம், தொகுத்தல் விகாரம், முதற்குறை, இடைக் குறை, கடைக் குறை என்னும் ஒன்பதும் முன்னு ளுள்ள பொதுப் பகுதியில் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

9. இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி வேறுபாடு

(1) ‘வழிபடு தெய்வம் **நிற்புறங்காப்ப**’—இது ‘நின் ஈறு இயல்பாமுறவே’—என்ற விதிப்படி **நின்புறம்** என்று இயல்பாக வேண்டுமிடத்து இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியில் விகாரமாயிற்று.

(2) மண் கொணர்ந்தான்—இது, ‘ண ன வல்லினம் வரட் டறவும்’ என்னும் விதிப்படி **‘மட்கொணர்ந்தான்’** என்றிருப்பதற்குப் பதிலாக இயல்பாக நின்றது.

(3) i. முருகனைத் தேடினன் — என உயர்திணை யிடத்து இரண்டாம் வேற்றுமை உருபு விரிந்து, வல்லினம் மிகுந்தது.

ii. மகன்+பெற்றாள்=மகற் பெற்றாள் - என உயர் திணையிடத்து இரண்டாம் வேற்றுமை உருபு தொடக்கி, னகர ஈறு திரிந்தது.

86828

எனவே, உயர்திணையிடத்து இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ விரிந்தும் தொக்கும் வரும்.

(4) i. பெண்ணைக் கண்டாள் – பெண் என்பது போன்ற இருதிணைகளுக்கும் பொதுவாக வரும் பெயரிடத்து இரண்டாம் வேற்றுமை உருபு விரிந்தது.

ii. பெண்+பெற்றாள்=பெண் பெற்றாள்—பொதுப் பெயரிடத்து இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கது.

எனவே, பொதுப் பெயரிடத்து இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ விரிந்தும் தொக்கும் வரும்.

இவ்வாறு, இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியானது, பொது விதி பெற்று முடிதலின்றி, அங்கே விதித்த இயல்பிலே விகாரமாகியும் விகாரத்திலே இயல்பாகியும், உயர்திணைப் பெயரிடத்து விரிந்தும், தொக்கும், பொதுப் பெயரிலே விரிந்தும் விரியா தொழிந்தும் வரும்.

பயிற்சி

1. குற்றியலுகரம்——எத்தனை வகைத் தொடராகும்?
2. வன்றொடர்க் குற்றியலுகரத்திற்கும் மற்றத் தொடர்க் குற்றியலுகரங்களுக்கும் புணர்ச்சியில் உள்ள வேறுபாடு யாது?
3. அல்வழியில் மிகாமல் வேற்றுமையில் மட்டும் மிகும் குற்றியலுகரத் தொடர் யாது?
4. டு, று ஈற்றுக் குற்றுகரங்கள் பெறும் சிறப்பு விதி யாது?
5. மென்றொடர் அடையும் வேறு மாறுதல்கள் யாவை?

6. மென்றொடர் வன்றொடராக மாறுவதற்குரிய நான்கு எடுத்துக் காட்டுகளைத் தருக.

7. பண்டைப் புலவர், எற்றைக்கு, மூவாட்டைப் பிராயம், நேற்றைப் பேச்சு, இன்றை—இவற்றுக்கு இலக்கணம் கூறுக.

8. அங்கு, யாங்கு, ஈண்டு, பண்டு, இன்று, என்று—இவற்றின் முன் வல்லினம் வர என்னாகும்?

9. திசைப் பெயர்கள் புணர்ச்சியில் அடையும் மாறுதல்கள் எவை?

10. தென்மேற்கு, மேற்றிசை, கீழக் கரை, கீழை நாடு—இவை எவ்வாறு புணர்ந்தன?

11. தேங்காய்—இச்சொல் எவ்வாறு அமைந்தது என்பதை விளக்குக.

12. தேன்சுவை, தேங்குடம், தேக்குழம்பு, தேமொழி—இவை புணர்ந்த வகையினை விளக்குக.

13. அஞ்செவி, அகங்கை—இவை புணர்ந்த வகையினை வரைக.

14. பொற்றகடு, மட்குடம்—பிரித்து இவ்வாறு புணர்ந்ததற்குக் காரணம் கூறுக.

15. தனிக் குறிலைச் சார்ந்துவரும் ணகர னகரங்களின் முன் தகரம் வந்தால் என்னாகும்?

16. தனிக் குறிலைச் சாராது வரும் ணகர னகரங்களின் முன் நகரம் வந்தால் எம்மாறுதல் பெறும்?

17. அமண்+சேரி, உமண்+பாடி, பாணர்+தலை, கவண்+கோடு, எயின்+குடி, மீன்+செதிள், என்+பை—இவற்றைச் சேர்த்துக் காட்டுக.

18. லகர ளகர ஈறுகளின் முன் வேற்றுமையில் வல்லினம் வரின் என்னாகும்?

19. சொன்மாலை, முண்மிருந்தது, வாண்முனை— இவற்றைப் பிரித்துக் காட்டுக.
20. தனிக் குறிலைச் சார்ந்த லகர ளகர ஈறுகள் அல்வழியில் வருமொழி முதலில் தகரம் வந்தால் என்னுகும்?
21. சாரியை என்றால் என்ன?
22. அற்றுச் சாரியை அடையும் மாறுதல்கள் எவை?
23. எல்லாம் எனும் சொல் அற்றுச் சாரியை பெறின் எந்நிலை அடையும்?
24. ஐகார ஈற்று அஃறிணைப் பெயர்கள் நான்கனுருபும் ஏழனுருபும் ஏற்குமிடத்து என்ன சாரியைகளைப் பெறும்?
25. பல, சில—இவை எவ்வண்ணம் புணரும்?
26. கண்+பெரிது, பாண்+குலம், எகின்+தலை, வேர்+கடிது, தன்+புறம் — இவை எவ்வாறு புணரும்?
27. மான்+கால், அவன்+ஐ—இவை வேற்றுமைச் சந்தியில் எவ்வாறு புணரும்?
28. எகர வினு முச்சுட்டின் முன்னர் உயிரும் யகரமும் வர எங்ஙனம் புணரும்?
29. செய்யுளுக் கேற்ற சிறப்பு விதிகள் யாவை?
30. செய்யுளில் ஆ குறுகி உகரச் சாரியை ஏற்கும் சொற்கள் (இந்நூலில் இல்லாதவை) நான்கினைத் தருக.
31. இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிக் குரிய வேறுபாடுகள் இரண்டினை எடுத்துக் காட்டுக.

5. யாப்பு

1. சீர்பிரித்துத் தளை கூறுதல் *

அசை, சீர், தளை முதலியவைபற்றி முன் வகுப்புக்களில் படித்திருக்கிறீர்கள் அல்லவா? **அசை** என்பது நேரசை, நிரையசை என **இரண்டே** வகைப்படும். **சீர்** என்பது, 1. ஓரசைச்சீர் (நாள், மலர், காசு, பிறப்பு எனும் வாய்பாடுகள்), 2. ஈரசைச் சீர் (மாச்சீர், விளச்சீர்), 3. காய்ச் சீர், 4. கனிச் சீர், 5. நாலசைச் சீர் (பூச் சீர், நிழற்சீர்) எனச் சீர்கள் **ஐவகைப்படும்.**

இதில் காய்ச்சீர், கனிச் சீர் என்பவை இரண்டும் மூவசைகளினால் அமைந்தவையே யெனினும், அவை வெவ்வேறு பாக்களுக்கு உரியனவாதலும் தளை வேறுபடுதலும் கருதி, மூவசைச் சீர் என ஒன்றாகக் கூறிவிடாமல் தனித் தனியே இரண்டாகக் கூறப்பட்டிருக்கிறது.

இரண்டு அசைகளால் வரும் சீர் **இயற்சீர்** எனவும், மூன்று அசைகளால் வரும் சீர் **உரிச் சீர்** எனவும், ஓரசையாலும், நாலசைகளாலும் வரும் சீர்கள் **பொதுச் சீர்கள்** எனவும் கூறப்படும்.

ஈரசைச் சீர் எல்லாப் பாக்களிலும் வரும். மூவசைச் சீர் எல்லாப் பாக்களிலும் வருமெனினும் வெண்பாவிற்கும் (காய்ச் சீர்), வஞ்சிப்பாவிற்கும் (கனிச் சீர்) உரியவை. நாலசைச் சீர்கள் வஞ்சிப்பாவில் வரும்; வெண்பாவில் வாரா; கலிப்பாவில் குற்றுகரம் வந்தாலொழிய வாரா; ஆசிரியப்பாவிலும் குற்றுகரம் வந்தாலொழிய வாரா.

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.'

இந்தக் குறள் வெண்பாவில், கற்க என்பது **நிலைச்சீர்**. அதாவது முதலில் உள்ள சீர். **கசடறக்** என்பது **வருசீர்**. அதாவது வந்து சேருகின்ற சீர்.

நிலைச் சீரின் ஈற்றசையும் வருசீரின் முதலசையும் தம்முள் இயைந்து நிற்பது **தளை** எனப்படும்.

தளை என்பது, 1. நேர் ஒன்றிய ஆசிரியத் தளை, 2. நிரை ஒன்றிய ஆசிரியத் தளை, 3. இயற்சீர் வெண்டளை, 4. வெண் சீர் வெண்டளை, 5. கலித் தளை, 6. ஒன்றிய வஞ்சித் தளை, 7. ஒன்றா வஞ்சித் தளை என **ஏழு** வகைப்படும்.

இவற்றுள், நேர் ஒன்றிய ஆசிரியத் தளை, நிரை ஒன்றிய ஆசிரியத் தளை ஆகிய விரண்டும் **ஆசிரியப்பாவுக்கு** உரியவை. இயற்சீர் வெண்டளை, வெண் சீர் வெண்டளை ஆகிய விரண்டும் **வெண்பாவிற்கு** உரியவை. கலித்தளை **கலிப்பாவிற்கு** உரியது. ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றா வஞ்சித் தளை ஆகிய விரண்டும் **வஞ்சிப்பாவிற்கு** உரியவை. எனவே, நான்கு வகைப் பாக்களுக்கும் இந்த ஏழு வகைத் தளைகளும் உரியனவாகின்றன.

'மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.'

இக்குறள் வெண்பாவை அசை பிரித்துத் தளை கூறுவோம்:

	1	2	3	4
1.	மக்-கள்-மெய்	தீண்-டல்	உடற்-கின்-பம்	மற்-றவர்
	நேர்நேர்நேர்	நேர் நேர்	நிரை நேர் நேர்	நேர் நிரை
	தேமாங்காய்	தேமா	புளிமாங்காய்	கூவிளம்

வெண்சீர் வெண்டளை இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை

	1	2	3
2.	சொற்-கேட்-டல்	இன்-பம்	செவிக்-கு
	நேர் நேர் நேர்	நேர் நேர்	நிரை நேர்
	தேமாங்காய்	தேமா	'பிறப்பு'

இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை இயற்சீர் வெண்டளை

இந்தக் குறள் வெண்பாவின் முதற் சீராகிய நிலைச்சீர் தேமாங்காய்ச் சீராகும். அதனையடுத்து வருஞ்சீரின் முதலசை நேரசையாயிருக்கிறது. இவ்வாறு காய்ச்சீருடன் நேரசை வந்து இயைவது (காய் முன் நேர்) வெண்சீர் வெண்டளையாகும்.

இரண்டாவது சீர் தேமாச்சீர். அதனையடுத்த சீரின் முதலசை நிரையசையாக இருக்கிறது. இவ்வாறு மாச்சீர் முன் நிரை வந்து இயைவது (மாமுன் நிரை) இயற்சீர் வெண்டளையாகும்.

மூன்றுவது சீர் புளிமாங்காய்ச் சீராகும். அதனையடுத்த சீரின் முதலசை நேரசையாகும். இவ்வாறு காய்ச்சீர் முன் நேர் வந்து இயைவது வெண்சீர் வெண்டளையாகும்.

நான்காவது சீர் கூவிளச் சீராகும். அதனையடுத்து வருவது இரண்டாவது அடியிலுள்ள முதற்சீர். அதன் முதலசை நேரசையாகும். இவ்வாறு விளச்சீர் முன் நேர் வந்து இயைவது (விளமுன் நேர்) இயற்சீர் வெண்டளையாகும்.

ஐந்தாவது சீர் தேமாங்காய்ச் சீராகும். அதனையடுத்த சீரின் முதலசை நேரசையாகும். இவ்வாறு காய் முன் நேர் வந்து இயைவது வெண்சீர் வெண்டளையாகும்.

ஆறுவது சீர் தேமாச் சீராகும். இதனை யடுத்த சீரின் முதலசை நிரையசையாகும். இவ்வாறு மாமுன் நிரை வந்து இயைவது இயற்சீர் வெண்டளை எனப்படும்.

ஏழாவது சீர் குற்றியலுகர ஈறுபெற்ற நிரைநேர் ஆதலின் பிறப்பு என்னும் வாய்பாட்டினுக்குரியதாகும்.

ஆக, இந்தக் குறள் வெண்பா காய்ச்சீர், மாச்சீர், விளச்சீர் முதலிய சீர்களையும் வெண்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளை ஆகிய தளைகளையும் பெற்று, ஈற்றில் பிறப்பு எனும் வாய்பாட்டில் முடிந்தது.

பா வகையில் வெண்பா மட்டும், முடிகையில், நாள், மலர், காசு, பிறப்பு எனும் நால்வகை வாய்பாடுகளுள் ஏதேனும் ஒன்றைப் பெற்றே முடியும். (வெண்பாவின் ஈற்றில் நிற்கும் நேரசை **நாள்** எனப்படும்; நிரையசை **மலர்** எனப்படும்; குற்றியலுகரம் பெற்ற தேமாச் சீர் **காசு** எனப்படும். புளிமாச்சீர் **பிறப்பு** எனப்படும். காசு, பிறப்பு என்பன சிறுபான்மை முற்றுகர ஈறுபெற்று வருதலும் உண்டு.)

இவ்வாறே ஒவ்வொரு வகைப் பாவிற்கும் சீர் பிரித்துத் தளை கூறுதல் வேண்டும். இவ்வாறு கூறுதற்கு, பாக்களின் இலக்கணம் பற்றி நீங்கள் ஐந்தாம் படிவத்தில் படித்தவற்றைக் கொண்டு, இஃது இன்ன பாவென அறிந்து கொள்ளுதல் வேண்டும். ஆசிரியப்பாவில் பயின்றுவருதற்குரிய சீர், தளை

கள், வெண்பாவில் பயின்று வருதற்குரிய சீர், தளைகள், கலிப்பாவிலும், வஞ்சிப்பாவிலும் பயின்று வருதற்குரிய சீர், தளைகள் முதலியவை இன்னின்ன வென்பதை நினைவிற் கொணர்ந்து மனத்தில் பதிய வைத்துக் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு பா வகை யறிதலும் பிறவற்றை அறிதலும் இன்றியமையாத தாகும்.

2. எதுகை மோனையின் பொது இலக்கணம்

செய்யுளில் பல அடிகளிலாவது, சீர்களிலாவது எழுத்துக்கள் ஒன்றி வருமாறு தொடுப்பது தொடை எனப்படும். இது **எதுகைத் தொடை, மோனைத் தொடை** என இரு வகைப்படும்.

எதுகைத் தொடை :

'கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்'

இந்தக் குறள் வெண்பாவின் இரண்டடிகளிலும் முதற் சீரின் இரண்டாவது எழுத்துக்கள் ஒன்றி வந்துள்ளன. முதல் எழுத்துக்கள் அளவொத்து வந்துள்ளன. (அளவொத்தல்—மாத்திரையளவில் ஒத்து வருதல். ஒன்றுதல்—ஒன்று போல வருதல்.)

'இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு'

இந்தக்குறள் வெண்பாவில் முதலடியில் முதற் சீரிலும் இரண்டாவது சீரிலும், இரண்டாவது அடியில் முதற்சீரிலும் இரண்டாம் எழுத்து ஒன்றிவந்திருக்கிறது.

இவ்வாறு, அடிகளிலாவது சீர்களிலாவது (முத லெழுத்து அளவொத்திருக்க), இரண்டாம் எழுத்து ஒன்றிவருமாறு தொடுப்பது எதுகைத் தொடை எனப் படும்.

மோனைத் தொடை :

'வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று'

இந்தக் குறள் வெண்பாவில் முதல் அடியிலுள்ள நான்கு சீர்களில் முதற் சீரிலும், மூன்றுவது நான்காவது சீர்களிலும் முதலெழுத்து ஒன்றிவந்திருக்கின்றது.

'தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்'

இக்குறள் வெண்பாவில், முதல், இரண்டாம், மூன்றும் சீர்களின் முதல் எழுத்து ஒன்றி வந்திருக்கிறது.

இவ்வாறு, ஓரடியில் இரண்டு அல்லது அதற்கு மேற் பட்ட சீர்களின் முதல் எழுத்து ஒன்றி வருதல் மோனைத் தொடை எனப்படும்.

3. எதுகை மோனை வகைகள்*

எதுகை வகை :

இந்த எதுகை, மோனைத் தொடைகள் பலவகைப்படும். எதுகையானது, வருக்க வெதுகை, நெடிலெதுகை, வல்லின வெதுகை எனவும், அடி எதுகை, இணை எதுகை,

பொழிப்பு எதுகை, ஒரூஉ எதுகை, கூழை எதுகை, மேற்கதுவாய் எதுகை, கீழ்க்கதுவாய் எதுகை, முற்று எதுகை எனவும் பல வகைப்படும்.

(1) 'இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து'

இவ்வாறு அடிதோறும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றி வருமாறு தொடுத்தல் **அடி எதுகைத் தொடை** எனப்படும்.

(2) ஓரடியில் முதல் இரண்டு சீர்களில் மட்டும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது **இணை எதுகை** ஆகும்.

(3) ஓரடியில் முதற்சீரிலும் மூன்றாம் சீரிலும் இரண்டாவது எழுத்து ஒன்றி வருவது **பொழிப்பு எதுகை**யாகும்.

(4) ஓரடியின் முதற்சீரிலும் இறுதிச் சீரிலும், இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது **ஒரூஉ எதுகை** யாகும்.

(5) அடியின் முதல், இரண்டாம், மூன்றாம் சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது **கூழை எதுகை** ஆகும்.

(6) அடியின் இரண்டாவது சீர்தவிர, ஏனைய மூன்று சீர்களிலும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது **மேற்கதுவாய் எதுகை** ஆகும்.

(7) அடியின் மூன்றாம் சீர் தவிர, ஏனைய மூன்று சீர்களிலும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது **கீழ்க்கதுவாய் எதுகை** ஆகும்.

(8) 'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை' என்னும் குறளில் அமைந்தது போன்று அடியின் நான்கு சீர்களிலும் இரண்டாம் எழுத்து ஒன்றிவருதல் **முற்று எதுகை** ஆகும்.

(9) 'கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை'

எனும் குறளில், முதலடியில் முதற்சீரின் இரண்டாம் எழுத்து **ளி** என்பது. இரண்டாமடியில் முதற்சீரின் இரண்டாம் எழுத்து **ளை** என்பது. **ளி, ளை** எனும் இரண்டும் ஒன்றி வரவில்லை யெனினும் ஒரே வருக்கத்தைச் சேர்ந்த எழுத்துக்கள். இவ்வாறு அடிகளிலாவது, சீர்களிலாவது வருக்க எழுத்துக்கள் இரண்டாம் எழுத்தாக வருவது **வருக்க எதுகை** ஆகும்.

(10) 'சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு'

எனும் குறளில் முதலடியில் முதற்சீரின் இரண்டாம் எழுத்து **வை** எனும் நெடிலாகும். இரண்டாமடியில் முதற்சீரின் இரண்டாம் எழுத்து **கை** எனும் நெடிலாகும். இவ்வாறு **வை, கை** எனும் இரண்டும் ஒன்றிய எழுத்துக்கள் அல்ல வெனினும், நெடில் எழுத்துக்கள். இவ்வாறு அடிகளிலாவது, சீர்களிலாவது நெடிலாக உள்ள எழுத்துக்கள் இரண்டாம் எழுத்தாக வருவது **நெடில் எதுகை** ஆகும்.

(11) ‘பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு’

௮ எனும் குறளில் முதலடியில் முதற்சீரின் இரண்டாம் எழுத்து ற் எனும் வல்லினமாகும். இரண்டாமடியில் முதற் சீரின் இரண்டாம் எழுத்து த் எனும் வல்லினமாகும். இவ்வாறு ற், த் எனும் இரண்டும் ஒன்றியவை அல்லவெனினும் வல்லின எழுத்துக்கள். இவ்வாறு அடிகளிலாவது, சீர்களிலாவது வல்லெழுத்துக்கள் இரண்டாம் எழுத்தாக வருவது **வல்லின எதுகை** ஆகும்.

‘பொன்னின்	அன்ன	பொறிசுணங்	கேந்திப்	— 1–2	இணை	எதுகை
பன்னருங்	கோங்கின்	அன்னலங்	கவற்றி	— 1–3	பொழிப்பு	”
மின்னிவ்	ரொளிவடங்	தாங்கி	மன்னிய	— 1–4	ஒரூஉ	”
நன்னிற	மென்கலை	மின்னிடை	வருத்தி	— 1–2–3	கூழை	”
என்னையு	மிடுக்கண்	டுன்னுவித்	தின்னடை	— 1–3–4	மேற்கதுவாய்	”
அன்ன	மென்பெடை	போலப்	பன்மலர்க்	— 1–2–4	கீழ்க்கதுவாய்	”
கன்னியம்	புன்னை	யின்னிழற்	றுன்னிய	— 1, 2, 3, 4	முற்று	”
மயிலேர்	சாயல்	வாணுதல்				
அயில்வே	லுண்கணெம்	மறிவுதொலைத்	தனவே.’			

இச் செய்யுளில் மேற்கண்ட எழுவகையான எதுகை விகற்பங்களும் வந்திருத்தல் காண்க. எழடிகளிலும் முதல் சீரின் இரண்டாவது எழுத்து ஒன்றி வந்திருத்தல் அடி எதுகையாம்.

எனவே, **எண்வகை எதுகைகள்** இவ்வாறே செய்யுளில் வந்திருத்தல் காண்க.

மோனை வகை :

மோனையானது, அடிமோனை, இணைமோனை, பொழிப்பு மோனை, ஒரூஉ மோனை, கூழை மோனை, மேற்கதுவாய் மோனை, கீழ்க்கதுவாய் மோனை, முற்று மோனை எனப் பல வகைப்படும்.

(1) 'தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்'

இக்குறளில் முதலடியில் முதற்சீரின் முதல் எழுத்தும், இரண்டாமடியில் முதற்சீரின்முதல் எழுத்தும் **த** எனும் ஒரே எழுத்தாக உளது. இவ்வாறு ஒரு செய்யுளில் ஒவ்வோரடியிலும் முதல் எழுத்து ஒன்றிவருவது **அடிமோனை** ஆகும்.

(2) ஓர் அடியின் முதலிரண்டு சீர்களிலும் முதல் எழுத்து ஒன்றி வருவது **இணைமோனை** ஆகும்.

(3) ஓர் அடியின் முதற்சீரிலும் மூன்றும் சீரிலும் முதல் எழுத்து ஒன்றிவருவது **பொழிப்பு மோனை** ஆகும்.

(4) ஓர் அடியின் முதற் சீரிலும் ஈற்றுச் சீரிலும் முதல் எழுத்து ஒன்றிவருவது **ஒரூஉ மோனை** ஆகும்.

(5) ஓர் அடியின் முதல் மூன்று சீர்களிலும் முதல் எழுத்து ஒன்றிவருவது **கூழை மோனை** ஆகும்.

(6) ஓர் அடியின் இரண்டாம் சீர் தவிர, ஏனைய மூன்று சீர்களில் முதல் எழுத்து ஒன்றிவருவது **மேற்கது வாய் மோனை** ஆகும்.

(7) ஓர் அடியின் மூன்றும் சீர் தவிர, ஏனைய மூன்று சீர்களில் முதல் எழுத்து ஒன்றி வருவது கீழ்க்கதுவாய் மோனை ஆகும்.

(8) கற்க கசடறக் கற்பவை கற்றபின்
'நிற்க அதற்குத் தக'

இக்குறளில் முதலடியில் நான்கு சீர்களிலும் முதல் எழுத்து ஒன்றிவந்துளது. இவ்வாறு ஓர் அடியில் நான்கு சீர்களிலும் முதல் எழுத்து ஒன்றிவருவது **முற்று மோனை ஆகும்.** இவற்றுடன், வருக்க மோனை, நெடில் மோனை, இனமோனை என மேலும் மூன்றுவகை மோனைகள் உண்டு.

அணிமலர்	அசோகின்	தளிர்நலங்	கவற்றி	— 1–2	இணை மோனை
அரிக்குரல்	கிண்கிணி	அரற்றும்	சீறடி	— 1–3	பொழிப்பு ,,
அம்பொன்	கொடிஞ்சி	நெடுந்தேர்	அகற்றி	— 1–4	ஒரூஉ ,,
அகன்ற	அங்கம்	அந்நண்	மருங்குல்	— 1, 2, 3	கூழை ,,
அருளிய	செங்கை	அவ்வளை	அமைத்தோள்	— 1, 3, 4	மேற்கதுவாய் ,,
அவிர்மதி	அனைய	திருநுதல்	அரிவை	— 1, 2, 4	கீழ்க்கதுவாய் ,,
அயில்வேல்	அனுக்கி	அம்பலைத்(து)	அமர்ந்த	— 1, 2, 3, 4	முற்று ,,
கருங்கயல்	நெடுங்கண்	நோக்கம்......			

இச்செய்யுளில், ஒவ்வோரடியிலும் முதல் எழுத்து ஒன்றி வந்திருப்பது அடி மோனை எனப்படும். மேற்குறிப்பிட்ட பிற எழுவகையான மோனை விகற்பங்களும் இவ்வடிகளில் அமைந்திருத்தல் காண்க.

4. அடிவகை

செய்யுளில் அசைகளினால் சீர்கள் அமைகின்றன, சீர்களினால் அடிகள் (ஓர் அடி என்பது செய்யுளில் ஒரு வரி என்பதாகும்.) அமைகின்றன. இவ்வாறு அமையும் அடிகள், குறளடி, சிந்தடி, அளவடி அல்லது நேரடி, நெடிலடி, கழி நெடிலடி என ஐந்து வகைப்படும்.

குறளடி :

'மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும்'

இச்செய்யுள் இரு சீர்களால் ஆன அடிகள் ஐந்தினைக் கொண்டது. இரு சீர்களால் அமைந்த அடி **குறளடி** எனப்படும். இச்செய்யுளின் ஒவ்வோர் அடியும் குறளடியாகும். (குறள்–குறுகியது).

சிந்தடி :

'சோலை யார்ந்த சுரத்திடைக்
காலை யார்கழ லார்ப்பவும்
மாலை மார்பன் வருமாயின்
நீல வுண்க ணிவள்வாழும்'

இச்செய்யுள் மூன்று சீர்களால் ஆன அடிகள் நான்கினைக் கொண்டது. மூன்று சீர்களால் அமைந்த அடி

சிந்தடி எனப்படும். இச்செய்யுளின் ஒவ்வோர் அடியும் சிந்தடியாகும்.

அளவடி :

'தேம்பழுத்து இனியநீர் மூன்றும் தீம்பலா
மேம்பழுத்(து) அளிந்தன சுளையும் வேரியும்
மாம்பழக் கனிகளும் மதுத்தண் டட்டமும்
தாம்பழுத் துளசில தவள மாடமே'

இச்செய்யுள் நான்கு சீர்களால் ஆன அடிகள் நான்கினைக் கொண்டது. நான்கு சீர்களால் அமைந்த அடி **அளவடி** எனப்படும். அளவடி என்பதற்கு **நேரடி** என்னும் மற்றொரு பெயரும் உண்டு.

நெடிலடி :

'காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையால் திசைபோய துண்டே.'

இச்செய்யுள் ஐந்து சீர்களால் ஆன அடிகள் நான்கினைக் கொண்டது. ஐந்து சீர்களால் அமைந்த அடி **நெடிலடி** எனப்படும்.

கழிநெடிலடி :

"தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து
தண்டூன்றித் தளர்வார் தாமும்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து
நாற்கதியிற் சுழல்வார் தாமும்

ஊழ்ந்த பிணிநலிய முன்செய்த
வினையென்று முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து
நெறிமுன்னி முயலா தாரே"

இச்செய்யுள் ஆறு சீர்களால் ஆன அடிகள் நான்கினைக் கொண்டது. ஆறு சீர்களால் அமைந்த அடி **அறுசீர்க் கழிநெடிலடி** எனப்படும்.

ஏழு சீர்களால் அமைந்த அடி **எழுசீர்க் கழிநெடிலடி** எனவும், எட்டுச் சீர்களால் அமைந்த அடி **எண்சீர்க்கழிநெடிலடி** எனவும், ஒன்பது சீர்களால் அமைந்த அடி **ஒன்பதின் சீர்க் கழிநெடிலடி** எனவும், பத்துச் சீர்களால் அமைந்த அடி **பதின்சீர்க் கழிநெடிலடி** எனவும்கூறப்படும். பத்துச் சீரடிகளுக்கு மேற்பட்ட சீர்களையுடைய அடிகளும் உண்டு. ஆனல், எட்டுச் சீர்களின் மிக்க சீரால் வரும் அடிகள் சிறப்பில.

பாக்களுக்குரிய அடிச் சிறுமை பெருமைகள் :

1. வெண்பாவில் இரண்டடியே சிறுமையாகும். அதாவது இரண்டடிக்குக் குறைந்த வெண்பா ஒன்றுமில்லை.

2. வஞ்சிப்பாவிற்கு மூன்றடியே சிறுமையாகும். இதற்கும் குறைந்து இச்செய்யுள் இயற்றுதல் இயலாது. (மிக அருமையாக இரண்டடியில் வருதலும் உண்டு.)

3. ஆசிரியப்பாவிற்கு மூன்றடியே சிறுமையாகும். மூன்றடியினும் குறைந்த ஆசிரியப்பா இல்லை. (மிக அருமையாக இரண்டடிச் சுரிதகமாய் வருதலும் உண்டு).

4. கலிப்பாவிற்கு நான்கடியே சிறுமையாகும். நான்கடியினும் குறைந்து கலிப்பா இயற்றுதல் இயலாது.

5. கட்டளைக் கலித்துறை *

'கோளப் பகல்களி றென்றுகற் புய்யக் குழாம்விரிந்த
நீலக்கங் குல்களி றெல்லா நிறைந்தன நேரிழையீர்
ஞாலப்பொன் மாதின் மணாளன் றுழாய்நங்கள் சூழ் [குழற்கே
ஏலப்புனைந்தென்னை மாரெம்மை நோக்குவ தென்று [கொலோ'

இது நேரசையை முதலாகக் கொண்டு நெடிலடியாக உள்ள நான்கடிகளைக்கொண்ட **கட்டளைக் கலித்துறை** யாகும்; ஓகாரத்தை ஈற்றில் பெற்றிருக்கிறது. அடி தோறும் பதினாறெழுத்துப் பெற்றுள்ளது.

'குறளடி நான்கின மூன்றொரு தாழிசை கோதில்வஞ்சித்
துறையொரு வாது தனிவரு மாய்விடிற் சிந்தடிநான்
கறைதரு காலை யமுதே விருத்தந் தனிச்சொல்வந்து
மறைதலில் வாரத்தி னாலிரும் வஞ்சிவஞ் சிக்கொடியே'

இது நிரையசையை முதலாகக் கொண்டு நெடிலடியாக உள்ள நான்கடிகளைக் கொண்ட கட்டளைக் கலித்துறையாகும். ஏகாரத்தை ஈற்றில் பெற்றிருக்கிறது. அடிதோறும் பதினேழு எழுத்துப் பெற்றுள்ளது.

கட்டளைக் கலித்துறை என்பது நான்கடியாய் ஒவ்வோரடியிலும் ஐந்து சீர்களைப் பெறும். மாச்சீர், விளச்சீர் நேர் நடுவாகிய காய்ச்சீர்களை முதல் நான்கு சீர்களாகப் பெறும். ஈற்றில் நிரை நடுவாகிய காய்ச்சீரைப் பெறும். ஒவ்வோரடியிலும் முதல் நான்கு சீர்கள் வெண்டளை பொருந்தி நிற்கும். கடைச்சீர் கூவிளங்காய் கருவிளங்காய் என்பனவற்றுள் ஒன்றைப்

பொருந்தப் பெறும். நேரசை முதலாகத் தொடங்கிய அடிகள் ஒவ்வொன்றிலும் ஒற்று நீக்கிப் பதினாறெழுத்தும், நிரையசை முதலாகத் தொடங்கிய அடிகள் ஒவ்வொன்றிலும் ஒற்று நீக்கிப் பதினேழு எழுத்தும் பொருந்தப் பெறும். இங்ஙனம் எழுத்துக்களை எண்ணி வகுத்த படியால் இதற்குக் கட்டளைக் (அளவு) கலித்துறை எனப் பெயர் வழங்கியது. இதற்கு, "திலதக் கலித்துறை" "கோவைக் கலித்துறை" என வேறு பெயர்களுமுண்டு. விருத்தம் எனவும் இதற்குப் பெயர் வழங்கப்படுகிறது. கட்டளைக் கலித்துறையில் நான்கடியினுஞ் சீர்கள் அளவொத்து இருத்தல் வேண்டுமென்னும் நியதியில்லை. அது பெரும்பான்மை ஏகாரத்தையும், சிறுபான்மை ஓகாரத்தையும் ஈற்றில் பெற்றுவரும்; மெய்யெழுத்தை ஈற்றில் பெற்று வருதலும் உண்டு.

(**தாழிசைகளின் இலக்கணம்** பின்னால் வரும் பாவினங்களின் பொது இலக்கணம் எனும் தலைப்பில் வந்திருத்தல் கண்டு படித்துணர்க.)

6. பாவினங்களின் பொது இலக்கணம் *

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா எனச் செய்யுள், ஐந்து வகைப்படும் என்பதை முன்னரே படித்திருக்கிறீர்கள்.

இந்த ஐந்தில் முதல் நான்கு வகைப் பாக்களுக்குத் தனித்தனி மூன்று இனமுண்டு. அவை, **துறை, தாழிசை, விருத்தம்** எனப்படும். இவை மூன்றும் பா இனம் எனப்படும். இவற்றின் பொது இலக்கணம் அறிவோம்:

1. வெண்பா இனம்

1. வெண்செந்துறை :

'கொன்றை வேய்ந்த செல்வன் அடியிணை
என்று மேத்தித் தொழுவோம் யாமே'

இச்செய்யுள் தம்முள் அளவொத்த இரண்டடி களுடையதாய், விழுமிய பொருளும் ஒழுகிய ஓசை யுமுடையதாய் வந்துளது. இப்படி வரும் செய்யுள் **வெண் செந்துறை** எனப்படும். இது **செந்துறை வெள்ளை** எனவும் கூறப்படும். வெண்பாவின் இனங்களுள் இஃதொன்று.

2. குறள்தாழிசை :

'அறுவர்க் கறுவரைப் பெற்றுங் கவுந்தி
மறுவறு பத்தினி போல்வையி னீரே'

இச்செய்யுள் விழுமிய பொருளும் ஒழுகிய லோசையு மின்றி இரண்டடிகளும் தம்முள் ஒத்து வந்தமையால் இது **குறள் தாழிசை** எனப்படும்.

செப்பலோசையிற் சிதைந்து, வேற்றுத்தளை தட்டுக் குறள் வெண்பாவிற் சிதைந்து வருவனவும், வெண் செந்துறை யில் சிதைந்து வருவனவும் **குறள் தாழிசை** எனப்படும்.

3. வெண்டுறை :

'குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட்
குலைமேற் பாய
அழலெரியின் மூழ்கினவா லந்தோ வளியவென்
றயல்வாழ் மந்தி
கலுழ்வனபோ னெஞ்சயர்ந்து கல்லருவி தூஉம்
நிழல்வரை நன்னாட னீப்பானோ வல்லன்'

இச்செய்யுள் நான்கடியாய் ஈற்றடி ஒவ்வொன்றும் இரு சீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை ஆகும்.

மூன்று அடிச் சிறுமையாய், ஏழடியில் மிகாமல், இடை இடை நான்கடியாலும், ஐந்தடியாலும், ஆறடியாலும் வந்து பின்னடிகளில் சில சீர் குறைந்து வருவன **வெண்டுறை** எனப்படும்.

4. வெண்டாழிசை :

‘நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யார்
அன்பு வேண்டு பவர்’

இச் செய்யுள், மூன்றடி ஆசிரியத் தளையால் வந்த **வெண்டாழிசையாகும்.**

மூன்றடியாய் ஈற்றடி வெண்பாவே போல முச்சீரடியால் முடிவது **வெண்டாழிசை** எனப்படும். இது **வெள்ளொத்தாழிசை** என்றும் வழங்கப்படும். இதில் வெண்டளையும், வேற்றுத்தளையாகிய ஆசிரியத்தளை முதலியனவும் விரவி வரும்.

சிந்தியல் வெண்பா ஒரு பொருள்மேல் மூன்று அடுக்கி வரின், அதுவும் வெண்டாழிசை என்றே கூறப்படும். ஆனால், இதில் வேற்றுத்தளை விரவி வருதலே கூடாது. எனவே, வெண்டாழிசை என்பது தனித்தும், ஒரு பொருள் மேல் மூன்றடுக்கியும் வரும்.

5. வெளி விருத்தம் :

கொண்டன் முழங்கினவால் கோபம்
பரந்தனவால்—என்செய்கோயான்

வண்டு வரிபாட வார்தளவம்
பூத்தனவால்—என்செய்கோயான்
எண்டிசையுந் தோகை யியைந்தகவி
ஏங்கினவால்—என்செய்கோயான்

இச்செய்யுள் மூன்றடியால் அடிதோறும் ஒரு சொல்லைத் தனிச் சொல்லாகப் பெற்று வந்த **வெளி விருத்தம்** ஆகும்.

இவ்வாறு மூன்றடியாலும் நான்கடியாலும் அடிதோறும் தனிச் சொல் பெற்று வருவது **வெளி விருத்தம்** எனப்படும்.

2. ஆசிரியப்பா இனம்

1. ஆசிரியத் துறை :

'கரைபொரு கான்யாற்றங் கல்லதர் எம்முள்ளி
வருவிராயின்
அரையிருள் யாமத் தடுபுலியேறு நும்மஞ்சி யகன்று
போக
நரையுரு மேறுநுங் கைவே லஞ்சி நும்மை
வரையர மங்கையர் வெளவுத லஞ்சுதும் வாரலையோ.'

இச்செய்யுள், நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து மற்றெல்லா அடிகளும், ஒத்து வந்த **ஆசிரியத் துறை** ஆகும்.

நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து இடை மடக்காய் வருவனவும், நான்கடியாய் இடையிடை குறைந்து வருவனவும், நான்கடியாய் இடையிடை குறைந்து இடைமடக்காய் வருவனவும் ஆசிரியத் துறை எனப்படும். சீர் வரையறுத்திலாமையால் எனைத்துச் சீரானும் அடியாய் வரப்பெறும்.

முதலடியும் மூன்றுமடியும் பதினன்கு சீராயும், ஏனைய அடி யிரண்டும் பதினறு சீராயும் இடையிடையே குறைந்தும் ஆசிரியத்துறை அமையும்.

2. ஆசிரியத் தாழிசை :

‘வானுற நிமிர்ந்தனை வையக மளந்தனை
பான்மதி விடுத்தனை பல்லுயி ரோம்பினை
நீனிற வண்ணநின் னிரைகழல் தொழுதனம்’

இச்செய்யுள் மூன்றடியாய்த் தம்முள் அளவொத்துத் தனித்து வந்துள்ள **ஆசிரியத் தாழிசை** ஆகும்.

இவ்வாறு தாழிசை தனித்து வருதலின்றி, ஒரு பொருள்மேல் மூன்றடுக்கியும் வரும்.

தம்முள் அளவொத்த மூன்றடியாய்த் தனித்தேனும், ஒரு பொருள்மேல் மூன்றடுக்கியேனும் வருவது ஆசிரியத் தாழிசையாகும். இதில் அடிகள் எத்தனை சீராயினும் பெறலாம். பாடுவோரின் அறிவுத் திறனுக்கேற்ப அதற்கு அளவு அமையும்.

3. ஆசிரிய விருத்தம் :

‘இரைக்கு மஞ்சிறைப் பறவைக ளெனப்பெய
 ரினவண்டு புடைசூழ
நுரைக்க ளென்னுமக் குழம்புக டிகழ்ந்தெழ
 நுடங்கிய விலயத்தால்
திரைக்க ரங்களிற் செழுமலைச் சந்தனத்
 திரள்களைக் கரைமேல்வைத்
தரைக்கு மற்றிது குணகடற் றிரையொடு
 பொருதல தவியாதே’

இச்செய்யுள் அறுசீர்க்கழிநெடிலடியால் வந்த **ஆசிரிய விருத்தம்** ஆகும். இதில் ஒவ்வோரடியும் ஆறு சீர்களைப் பெற்றுள்ளது.

கழிநெடிலடி நான்காய்த் தம்முள் அளவொத்து வருவன ஆசிரிய விருத்தம் எனப்படும். (கழி நெடில் அடி : ஒவ்வோர் அடியிலும் ஆறும் அதற்கு மேற்பட்டும் சீர்களைக் கொண்டது.)

3. கலிப்பா இனம்

1. கலித்துறை :

'வென்றான் வினையின் தொகையாக விரிந்து தன்கண்
ஒன்றாய்ப் பரந்த உணர்வின் னொழியாது முற்றுஞ்
சென்றான் திகழும் சுடர்சூழ் ஒளிமூர்த்தி யாகி
நின்றா னடிக்கீழ்ப் பணிந்தார் வினைநீங்கி நின்றார்'

இச்செய்யுள் ஐந்து சீர்களைக் கொண்ட நெடிலடி நான்கு கொண்ட **கலித்துறை** ஆகும்.

நெடிலடிகள் நான்கு தம்முள் அளவொத்து வருவன கலித்துறை எனப்படும்.

2. கலித்தாழிசை :

'வாள்வரி வேங்கை வழங்குஞ் சிறுநெறியெங்
கேள்வரும் போழ்தில் எழால்வாழி வெண்டிங்காள் !
கேள்வரும் போழ்தில் எழாலாய்க் குறுலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்திங்காள் !'

இச்செய்யுளில் முதல் மூன்றடிகளும் தம்முள் அளவொத்து வந்திருக்கின்றன. இறுதி அடிமட்டும் ஐந்து சீர்கள் கொண்ட நெடிலடியாக வந்துள்ளது. இஃது ஈற்றடி மிகுந்து ஏனையடி மூன்றும் ஒத்து வந்த **கலித்தாழிசை**

ஆகும். இது, தனித்து வருதலின்றி, இரண்டிரண்டடிக ளாய் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கியும் வரும்.

இவ்வாறு, இரண்டு முதலிய பல அடிகளால், ஈற்றடி மிகுந்து ஏனையடி தம்முள் அளவொத்தும் ஒவ்வாதும், தனித்தும், ஒரு பொருள்மேல் மூன்றடுக்கியும், ஈற்றடி மிகுந்து இரண்டாமடி குறைந்து, முதலடியும் மூன்றுமடியும் ஒத்தும் பலவகையாக வருவன **கலித்தாழிசை** எனப்படும்.

3. கலிவிருத்தம் :

‘வேய்தலை நீடிய வெள்ளி விலங்கலின்
ஆய்தலின் ஒண்சுட ராழியி னன்றமர்
வாய்தலின் நின்றனர் வந்தென மன்னர்முன்
நீதலை நின்றுரை நீள்கடை காப்போய்’

இச்செய்யுள் நான்கு சீர்களைக் கொண்ட அளவடிகள் நான்கினையுடைய **கலி விருத்தம்** ஆகும்.

இவ்வாறு நாற்சீரடி நான்காய் வருவது கலிவிருத்தம் எனப்படும்.

4. வஞ்சிப்பா இனம்

1. வஞ்சித்துறை :

‘திரைத்த சாலிகை
நிரைத்த போனிரைந்
திரைப்பத் தேன்களே
விரைக்கொள் மாலையாய்’

இச்செய்யுள் **வஞ்சித்துறையாகும்**. குறளடி (இருசீரடி) நான்காய் ஒரு பொருள்மேல் ஒன்றாய்த் தனியே வருவது **வஞ்சித்துறை** எனப்படும்.

2. வஞ்சித்தாழிசை :

'மடப்பிடியை மதவேழம்
தடக்கையால் வெயில்மறைக்கும்
இடைச்சுரம் இறந்தார்க்கே
நடக்குமென் மனனேகாண்'

'பேடையை இரும்போத்துத்
தோகையால் வெயில்மறைக்கும்
காடகம் இறந்தார்க்கே
ஓடுமென் மனனேகாண்'

'இரும்பிடியை இகல்வேழம்
பெருங்கையால் வெயில்மறைக்கும்
அருஞ்சுரம் இறந்தார்க்கே
விரும்புமென் மனனேகாண்.'

இச்செய்யுள் இருசீரடி நான்காய் ஒரு பொருள்மேல் மூன்று செய்யுள் அடுக்கி வந்த **வஞ்சித்தாழிசை** ஆகும். தனிச் செய்யுளாக வஞ்சித்தாழிசை வருதல் இல்லை.

3. வஞ்சி விருத்தம் :

'இருது வேற்றுமை இன்மையால்
சுருதி மேற்றுறக் கத்தினோடு
அரிது வேற்றுமை யாகவே
கருது வேற்றடக் கையினாய்'

இது சிந்தடியால் (முச்சீரடி) வந்த **வஞ்சி விருத்தம்** ஆகும். இவ்வாறு, மூன்று சீர்களைக்கொண்ட அடிகள் நான்கு வருவது வஞ்சி விருத்தம் எனப்படும்.

7. இசைப்பாட்டு வகை

(கண்ணி, கும்மி, கீர்த்தனை)

கண்ணி :

'அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே'
— தாயுமானவர்

'ஊக்கமும் உளவலியும் உண்மையிற் பற்றுமில்லா
மாக்களுக் கோர்கணமும் கிளியே வாழத் தகுதி
யுண்டோ'
— பாரதியார் – கிளிக்கண்ணி

'அணுவி லணுவா யிருந்தார் வெண்ணிலாவே எங்கும்
ஆகிநின்ற வண்ண மென்ன வெண்ணிலாவே'
— இராமலிங்க அடிகள்.

முடியும் சொல்லைக் கொண்டே கண்ணிகளுக்குப் பெயர் வழங்கப்படும். முதலிலிருப்பது பராபரக் கண்ணி எனவும், இரண்டாவது கிளிக்கண்ணி எனவும், மூன்றாவது வெண்ணிலாக் கண்ணி எனவும் வழங்கப்படுகிறது.

கண்ணி என்பது இசைப் பாட்டாகும். பெரும்பான்மை நாற்சீரடிகள் இரண்டு தம்முள் அளவொத்து வரும். அடிகளும் சீர்களும் தம்முள் அளவொத்து, எதுகை, மோனை நயங்களுடன் அமைந்திருந்தால், இசைக்குப் பொருந்தி இனிய சந்தத்துடன் விளங்கும். பெரும்பான்மைக் கண்ணிகள் ஈற்றில் ஏகாரம் பெறும். சிறுபான்மை ஓகாரம் பெறுதலும் உண்டு. அடிகளும் சீர்களும் சிறுபான்மை அளவு ஒவ்வாமலும் சந்தத்தையொட்டிக் கழிநெடிலடி இரண்டு பெற்றும் வருதல் உண்டு. சில கண்ணிகள் முதலடியிலோ,

இரண்டாம் அடியிலோ தனிச் சொல் பெற்றுவரும். கலித் தளையும் வெண்டளையும் விரவிவரும். தரவு கொச்சகத் திலாவது, கலித் தாழிசையிலாவது இக்கண்ணிகள் பெரும் பாலும் பாடப்படுகின்றன. கண்ணிகள் ஒன்ரேடொன்று கண்ணுற்று நிற்றலின் இக்காரணப் பெயர் பெற்றன.

கீர்த்தனை : **இராம நாடகக் கீர்த்தனை**

இராகம் – செஞ்சுருட்டி. தாளம் – ஆதி.

பல்லவி

ஆரடா குரங்கே — இங்கே வந்த நீ
ஆரடா குரங்கே.

அநுபல்லவி

ஆரடா குரங்கே அறிவாயோ இலங்கை
வாரசிங் காதனம் போல் வாலிட் டென்னிலும்
மேலிட்டிருக்கிருய் (ஆரடா)

சரணங்கள்

1. அச்சம் இல்லாமல் அடங்கிச் செல்லாமல்
நிச்சவன கிங்கரர் நிறுத்த நில்லாமல்
நிசா சரர்களும் அசோக வனமும்
திசாதிசையில்விழ வீசி எறிந்தநீ (ஆரடா)

2. * * *

3. நிந்தனை சீச்சீ நீ ஒரு பூச்சி
இந்திரசித்தன் உனை எதிர்த்ததென் கண்காட்சி
இடிக்கவோ கட்டி அடிக்கவோ பல்லால்
கடிக்கவோ இரத்தம் குடிக்கவோ நீ (ஆரடா)

இந்தக் **கீர்த்தனை,** பல்லவி, அநுபல்லவி, சரணம் எனும் மூன்று உறுப்புக்களைப்பெற்று வந்துளது. சரணங் களின் அடிகள் இரண்டடி எதுகை பெற்றுள்ளன.

இசையரங்குகளிலும், நாடக அரங்குகளிலும் இக் காலத்தில் பெரும்பான்மை கீர்த்தனைகளே இசைநயத்துடன் பாடப்படுகின்றன.

கீர்த்தனைகள், பெரும்பாலும் பல்லவி, அநுபல்லவி, சரணம் எனும் உறுப்புக்களைப் பெற்றுவரும். சிறுபான்மை அநுபல்லவி இன்றியும் வரும். சரணங்கள் இத்தனையடிகள் என்ற வரையறை இல்லை. பாடுவோர் அறிவாற்றலைப் பொருத்ததே அளவாகும். சரணங்கள் தனிச் சொல் பெற்றும் பெறாமலும் வரும். கண்ணிகளைப் போலவே சரணங்களும் இரண்டிரண்டு அடிகளால் வரும். சரணங்களின் அடிகள், எதுகை மோனைகளைப் பெற்றிருத்தல் நயமாகும். முதல் அடியின் ஈற்றிலும் மூன்றாவது அடியின் ஈற்றிலுமாக வழி எதுகை யமைத்தலும் சிறப்பாயிருக்கும். முதனிலை, இடைநிலை, இறுதிநிலை என்பன எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்றாகிப் பின்னர்ப் பல்லவி, அநுபல்லவி, சரணம் என்றாயிற்று எனக் கூறப்படுகிறது.

கும்மி : ஞானக்கும்மி

பல்லவி

கும்மியடி பெண்ணே கும்மியடி — கருங்
கொண்டை குலுங்கவே கும்மியடி.

அனுபல்லவி

நெல்லியிருக்கு காட்டுக்குள்ளே — கரு
நெல்லியிருக்குது வீட்டுக்குள்ளே — இதைச்
சொல்லிக் கும்மியடியுங்கடி. (கும்மியடி)

சரணங்கள்

1. ஆதியு மந்தமும் ஒன்றாகி — வள
ரண்ட பிண்டமும் இரண்டாகி

சாதிபலபல வேருகி — நின்ற
தத்துவங் கேளடி ஞானப் பெண்ணே (கும்மியடி)

2. எண்சாண் நீளமொரு வீடாம் — அதில்
எட்டொரு பீற்றல் மலக்கூடாம்
பஞ்சாயக் கார ரைந்துபேருந் தெய்வப்
பதியி தென்கிருர் ஞானப் பெண்ணே. (கும்மியடி)

3. தாடிவளர்த்துச் சடைவளர்த்து — நல்ல
சந்நியாசி யென்ருெரு வேடமிட்டு
ஓடித் திரிந்த விளையாட்டை இங்கே
ஒப்புவ தாரடி ஞானப் பெண்ணே. (கும்மியடி)

4. சமய பேதமும் ஆசையடி — கங்கா
ஸ்நான பூசையும் ஆசையடி
மமதை யற்றிருக்கின்ற மமதையை
வாழ்த்திக் கும்மியடி யுங்கடி. (கும்மியடி)

கும்மி என்பது இசைப்பாட்டு வகையைச் சேர்ந்த தாகும். இது, கீர்த்தனைக் குரிய உறுப்புக்களையே பெரும் பான்மை பெற்று வரும். கும்மியானது, பல்லவி, அநு பல்லவி முதலியவற்றைப் பெருமல் வெறுங்கண்ணிகளாகத் தொடர்ந்து பல கண்ணிகள் பாடப் பெறுதலும் உண்டு. இது, பெண்கள் கைகொட்டிப் பாடித் தாள அறுப்புக்கு இசையப் பாடும் பாவகை.

கண்ணி, கீர்த்தனை, கும்மி என்னும் பாக்கள் இசைக் குரியவையாகப் பிற்காலத்தவரால் யாக்கப்பட்டு வழக்காற்றில் உள்ளவை. இவை சந்தப் பாக்கள் ஆகும். குறளடி, சிந்தடி வஞ்சிப்பாக்களும், தரவு, கொச்சகங்களும், தாழிசைகளும் இவற்றினை யாக்கப் பெரும்பான்மை பயன்படுகின்றன.

பயிற்சி

1. சீர்கள் எத்தனை வகைப்படும்?
2. எல்லாப் பாக்களிலும் பயின்றுவரக் கூடிய சீர் யாது?
3. தளை என்றால் என்ன?
4. தளைகள் எத்தனை வகைப்படும்?
5. ஆசிரியப்பாவுக்குரிய தளைகள் யாவை?
6. வஞ்சிப்பாவிற்குரிய சீர்களும் தளைகளும் யாவை?
7. "அவமதிப்பும் ஆன்ற மதிப்பு மிரண்டும்
மிகைமக்க ளான்மதிக்கற் பால—நயமுணராக்
கையறியா மாக்க ளிழிப்பும் எடுத்தேத்தும்
வையார் வடித்தநூ லார்."

இச்செய்யுளிலுள்ள சீர்களைப் பிரித்துத் தளை கூறுக.
8. வெண்பா முடிவில் பெறும் வாய்பாடு யாது?
9. தொடை என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?
10. எதுகைத் தொடை, மோனைத் தொடை—விளக்கங் கூறுக.
11. எதுகை எத்தனை வகைப்படும்?
12. வருக்க எதுகை என்றால் என்ன?
13. கூழை மோனை, கூழை எதுகை, ஒரூஉ மோனை ஒரூஉ எதுகை—இவை யாவை?
14. அடிகள் எத்தனை வகைப்படும்?

15. கழிநெடிலடி—என்பதனைச் சான்று கொடுத்து விளக்குக.

16. பாக்களுக்குரிய அடிச் சிறுமை—பெருமைகள் யாவை?

17. பாவினம்—விளக்குக.

18. நான்கு பாக்களையும் சேர்ந்த விருத்தங்களின் இலக்கணத்தைக் கூறி ஏதேனும் ஒரு விருத்தத் திற்குச் சான்று தருக.

19. வஞ்சித் துறைக்கும், வஞ்சித் தாழிசைக்கும் உள்ள வேறுபாடு யாது?

20. ‘அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார் வழுக்கியும் கேடீன் பது’

இஃது என்ன வகைப் பா? இதில் உள்ள எதுகை களைக் குறிப்பிடுக.

21. ‘முன்னரே சாநாள் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கும் நோயுள—கொன்னே
பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதும்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து’

இஃது என்ன வகைப் பாவெனக் குறிப்பிட்டு, இதிலுள்ள மோனைகளை எடுத்தெழுதுக.

22. கண்ணிகள் என்றால் என்ன?

23. கண்ணி, கீர்த்தனை, கும்மி என்பவை எப்பாவகை யைச் சேர்ந்தவை?

24. கட்டளைக் கலித்துறையின் இலக்கணம் யாது?

25. கட்டளைக் கலித்துறை எனும் பெயர் வரக் காரணம் யாது?

6. அணி

மொழியினைச் செய்யுளிலோ உரை நடையிலோ அழகுபட அமைக்க உதவுவது அணி இலக்கணமாகும். ஒன்றைக் கூறும் போது உவமை காட்டிக் கூறுவது அக் கூற்றினை அழகு படுத்துகிறதல்லவா? அதேபோன்று பல வகையில் மொழியை அழகுபட அமைக்கக் கற்பிப்பதே அணி இலக்கணமாகும்.

1. தன்மை நவிற்சி அணி :

'உள்ளங் குளிர உரோமஞ் சிலிர்த்துரையும்
தள்ளவிழி நீரரும்பத் தன்மறந்தாள்—புள்ளலைக்கும்
தேந்தா மரைவயல்சூழ் தில்லைத் திருநடஞ்செய்
பூந்தா மரைதொழுத பொன்.'

இச்செய்யுளில், திருநடனம் செய்யும் தில்லையம்பலவனின் திருவடித் தாமரையை வணங்கிய பொன்னை ஒத்த பெண், நெஞ்சங் குளிர்ந்து, உடல் மயிர் சிலிர்த்து, பேச நாவெழாமல், கண்களில் நீர் வடிய, தன்னையே மறந்து நின்றாள் என உள்ளதை உள்ளபடியே கூறியிருப்பதால் இது **தன்மை நவிற்சி** அணி ஆகும்.

ஒரு பொருளின் தன்மையை நேரில் பார்த்தாற் போலத் தோன்றும்படி உள்ளவாறு விளக்குவதே **தன்மை நவிற்சி அணி** எனப்படும். இது பொருள் தன்மை, குணத் தன்மை, சாதித் தன்மை, தொழில் தன்மை என நான்கு வகைப்படும்.

2. உயர்வு நவிற்சி அணி :

'வந்துமுனி எய்துதலும் மார்பினணி யாரம்
அந்தர தலத்திரவி யஞ்சவொளி விஞ்சக்

கந்தமல ரிற்கடவு டன்வரவு காணும்
இந்திர னெனக்கடி தெழுந்தடி பணிந்தான்'

இச்செய்யுளில் விசுவாமித்திர முனிவன் வந்து சேர்ந்ததும் அவன் மார்பில் அணிந்திருந்த நவரத்தின மாலையானது வானத்திலுள்ள சூரியனும் அஞ்சுமாறு ஒளிமிக, மணம் பொருந்திய தாமரையில் வீற்றிருக்கும் பிரமனின் வருகையைக் கண்ட இந்திரன் போல, தசரதன் விரைந்தெழுந்து அம்முனிவனை வணங்கினான் என்று கூறும் கவி, நவரத்தின மாலையின் ஒளி சூரியன் அஞ்சத் தக்கதாயிருந்தது என்று கூறுவது ஒரு பொருளின் சிறப்பை மிகவும் உயர்த்திக் கூறியதாவதால் இது **உயர்வு நவிற்சி அணி** யாகும்.

இவ்வாறு ஒரு பொருளினிடத்துள்ள சிறப்பைக் கூறுகையில் உள்ளவாறு கூறாமல் மிகவும் உயர்த்தி மிகுதியான தன்மையைக் கொடுத்துக் கூறுவது **உயர்வு நவிற்சி அணி** எனப்படும்.

3. தற்குறிப்பேற்ற அணி :

'மண்படுதோட் கிள்ளி மதயானை மாற்றரசர்
வெண்குடையைத் தேய்த்தவெகுளியால்-விண்படர்ந்து
பாயுங்கொ லென்று பனிமதியம் போல்வதூஉம்
தேயும் தெளிவிசும்பி னின்று'

இச்செய்யுளில் சோழனுடைய மதயானை, பகையரசர்களின் வெண்கொற்றக் குடையைச் சீறிச் சிதைத்த சினத்தாலே, நம்மீதும் வந்து பாயுமோ என்று குளிர்ந்த வானில் இருக்கும் நிறை திங்கள் அஞ்சித் தேய்ந்து கொண்டே வருகிறது என்று கூறப்பட்டிருப்பது **தற்குறிப்பேற்ற அணி** யாகும்.

இதில், நிறைமதி குறைந்துகொண்டே வருதல் இயல்பு. ஆனால், புலவர் சோழனுடைய மத யானையின் சிறப்பை விளக்கக் கருதி, நிறைமதி குறைவது மதயானைக் கஞ்சியே போலும் எனத் தம்முடைய குறிப்பை ஏற்றிக் கூறுகிறார். இவ்வாறு இயல்பாக உள்ள ஒரு பொருளினிடத்துக் கவி தம் குறிப்பை ஏற்றிக் கற்பித்தல் **தற்குறிப்பேற்ற அணி** எனப்படும். இது பெயர்பொருள் தற்குறிப்பேற்றம், பெயராத பொருள் தற்குறிப்பேற்றம் என இருவகைப் படும்.

4. பிறிது மொழிதல் அணி :*

'தண்ணளிசேர் தின்சொல் மருவும் தகைமைத்தாய்
எண்ணிய வெப்பொருளும் எந்நாளும்—மண்ணுலகில்
வந்து நமக்களித்து வாழும் முகிலொன்று
தந்ததான் முன்னைத் தவம்'

இச்செய்யுள் ஒரு வள்ளலுக்கும் மேகத்துக்கும் பொருந்தும்படி அடை விரவிப் பொருள் வேறுபட மொழி யப்பட்டுள்ளது.

குளிர்ந்த கருணையையும் இன் சொல்லையும் பெற்று எல்லாரும் விரும்பிய எல்லாப் பொருளையும் காலம் வரையா மல் கொடுத்து வாழ்பவர் என்று ஒரு வள்ளல்மீது ஏற்றிப் பொருள் கூறலாம். உலக மக்களுக்குக் குளிர்ச்சியுடன் கொடுக்கின்ற கொடை சேர்ந்து நன்றாய புகழ் மருவி, எண் ணப்பட்ட எல்லாப் பொருளையும் எப்பொழுதும் உலகிற்குக் கொடுத்து வாழும், என மேகத்தின்மீது ஏற்றிப் பொருள் உரைக்கலாம்.

இவ்வாறு கவி தான் கருதிய பொருளை மறைத்து அதனை வெளிப் படுத்தற்குத் தக்க பிறிதொன்றைக் கூறு

தல் பிறிது மொழிதலணியாம். இதனை உவமைப் போலி எனவும், ஒட்டணி எனவும் கூறுவர். உவமானத்தை மட்டும் கூறி உவமேயத்தை உணரவைப்பது பிறிது மொழிதல் அணி எனினும் ஒக்கும்.

5. கருத்துடை அடைமொழி அணி :*

"தொடை யூற்றில் தேன்துளிக்கு நறுந்தாரான்
ஒருவண்ணம் துயரம் நீங்கிப்
படையூற்ற மிலன்;சிறியன் இவன்;பெரியோய்!
பணியிதுவேல் பனிநீர்க் கங்கை
புடையூற்றுஞ் சடையானும் புரந்தரனும்
நான்முகனும் புகுந்து செய்யும்
இடையூற்றுக் கிடையூறு யான்காப்பென்
பெருவேள்விக் கெழுக" என்றான் !

இச்செய்யுளில், "இராமன் மிக்க இளம் பருவத்தினன்; படைப் பயிற்சியில் தேர்ச்சிபெறாதவன்; வேள்வியைக் காத்தலே தங்கள் கட்டளையாயின், சிவனும், பிரமனும், இந்திரனும், மற்றைய எவரும் தடுத்தாலும் அவ்வேள்விக்குத் தடை நேராமல் நானே வந்து காக்கின்றேன். வேள்வி செய்யப் புறப்படும்" என்று தசரதன் கூறுகையில், கங்கையாறு முன்னர்ச் சந்து முனிவரின் யாகத்துக்கு இடையூறு செய்தபடியால், அக்கங்கையைச் சடையில் தாங்கிய சிவபெருமான் என்றது அவரும் தடை செய்யக் கூடும் என்ற பொருளைக் குறிப்பாகத் தருவதால் இது கருத்துடையடைமொழியணி ஆகும்.

பயிற்சி

1. அணி இலக்கணமென்றால் என்ன ?
2. தன்மை நவிற்சி யணியின் இலக்கணம் யாது ?

3. "இராமன் அம்பும் அரக்கர் திரளும் ஒருங்கு நாண கன்றோடின"—இதிலமைந்துள்ள அணியாது?
4. தற்குறிப்பேற்ற அணியென்றால் என்ன?
5. பிறிது மொழிதல் அணியின் வேறு பெயர்கள் யாவை?
6. ஒட்டணியின் இலக்கணம் யாது?
7. "தேவர்க்கு மரிய னுகுந் தேவனே யன்ப ராவார்
யாவர்க்கு மெளிய னுகும் ஈசனே வேந்த னுணைக்
காவற்செங் கோலார் சீற்றங் கடுகுமுன் கூலி
யாளாய்
ஏவற்செய் வாரைக் காணேன் ஏழையேன்
இனியென் செய்கேன்"
—இச்செய்யுளில் அமைந்து கிடக்கும் அணி யாது?

7. பொருள் இலக்கணம்*

அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு விழுப் பொருள்களைப் பற்றிய இலக்கணத்தை விளக்கிக் கூறுவது பொருள் இலக்கணமாகும். அஃது **அகம்**, **புறம்** என இருவகைப்படும். தலைவனும் தலைவியும் ஒத்த அன்பினராய் உள்ளத்து உணர்வால் இன்பம் துய்த்து வாழ்ந்த வாழ்க்கையினைத் தெரிவிப்பது **அகம்** எனவும், இன்பம் தவிர்ந்த, அறம் பொருள் வீடு எனும் மூன்றனையும் அனைவரும் அறிந்து, இஃது இவ்வகையினது எனப் பிறர்க்கு எடுத்துரைக்கும் நிலையில் உள்ள அவர் தம் வெளியுலக வாழ்வைப் பற்றிய விவரங்களைத் தெரிவிப்பது **புறம்** எனவும் வழங்கப் பட்டது. அகம், புறம் பற்றிய இலக்கண இலக்கிய நூல்கள் நம் தமிழ் மொழியில் பல இருக்கின்றன.

1. அகப் பொருள்*

(முதல், கரு, உரிப் பொருள் இவை எனல்)*

ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியும் ஒன்றிய மனத்தினராய் நடத்தும் இன்ப இல்வாழ்க்கை **அக வாழ்க்கை** எனப்படும். அவ்வகவாழ்வு நிகழ்ச்சிகள், அவர்கள் வாழ்ந்த நிலங்கள், ஆங்குக் கிடைத்த பொருள்கள், விலங்குகள், பறவைகள், தாவர இனங்கள், அம்மக்கள் தம் நிலை, அவர்களுக்கு வழங்கிய பெயர்கள், அவர்கள் வணங்கிய தெய்வங்கள், அவர்களின் நிலங்களுக்குரிய பெரும்பொழுது, சிறுபொழுது முதலியவற்றை **முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்** எனும் பெயர்களில் விளக்கு வதே **அகப்பொருள் இலக்கணம்** எனப்படும்.

அகப்பொருள், **கைக்கிளை** ஒன்றும், **பெருந்திணை** ஒன்றும், **ஐந்திணை** ஐந்துமாக ஏழு வகைப்படும்.

கைக்கிளை என்பது ஒருதலைச் சார்புடைய அன்பாகும். அன்பற்ற தலைவியிடம் தலைவன் மட்டும் அன்புகொள்வதும், அன்பற்ற தலைவனிடம் தலைவி மட்டும் அன்பு கொள்ளுவது மாகிய ஒருதலைக் காதலே **கைக்கிளை** (கை—பக்கம்; கிளை—கேண்மை, உறவு) என்பது.

வயது முதிர்ந்த ஒருவன் ஓரிள நங்கையை மணந்து கொள்வதாகிய பொருந்தா வாழ்க்கையே **பெருந் திணை** என்பது.. இவ்விரண்டும் அகத்தில் புறம் எனப்படும்.

ஒருவனும் ஒருத்தியும் ஒத்த அன்புடன் நடத்தும் இன்ப வாழ்க்கையே **ஐந்திணை** (ஐந்து கூறுபாட்டாகிய ஒழுக்கம்) என்பது. இது **குறிஞ்சி, மருதம், பாலை, முல்லை, நெய்தல்** என ஐவகைப்படும்.

இவற்றுள், ஒருவனும் ஒருத்தியும் ஒத்த அன்புடன் இன்ப வாழ்வு வாழ்வது குறிஞ்சித்திணை எனவும், பிணங்குதல் மருதத்திணை எனவும், பிரிந்து துயர்ப்படுதல் பாலைத்திணை எனவும், தலைவன் பிரிவைத் தலைவி ஆற்றியிருந்து வாழ்தல் முல்லைத்திணை எனவும், ஒருவர் பிரிவை ஒருவர் ஆற்றவியலாமல் பெரிதும் துயருற்றுவாழ்தல் நெய்தல் திணை எனவும் கூறப்படும்.

அன்புடைக் காதலை விளக்கும் இந்த ஐந்திணைகளுமே அகநூல்களில் விரிவாகச் சிறப்பித்து விளக்கப்பட்டுள்ளன.

அகப் பொருளில் **களவு, கற்பு** என இரு நிகழ்ச்சிகள் விளக்கப்படுகின்றன. திருமணம் ஆகுமுன், தலைவன் தலைவியர் காதல் கொண்டு ஒழுகுதல் களவு வாழ்க்கை என்றும், மணம் முடித்த பின் வாழும் வாழ்க்கை கற்பு வாழ்க்கை என்றும் கூறப்படும். இலக்கண நூலார் முன்னையதைக் **களவியல்** எனவும், பின்னையதைக் **கற்பியல்** எனவும் கூறி, அவை பற்றிய நிகழ்ச்சிகளை விவரித்திருக்கின்றனர். இவற்றுள் ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒரு துறை எனப்படும். இத்தகைய துறைகள் ஏறத்தாழ நானூற்றுக்கு மேற்பட்டவை அக நூல்களில் கூறப்பட்டுள்ளன.

(1) முதற் பொருள் :

முதற்பொருள் என்பது, **நிலமும்** அதற்குரிய **பொழுதும்** ஆகும். **நிலம்** என்பது **குறிஞ்சி, மருதம், பாலை, முல்லை, நெய்தல்** என்னும் ஐவகைத் திணைகளுக்குரிய தாக்கப்பட்டிருக்கிறது.

நிலவகை :

மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சித் திணைக்குரிய நிலமாகும்.

வயலும் வயலைச் சார்ந்த இடமும் மருதத் திணைக்குரிய நிலமாகும்.

வெம்மை மிகுந்த மணற்காடான பொட்டல் வெளிச் சுரமும் சுரத்தைச் சார்ந்த இடமும் பாலைத்திணைக்குரிய நிலமாகும்.

காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லைத்திணைக் குரிய நிலமாகும்.

கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல் திணைக் குரிய நிலமாகும்.

பொழுதுவகை :

பொழுது என்பது பெரும்பொழுது, சிறுபொழுது என இரண்டு வகைப்படும்.

பெரும்பொழுது ஓராண்டிற்குரிய ஆறு பருவங்களாகும். அவை, கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பனவாகும். ஒவ்வொரு பெரும்பொழுதும் இரண்டு மாதகால அளவுடையதாகும்.

சிறு பொழுது ஒரு நாளுக்குரிய ஆறு பகுதிகளாகும். அவை, வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம் என்பனவாகும். ஒவ்வொரு சிறுபொழுதும் நான்கு மணிநேர அளவுடையதாகும்.

திணைகளுக்குரிய பெரும்பொழுது சிறு பொழுதுகள் :

1. கூதிர், முன்பனி (ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை) எனும் பெரும் பொழுதுகளும், யாமம் (இடையிரவு 10 மணி முதல் பின்னிரவு 2 மணி வரை) எனும் சிறு பொழுதும், குறிஞ்சித் திணைக்குரியவை.

2. பெரும் பொழுதுகள் ஆறும், வைகறை (இரவு 2 மணி முதல் விடியற்காலை 6 மணி வரை) எனும் சிறுபொழுதும் மருதத்திணைக்கு உரியவை.

3. வேனில், பின்பனி (மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி) எனும் பெரும் பொழுதுகளும், நண்பகல் (10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை) எனும் சிறு பொழுதும் பாலைத்திணைக்கு உரியவை.

4. கார், (ஆவணி, புரட்டாசி) எனும் பெரும் பொழுதும், மாலை (6 மணி முதல் இரவு 10 மணி வரை) எனும் சிறு பொழுதும் முல்லைத் திணைக் குரியவை.

5. பெரும் பொழுதுகள் ஆறும், காலை, எற்பாடு (காலை :—6 மணி முதல் பகல் 10 மணி வரை; ஏற்பாடு :— பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை) எனும் சிறுபொழுது களும் நெய்தல் திணைக்குரியவை. இவ்வாறு ஐவகைத் திணைகளுக்குமுரிய. நிலங்கள், பெரும் பொழுது, சிறு பொழுது முதலியவை **முதற் பொருள்** எனப்படும்.

(2) கருப்பொருள் :

ஒவ்வொரு திணைக்கும் உரிய (1) தெய்வம், (2) உயர்ந் தவர், (3) தாழ்ந்தவர், (4) பறவை, (5) விலங்கு, (6) ஊர், (7) நீர், (8) பூ, (9) மரம், (10) உணவு, (11) பறை, (12) யாழ், (13) பண், (14) தொழில் என்பவை **கருப்பொருள்** எனப்படும்.

(3) உரிப்பொருள் :

ஒவ்வொரு திணைக்குமுரியவையாக உரிமை பூண்டு நிற்கும் சிறப்பியல்பான நிகழ்ச்சிகள் **உரிப்பொருள்** எனப் படும்.

புணர்தலும், புணர்தல் நிமித்தமும் குறிஞ்சித்திணைக்குரிய உரிப்பொருள்களாம்.

ஊடலும் ஊடல் நிமித்தமும் மருதத்திணைக்குரிய உரிப்பொருள்களாம்.

பிரிதலும் பிரிதல் நிமித்தமும் பாலைத்திணைக்குரிய உரிப்பொருள்களாம்.

இருத்தலும் இருத்தல் நிமித்தமும் முல்லைத்திணைக்குரிய உரிப்பொருள்களாம்.

இரங்கலும் இரங்கல் நிமித்தமும் நெய்தல் திணைக்குரிய உரிப்பொருள்களாம்.

2. புறப் பொருள் *

(திணைகள் - சுருக்கமாக)

ஒத்த அன்பினரான தலைவன் தலைவியராலேயே அன்றி இஃது இத்தகையது என அனைவராலும் உணரப் படும் வகையில், பிறர்க்கு எடுத்துக் கூறத் தக்கவாறுள்ள புற ஒழுக்கத்தை விளக்குவது **புறப்பொருள்** ஆகும். அஃது அறம் பொருள் என்பனவாகும்.

அது, **வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை** எனப் பன்னிரண்டு **திணை**களாக வகுக்கப்பட்டுள்ளன. இத்திணைகள் ஒவ்வொன்றும் பல **துறை**களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அத் திணைகளைப்பற்றி ஈண்டறியலாம்:

1. **வெட்சித் திணை** என்பது பகைவருடைய பசுக்களைக் கவர்தலும் கவர்ந்து சென்ற பசுக்களை மீட்டலும்

ஆகும். (பகைவருடைய நாட்டின்மீது படையெடுக்க விரும்பும் ஓரரசன் தன் வீரர்களை ஏவி, அப்பகைவர் நாட்டுக் கால்நடைகளைக் கைப்பற்றுவான். போர் நடைபெறுகையில் அவை அழியக்கூடாவென்பதற்கான முதல் நடவடிக்கை இது.) கால்நடைகளைக் கவரச் செல்லும் வீரர் வெட்சிப்பூ அணிந்து செல்வர்.

2. **கரந்தைத் திணை** என்பது கவர்ந்து செல்லப்பட்ட கால்நடைகளை மீட்டு வருதல். இதையும் வெட்சி என்றே கூறுதலும் **கரந்தைத் திணை** என்று வேறாகத் தனிப்படுத்திக் கூறுதலும் உண்டு. கால்நடைகளைக் கவர வருபவர்களை எதிர்த்து விரட்டலும், கால்நடைகளை மீட்டலும் இதில் அடங்கும். இதனை வெட்சிக் கரந்தை என்பாருமுளர்.

3. **வஞ்சித் திணை** என்பது பகைவருடைய நாட்டைக் கைப்பற்றக் கருதி, அவர்மேல் போருக்குச் செல்லுதல். இப்படிப் போர்மீது செல்வோர் வஞ்சிப் பூவைச் சூடிச் செல்வர்.

4. **காஞ்சித் திணை** என்பது போருக்கு வந்த மன்னனை எதிர்த்து நின்று ஊன்றுதல். இப்போரில் ஈடுபட்டோர் காஞ்சிப் பூவைச் சூடுதல் மரபு. வீடு பேறு நிமித்தமாகப் பலவகை நிலையாமையைச் சான்றோர் கூறுவதும் **காஞ்சித் திணை**யின் பாற்படும்.

5. **உழிஞைத் திணை** என்பது, அரசன் மாற்றானின் கோட்டை மதிலை வளைத்துப் போரிடுதலும், கோட்டைக்குள் நுழைய முயலுதலும், அதற்கெனப் போரிடலுமாகும். இம் முயற்சியிலீடுபட்டோர் உழிஞைப் பூவைச் சூடுதல் மரபு. வளைத்துக் கொள்ளப்பட்ட மதிலைக் காத்துக்கொள்ளுதலையும் இத்திணையிற் சேர்ப்பர்.

6. **நொச்சித் திணை** என்பது தம் கோட்டை மதிலைக் காத்துக்கொள்வதற்காகக் கோட்டைக் குள்ளிருக்கும் அரசனும் வீரரும் முயலுதல் ஆகும். இதனை உழிஞைத் திணையில் சேர்த்துக் கூறுதலும் உண்டு. உள்ளிருந்த வண்ணம் மதிலைக் காக்க முயல்வோர் நொச்சிப் பூவைச் சூடுதல் மரபு.

7. **தும்பைத் திணை** என்பது இருதிறத்துப் படைகளும் போரிடுதல் ஆகும். இவ்வாறு போரில் ஈடுபட்டுள்ள இருதிறத்தாரும் தும்பைப் பூவைச் சூடிக் கொள்ளுவர்.

8. **வாகைத் திணை** என்பது பகைவரை வெல்லுதலாகும். போரில் ஈடுபட்டு வெற்றிபெற்ற அரசன், வீரர்களாகியோரின் இயல்பினையும், ஆற்றலையும், வீரத்தையும் சிறப்பித்து மிகுதிப் படுத்திப் பாராட்டுதல் ஆகும். வெற்றி கொண்டாடுவோர் வாகைப் பூவை அடையாளமாகச் சூடிக் கொள்ளுதல் மரபாகும்.

9. **பாடாண் திணை** என்பது ஒருவருடைய வலிமை வெற்றி, கொடை, கருணை, புகழ் முதலியவற்றை ஆராய்ந்து புகழ்தல் ஆகும்.

10. **பொதுவியல்** என்பது புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவாயுள்ளனவும், அத்திணைகளிற் கூறப்படாதனவுமாகிய செய்திகளைக் கூறுவது.

11, 12. கைக்கிளை, பெருந்திணை என்பவைபற்றி அகப் பொருளில் கூறப்பட்டன. இவை, அகப்புறம் என்று கூறப்படும்.

இத்திணைகள் பல துறைகளாகப் பகுக்கப்பட்டுப் புற நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

பயிற்சி

1. பொருள் இலக்கணம் என்பது யாது? அது எத்தனை வகைப்படும்?
2. அகப் பொருள் எதனை விளக்குகிறது?
3. முதல், கரு, உரிப் பொருள்களென்பன யாவை?
4. ஐந்திணைக்குரிய நிலங்கள் யாவை?
5. பெரும் பொழுது, சிறு பொழுது என்பவை யாவை?
6. பாலைத் திணைக்குரிய பெரும் பொழுது, சிறு பொழுதுகள் யாவை?
7. முன்பனி, கார், யாமம், வைகறை என்பன எவ்வெத்திணைக்குரிய பொழுதுகள்?
8. மருதம், நெய்தல் ஆகிய திணைகளுக்குரிய உரிப் பொருள்கள் யாவை?
9. புறப் பொருள் எதனை விளக்குகிறது?
10. புறத்திணைகள் எத்தனை வகைப்படும்?
11. வெட்சி, கரந்தைத் திணைகளை விளக்குக.
12. மாற்றானின் கோட்டை மதிலை வளைத்துப் போரிடுதலும், வளைக்கப்பட்ட கோட்டையைக் காத்தலும் எத்திணைகளாகும்?
13. வாகைப் பூவைச் சூடிச் செல்லும் மரபு விளக்குவது யாது?
14. பாடாண் திணை என்பது யாது?
15. பொதுவியலிற் கூறப்படும் செய்திகள் யாவை?

மொழிப் பயிற்சி

1. வாக்கியம் - பலவகைகள்

பொருள் தெளிவாக விளங்குமாறு சொற்களைக் கோவையாக்குவது சொற்றொடர் அல்லது வாக்கியம் எனப்படும். இது தனி வாக்கியம் (Simple Sentence), தொடர் வாக்கியம் (Compound Sentence), கலவை வாக்கியம் (Complex Sentence) என மூன்று வகைப்படும்.

செய்தி வாக்கியம் (Assertive Sentence), கட்டளை வாக்கியம் (Imperative Sentence), வினா வாக்கியம் (Interrogative Sentence), உணர்ச்சி வாக்கியம் (Exclamatory Sentence), செய்வினை வாக்கியம், செய்யப்பாட்டு வினை வாக்கியம், உடன்பாட்டு வாக்கியம், எதிர்மறை வாக்கியம் என்பன தனிவாக்கியத்தில் அடங்குபவை யாகும்.

1. தனி வாக்கியம் :

'தமிழர்கள் தனிப் பண்பு உடையவர்கள்'—இது பொருள் தெளிவாக உள்ள ஒரு **தனி வாக்கியம்**. இதனை முதல் வாக்கியம் (Principal clause) எனலாம். இவ்வாறு ஒரே எழுவாய் பயனிலையுடன் கூடியதாக அமையும் வாக்கியம் **தனி வாக்கியம்** எனப்படும்.

2. தொடர் வாக்கியம் :

'தமிழர்கள் தனிப்பண்பு உடையர்கள்; வீரத்திற் சிறந்தவர்கள்; போருக்கஞ்சாதவர்கள்; விருந்தோம்பலில் தலைசிறந்தவர்கள்.'

இதில் நான்கு முதல் வாக்கியங்கள் தொடர்ந்து வந்துள்ளன. ஒரே எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டிருக்கிறது. இவ்வாறு வருவது **தொடர் வாக்கியம்** எனப்படும்.

3. கலவை வாக்கியம் :

'நாம் தலை சிறந்து விளங்கவேண்டுமானால், நம் மூதாதையரின் வழிநின்றொழுகுதல் வேண்டும்.'

இதில், 'நாம் நம் மூதாதையரின் வழி நின்றொழுகுதல் வேண்டும்' என்பது தனி அல்லது முதல் வாக்கியம். 'தலை சிறந்து விளங்க வேண்டுமானால்' என்பது துணை வாக்கியமாகும்.

இவ்வாறு ஒரு தனி அல்லது முதல் வாக்கியம் துணை வாக்கியத்துடன் இயைந்து வருவது **கலவை வாக்கியம்** எனப்படும்.

போ என்பது ஒரே எழுத்தாக இருப்பதுபோல, ஓர் எழுத்து ஒரு மொழியாகவும் விளங்குகிறது. அதே போன்று ஒரு வாக்கியமாகவும் விளங்குகிறது. போ என்பது நீ போ எனின் முழு வாக்கியம். போ எனும் வாக்கியத்தில் நீ என்பது தோன்றா எழுவாய். ஏவலில், இவ்வாறு போ, வா, தா என்னும் தனி எழுத்துக்கள் வாக்கியமாக வழங்குதல் உண்டு. இரு, ஓடு, எழு, நட எனவும் வாக்கியங்கள் அமைதல் உண்டு. ஒரு சொல் வாக்கியம், இரு சொல் வாக்கியம், பல சொல் வாக்கியம் என இவற்றைக் கூறலாம்.

2. வாக்கிய அமைப்பு

(எழுவாய், பயனிலை, செயப்படு பொருள், எச்சங்கள் நிற்கும் முறை)

'சரோஜனி இரத்தினக் கணையாழி வாங்கினாள்'—இதில் சரோஜனி – எழுவாய். வாங்கினாள் – பயனிலை. இரத்தினக் கணையாழி – செயப்படுபொருள்.

வாக்கியம் இவ்வாறு எழுவாய் முதலிலும், பயனிலை ஈற்றிலும், செயப்படுபொருள் இடையிலுமாக அமைதலே இயல்பாகும். **அவன் குமரன், குமரன் யாவன்** என்பன போன்று, பயனிலையானது பெயரையும் வினாவையும் கொள்ளுமெனினும் பெரும்பான்மை வினைமுற்றையே கொள்ளும்.

வாக்கியத்தில் எழுவாய் முதலிலும், பயனிலை ஈற்றிலும் அமைவது பெரும்பான்மை வழக்கே எனினும், விரைவு, வெகுளி, அச்சம், மகிழ்ச்சி முதலியவற்றை உணர்த்த நேருகையில், பயனிலை முதலிலும் இடையிலுமாக நிற்றலும், எழுவாய் ஈற்றில் நிற்றலும் உண்டு.

'வெற்றிவேல் நூலைப் படித்தான்.'—இயல்பாக அமைந்த இந்த வாக்கியத்தில் பயனிலை ஈற்றில் நின்றது.

'படித்தான் நூலை வெற்றிவேல்.'-இதில் பயனிலை வாக்கிய முதலில் நின்றது.

'நூலைப் படித்தான் வெற்றிவேல்'—இதில் பயனிலை செய்யப்படுபொருளுக்கும் எழுவாய்க்கும் இடையில் நின்றது.

ஒரு வாக்கியத்தில் முதலிடை கடை என்றமூவிடங்களிலும் பயனிலை நிற்றல் போலவே, செயப்படுபொருளும் மூவிடங்களிலும் நிற்கும்.

'உருத்திரன் பாட்டைப்பாடினான்'.—இயல்பாக அமைந்த இந்த வாக்கியத்தில் பாட்டை எனும் செயப்படுபொருள் வாக்கியத்தின் இடையில் நின்றது.

'பாடினான் உருத்திரன் பாட்டை.'—இதில், செயப்படு பொருள் ஈற்றில் நின்றது.

'பாட்டைப் பாடினான் உருத்திரன்.'—இதில், செயப்படு பொருள் முதலில் நின்றது.

'நாட்டின் உயர்வை விளக்க எண்ணி, ஔவையார் சிறந்த கவிதைகளை இயற்றினார்.' இதில் ஔவையார்—எழுவாய். இயற்றினார் – பயனிலை. கவிதைகளை—செயப்படு பொருள். எண்ணி—வினையெச்சம். சிறந்த—பெயரெச்சம். நாட்டின் உயர்வை விளக்க எண்ணி – துணை வாக்கியம். ஔவையார் சிறந்த கவிதைகளை இயற்றினார்—முதல்வாக்கியம்.

மேற்கண்ட வாக்கியத்தின் அமைப்பைப் பாருங்கள். எழுவாய் வாக்கியத்தின் இடையில் நின்றது. பயனிலை ஈற்றில் நின்றது. செயப்படுபொருள் எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையில் நின்றது. வினை எச்சம் வினைக்கு முன்னால் வாக்கியத்தில் இடையில் நின்றது. பெயரெச்சம் பெயருக்கு முன் நின்றது. துணை வாக்கியம் முதல் வாக்கியத்துக்கு முன் நின்றுளது.

இவ்வாறு பல வகையாக அமையும் வாக்கியங்களில், எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்கள் முன் பின்னாக வந்து நிற்றல் உண்டு.

எழுவாய்—பெயர்ச்சொல்லாகவும், வினையாலணையும் பெயராகவும் இருக்கும். பயனிலை—வினைமுற்றாகவும், வினாப் பெய

ராகவும், பெயர்ச் சொல்லாகவும் இருக்கும். வினை எச்சம் வினைச் சொல்லுக்கு முன்னால் வரும். உறங்கப்படுத்தான் என்பது 'படுத்தான் உறங்க' என்பதுபோல, வினை எச்சம் வினைச் சொல்லுக்குப் பின்னாகவும் வரும். பெயரெச்சம் பெயருக்கு முன் வரும். இது வினை எச்சம் போலப் பெய ருக்குப் பின்னால் வராது.

வாக்கியங்களைச் சரிவர அமைப்பதற்கு எழுவாய் பய னிலைகள் ஒழுங்கானபடி அமைதல் வேண்டும். எழுவாய் பயனிலைகளே ஒரு வாக்கியத்தின் உயிர் நாடிகள். செயப் படுபொருள்கள் எச்சங்கள் முதலியன எழுவாய்க்காயினும், பயனிலைக்காயினும் அடையாக நிற்பவை. பயனிலையின்றி வாக்கியமே அமையாது. எழுவாயும் அப்படியே. எனி னும், நேர்க்கூற்றில் தன்மை முன்னிலை எழுவாய்கள் தோன்றாதிருத்தல் கூடும்.

3. ஒரே கருத்தைப் பல உருவ வாக்கியங்களில் வெளியிடுதல்

உருத்திரன் பாடம் படித்திலன்—இது செய்தி வாக்கியமாகும்.

உருத்திரனோ பாடம் படிப்பவன்?—இது வினா வாக்கியமாகும்.

இவ்வாறு ஒரே கருத்தைச் செய்தி வாக்கியத்தாலும் வினா வாக்கியத்தாலும் விளக்குதல் கூடும்.

முருகன் நாற்காலி செய்தான்.—செய்வினை வாக்கியம்.

முருகனால் நாற்காலி செய்யப்பட்டது.—செயப்பாட்டு வினை வாக்கியம்.

இவ்வாறு ஒரே கருத்தைச் செய்வினை வாக்கியத்தாலும் செயப்பாட்டு வினை வாக்கியத்தாலும் விளக்குதல் கூடும்.

வெயிலில் வந்த களைப்பு முருகனை உறங்கச் செய்தது.—தனி வாக்கியம்.

முருகன் வெயிலில் வந்து களைப்படைந்தான்; உறங்கி விட்டான்.—தொடர் வாக்கியம்

வெயிலில் வந்த களைப்பால் முருகன் உறங்கினான்.
வெயிலில் வந்த களைப்புக் காரணமாக முருகன் உறங்கினான்.
—கலவை வாக்கியம்

முருகன் உறங்கினான் வெயிலில் வந்த களைப்பால்.—என, இவ்வாறு ஒரே கருத்தைப் பலவகையான உருவ வாக்கியங்களில் விளக்குதல் கூடும்.

"வெயிலில் வந்ததால் நான் உறங்கிவிட்டேன்" என்று முருகன் என்னிடம் கூறினான். —நேர்க் கூற்று.

வெயிலில் வந்ததால் தான் உறங்கிவிட்டதாக முருகன் என்னிடம் கூறினான். —அயற் கூற்று.

ஒரே கருத்தை நேர்க்கூற்றாகவும் அயற்கூற்றாகவும் விளக்குதல் கூடும்.

ஆ எவ்வளவு அழகானது இந்த மாளிகை!—உணர்ச்சி வாக்கியம்.

இந்த மாளிகையின் அழகு என் மனத்தைக் கவர்ந்தது.

இந்த மாளிகையின் அழகு என் மனத்திற்குப் பெருங் கவர்ச்சியூட்டியது.

இந்த மாளிகையின் அழகால் என் மனம் எவ்வளவு கவர்ச்சியடைந்தது என்பதை எடுத்தியம்ப முடியுமோ!

என, இவ்வாறு ஒரே கருத்தைப் பலவகையான வாக்கியங்களால் விளக்குதல் கூடும்.

1. சேகரன் நூலைக் கிழித்ததை மறைக்காமல் கூறி விட்டான்.

2. தான் நூலைக் கிழித்ததாகச் சேகரன் மறைக்காமல் கூறிவிட்டான்.

3. சேகரன் நூலைக் கிழித்து விட்டான்; அதை மறைக்காமல் கூறிவிட்டான்.

இவ்வாறு ஒரே கருத்தைப் பலவகை வாக்கியங்களாக விளக்கலாம்.

4. பத்தியமைப்பு

பல கருத்துக்களடங்கிய ஒரு செய்தியைப் பற்றி எழுதுகையில், அதனைப் பல கூறுகளாக்கிக் கொண்டு, ஒவ்வொரு கூறினையும் தனித்தனியே எழுதவேண்டும். இப்படி எழுதப்படும் ஒவ்வொரு கூறும் பத்தி எனப்படும். கட்டுரையின் பகுதிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கருத்தை உள்ளடக்கியதாயிருத்தல் வேண்டும். பல கருத்துக்களை ஒரே தொடராக எழுதுதல் படிப்பவரை மலைக்கச் செய்யும். எனவே, ஒவ்வொரு கருத்தையும் ஒவ்வொரு பத்தியாகப் பிரித்துவிடின் படிப்பதற்கும் கருத்தை அறிதற்கும் எளிதாயிருக்கும். இவ்வாறு எழுதுவதைப் பல பத்திகளாகப் பிரிக்கும் போது, அவை ஒவ்வொன்றுக்கும் தொடர்பு இருத்தல் வேண்டும்.

ஒரு பத்தியை இன்னொரு பத்தியிலிருந்து பிரித்துக் காட்டுவதற்கு, பத்தி தொடங்கும் போது, இடப்புறத்தில் சிறிது இடம் விட்டு எழுதத் தொடங்க வேண்டும். இவ்வாறு பத்திகளாக அமைக்காமல் ஒரே நீளமாக எழுதிக்

கொண்டே போனால் செய்தியிலடங்கிய பல கருத்துக் களைத் தெளிவாக அறிதற்கு இயலாது.

பத்தி பிரியாத முன் :

சோழன் தன்னைக் காத்த பெரு வீரன் ஒருவனுக்குச் சிறப்புச் செய்யக் கருதினான் ; அவ்வீரனின் உருவம் அமைக் கத்தக்க கல் கொணர்ந்தான் ; அதனை நீராட்டினான் ; அக் கல்லில் இறந்த வீரனின் உருவம், பெயர், திறன், வீரச் செயல் ஆகியவற்றை எழுதுவித்தான் ; சிறந்ததோர் இடத் தில் அதனை நாட்டுவித்தான்; அக்கல்லின் அருகில், வீரனின் வேல், வாள், வில் முதலியவை வைக்கப்பட்டன. வேந்த னும் வீரர் பலரும் மலர் தூவினர். "சிறந்த வீரனே, நின் னைப்போன்ற வீர உணர்ச்சி, நின்னை வழிபடுவோராகிய எங்கள் அனைவர்க்கும் உண்டாக வேண்டும்" என வேண்டி நின்றனர். "பகைவர் முன் நின்று யானையைக் கொன்று, வீரத்துடன் போர் செய்து தானும் மடிந்த வீரனுக்கு ஏற் பட்ட நடுகல்லே கடவுளாம். அஃதன்றி, இவ்வுலகத்தில் நெல், மலர் தூவி வழிபடும் வேறு கடவுளும் உண்டோ ?" எனும் கருத்தமைந்த பாடலை மாங்குடி கிழார் பாடியுள்ளார்.

பல வாக்கியங்களாகத் தொடுக்கப்பட்ட இச்செய்தி யில் மூன்று கருத்துக்கள் அடங்கியுள்ளன. அவை, சோழன் கல் நட்டது, கல் வழிபாடு, புலவர் பாராட்டுரை என்பனவாகும். எனவே, இச்செய்தியை மூன்று பத்தி களாக அமைத்துக் காண்போம் :

பத்திகள் பிரிந்த பின் :

சோழன் தன்னைக் காத்த பெரு வீரன் ஒருவனுக்குச் சிறப்புச் செய்யக் கருதினான் ; அவ்வீரனின் உருவம்

அமைக்கத்தக்க கல் கொணர்ந்தான் ; அதனை நீராட்டினான் ; அக்கல்லில் சிறந்த வீரனின் உருவம், பெயர், திறன், வீரச் செயல் ஆகியவற்றை எழுதுவித்தான் ; சிறந்ததோர் இடத்தில் அதனை நாட்டுவித்தான்.

அக்கல்லின் அருகில் வீரனின் வேல், வாள், வில் முதலியவை வைக்கப்பட்டன. வேந்தனும், வீரர் பலரும் மலர் தூவினர். "சிறந்த வீரனே, நின்னைப் போன்ற வீர உணர்ச்சி நின்னை வழிபடுவோராகிய எங்கள் அனைவர்க்கும் உண்டாக வேண்டும்" என வேண்டி நின்றனர்.

"பகைவர் முன் நின்று யானையைக் கொன்று வீரத்துடன் போர் செய்து தானும் மடிந்த வீரனுக்கு ஏற்பட்ட நடுகல்லே கடவுளாம். அஃதன்றி இவ்வுலகத்தில் நெல், மலர் தூவி வழிபடும் வேறு கடவுளும் உண்டோ?" எனும் கருத்தமைந்த பாடலை மாங்குடி கிழார் பாடியுள்ளார்.

இவ்வாறு பத்திகளாகப் பிரித்தால் செய்தியிலுள்ள வெவ்வேறு கருத்துக்கள் தெளிவுபடுகின்றன. அவ்வாறின்றி பல வாக்கியங்களைத் தொடுத்து எழுதி நீண்டுகொண்டே போகச் செய்தால் படிப்பவர்க்கு மலைப்பே தோன்றும்.

சில சமயங்களில் பத்தி ஒரே நீண்ட வாக்கியத்தால் அமைந்து விடுதலும் உண்டு. ஆனால், இவ்வாறு ஒரு பத்தியாக அமையுமாறு நீண்ட வாக்கியங்கள் எழுதுதல் சரியன்று. எனவே, கருத்து ஒவ்வொன்றும் தெளிவாக விளங்குமாறு பத்திகளைப் பிரித்துக் கொள்ளுதல் நலம்.

5. நடை (விரிவாக)

ஒரு கருத்தைத் தெளிவாக விளக்கவேண்டுமாயின், அதற்கேற்ற தக்க சொற்களடங்கிய வாக்கியங்களை இலக்கண

அமைதி வழுவாமல் ஒழுங்காக அமைத்தல் வேண்டும். இவ்வாறு ஒழுங்கான முறையில் இலக்கண அமைதியுடன் வாக்கியங்களை அமைத்து எழுதுதல் **நடை** எனப்படும். இது பலவகைப்படும்.

1. வெள்ளை நடை :

'சேகரன் மதுரைக்குப் போனான்; ஊரைச் சுற்றிப் பார்த்தான்; தனக்கு வேண்டியவைகளை வாங்கினான். பின் அவன் கள்ளழகர் கோவில் என்னும் இடம் சென்றான்; அங்கு ஒரு நாள் தங்கிவிட்டுச் சென்னை திரும்பினான்.'

இதில் பயின்று வந்துள்ள சொற்கள் மிக எளிய சொற்கள். எனவே, இவ்வாறு மிக எளிய சொற்களைக் கொண்டு எழுதும் மொழி நடையை **வெள்ளை நடை** என்று கூறலாம்.

2. ஆற்றொழுக்கு நடை :

'செயற்கரும் செயல்களைச் செய்து பெரியராய் விளங்குவோரது பெருமை நாட்டில் எவ்வாறு பரவுகின்றது என்பதும் நன்கு அறிதற்குரியதாகும். பெரும்பாலும் பெரியாரது புகழ் அவர் இறந்த பின்னர் உலகெங்கும் பரவி ஒளிருமே அல்லால், அவர் வாழுங் காலத்தில் அவர் பெருமையை அறிந்து போற்றுதல் அரிதாகும்.'

—ரா. பி. சேதுப்பிள்ளை.

இதில் கருத்தும், கருத்தை விளக்கும் தொடர்களும் ஆற்றொழுக்குப் போலத் தங்குதடையின்றிச் செல்வதால் இதனை **ஆற்றொழுக்கு நடை** அல்லது **ஒழுகிசை நடை** எனலாம். (ஒழுகிசை – செவிக்கு இனியதாய்ச் செல்லும் மெல்லிசை)

3. செந்தமிழ் நடை :

'உடம்பைப் போலவே நாட்டையும் ஓம்புதல் வேண்டும். உடலில் ஒரு சிறு விரலுக்கு ஊறு நேர்வதாக வைத்துக்கொள்வோம். ஊறு எதற்கு? சிறு விரலுக்கு மட்டுமா? முழு உடலுக்குமா? ஊறு உற்றது சிறு விரல்தானே என்று வாளா கிடக்கிறோமா? ஊறு முழு உடலையும் தாக்காமலிருக்குமா? ஒரு சிறு விரலில் உற்ற ஊறு முழு உடலையும் தாக்கித் துன்புறுத்தலான், அதைப் போக்க உடனே முயல்கிறோம். அதேபோல, நாட்டின் ஒரு மூலையில் ஊறு நேரினும் அதை உடனே போக்க முயலல்வேண்டும். இல்லையேல் சிறு ஊறு நஞ்சாகி நாடு முழுவதும் பரவி நாட்டையே துன்புறுத்துவதாகும்.'

—திரு. வி. கலியாணசுந்தரனார்.

இவ்வாறு பிற மொழிச் சொல் விரவாமல், எப்பிழையுமில்லாமல் இனிய தமிழில் எழுதுவது **செந்தமிழ் நடை** எனப்படும்.

4. கொடுந்தமிழ் நடை :

'தள்ளை அச்சனுடன் கிழார் ஏகிப் பெற்றத்தின்பால் கொணர்ந்து பருகக் கொடுத்தாள். இருளை அதில் பாழியிலிருந்து கொணர்ந்த வெள்ளம் கொட்டினாள்.'

வழக்கில் இல்லாத் திசைச் சொற்கள் இச்சொற்றொடரில் பயின்று வந்துள்ளன. இவ்வாறு திசைச் சொற்களைப் புகுத்தி எழுதுவது **கொடுந்தமிழ் நடை** ஆகும். இவ்வாறு எழுதிவது தவறு.

5. கொச்சை நடை :

'அவா ஆத்துலே, நேத்திக்கி நீ போயி சாதஞ் சாப்பிட்டியாமே. ராத்திரிலேந்து நோக்கு உடம்பு நன்னாயில்லையாமே.'

இது, சிதைந்து கொச்சையாகிய சொற்களைக் கொண்ட வாக்கியமாகும். பேச்சு வழக்கிலுள்ள கொச்சைச் சொற்களைப் பயன்படுத்தி எழுதுவது கொச்சை நடையாகும். இவ்வாறு எழுதுவது தவறு.

6. இலக்கிய நடை :

'வேள்மிகு வேந்தனை மொய்த்த வழி ஒருவன் தான் மீண்டெறிந்த தார் நிலை—தன் படை போர் செய்கின்றமை கண்டு தானும் படையாளர்க்கு முன்னே சென்று வேலாற் போர் செய்து வென்றி மிகுகின்ற வேந்தனை மாற்றோர் சூழ்ந்துழி அதுகண்டு வேறோரிடத்தே பொருகின்ற தன்றானைத் தலைவனாயினும், தனக்குத் துணைவந்த அரசனாயினும் போரைக் கைவிட்டு வந்து வேந்தனோடு பொருகின்றாரை எறிந்த தார் நிலை.'

—தொல். பொருள், 72. நச்சினார்க்கினியர்

இதிலுள்ள சொற்களும் சொற்றொடரமைப்பும் புலமை நிரம்பியவர்களுக்கன்றி மற்றையோருக்கு எளிதில் விளங்காவாகலின் இது இலக்கிய நடையாகும்.

7. மணிபவள நடை :

'குற்றமற்ற புராதனமாகிய நூற் கேள்வியையும் கூரிய அறிவினையுமுடைய புலவர் சிரோமணிகள் பலர்கூடி ஒருவர்க்கொருவர் விரோதமின்றித் தாம் தாம் பயின்ற சாஸ்திரங்களில் நுட்பமாகிய விஷயங்களை எடுத்து உத்தேசலக்ஷண

பரிசைஷகளால் வாதித்து அவற்றின் சாரத்தைக் கண்டுணர்ந்து சந்தோஷிக்கின்ற இன்பத்தைப் பார்க்கிலும், வானத்தின்கண் தேவர்கள் வாசம் செய்யும் சுவர்க்கத்திற் சென்று அங்கனுபவிக்கும் இன்பமானது என்ன விசேஷம்?'

—விநோதரசமஞ்சரி.

வடமொழிச் சொற்களும் தென்மொழிச் சொற்களும் கலந்த இந்த நடை **மணிபவளநடை** எனப்படும். இவ்வாறு எழுதுவது கொள்ளத் தக்கதன்று. இவ்வாறு எழுதுவது தவறு.

8. கலவை நடை :

'நம்மூர் கலெக்டர் முன் கோபி. தம் டூட்டியைச் சரிவரக் கவனித்தாலும் ஜமாபந்திகளில் அவர் போக்கு விபரீதமானது. அவருக்குச் சம்பளம் ஜாஸ்தியாயிருந்து அவர் பெரிய உத்தியோகஸ்தராயிருப்பதால், ஏழைகளுக்கு ரொம்ப பரோபகாரமாயிருந்துவரலாம். அன்று நடந்த மகா சபையில் அக்ராசனாதிபதி பிரசங்கத்தில்கூட முனிசிபல் சேர்மன்களும், ஜில்லாபோர்டு பிரசிடெண்டுகளும், கலெக்டர்களும் சிரத்தை எடுத்தால் தேசம் பிரபலமடையும் என்று கூறினர்.'

இதில் வடமொழிச் சொற்களும் திசைமொழிச் சொற்களும் கலந்து வந்துள்ளன. இவ்வாறு எழுதுவது **கலவை நடை** எனப்படும். ஆயின், இவ்வாறு எழுதுவது பெருந்தவறு.

எனவே, தமிழ் மொழி நடை பலவகைப்படும். எல்லாருக்கும் எளிதிற் பொருள் விளங்குமாறு ஆற்றொழுக்குப் போலத் தங்கு தடையின்றித் தொடர்ந்து செல்லுவது

ஒழுகிசை நடை அல்லது **ஆற்றொழுக்கு நடை** எனப்படும். பிறமொழிச் சொல் ஒன்றும் கலவாது தனித்தமிழில் பிழைகளின்றி எழுதுவது **தனித்தமிழ்நடை** ஆகும். இயன்றவரை அயல்மொழிக் கலப்பின்றி எழுதுவது **செந்தமிழ்நடை** எனப்படும். செய்யுள் மணம் கமழ எதுகை மோனைகள் அமைய எழுதுவது **செய்யுள்நடை** அல்லது **எதுகைமோனைநடை** எனப்படும். கற்றோர்க்கன்றி மற்றோர்க்குப் பொருள் விளங்காவாறு உயர்ந்த சொற்களும், உருவமும் அமைய எழுதுவது **இலக்கியநடை** ஆகும். ஒரு பொருள் குறித்து இருவர் உரையாடுதல் அல்லது தருக்கித்தல் போன்று எழுதுதல் **உரையாடுதல்நடை** அல்லது **தருக்கநடை** எனப்படும்.

இந்த ஆறு வகை நடைகளையும் மாணவர் எழுதப் பழகலாம். செந்தமிழ்நடை, ஆற்றொழுக்குநடை, தனித்தமிழ்நடை முதலியவற்றுள் ஒன்றை மாணவர் எழுதப் பயில்வது இன்றியமையாததாகும்.

வடசொற்களையும் தமிழ்ச் சொற்களையும் மணியும் பவளமும் கலந்து கோப்பது போலக் கலந்தெழுதுவது **மணிபவள நடை** யாகும். திசைச் சொற்கள் கலந்துகிடக்குமாறு எழுதுவது **கொடுந்தமிழ்நடை**யாகும். கல்வியறிவில்லாக் கீழ்த்தர மக்கள் பேசுவது போல எழுதுவது **கொச்சைநடை** யாகும். இன்று நாட்டில் வழங்கும் பல மொழிச் சொற்கள் கலந்துவர எழுதுவது **கலப்புநடை** யாகும். இந்த நடைகளை மாணவர்கள் எழுத முயல்வது அறவே கூடாது.

தமிழ் நடை இனியதாயிருக்கவேண்டுமெனின், பிற மொழிச் சொற்கள் கலவாமல், கருத்தைத் தெளிவுபடுத்தக்

கூடியவாறு இடத்திற்கேற்றவாறு இனிய தமிழ்ச் சொற்களை ஆண்டு, இலக்கண வழுக்களோ, மரபு வழுக்களோ இல்லாமல் ஒழுங்கான முறையில் வாக்கியங்கள் அமைத்து எழுத வேண்டும்.

அவ்வாறின்றிப் பேச்சுநடை என்றோ, மறுமலர்ச்சி நடை என்றோ கூறிக்கொண்டு, இலக்கணப் பிழைகள் மலிந்த நடையையோ கொச்சை நடையையோ எழுதுவது பெருந் தவறாகும்.

6. வழூஉச் சொற்களும் திருத்தமும்

இன்றுள்ள பேச்சுத் தமிழ் மொழியில் வழூஉச் சொற்கள் பல கலந்துவிட்டிருக்கின்றன. அவற்றைத் திருத்தமாகக் கூறக் கற்றாலன்றி எழுத்திலும் இத்தவறுகள் பயின்றுவருதல் கூடும். எனவே, வழூஉச் சொற்களையும் அவற்றின் திருத்தத்தையும் அறிவோம் :

வழூஉச் சொற்கள்	திருத்தம்
அம்மாஞ்சி	அம்மான்சேய்
அதுகள்	அவைகள்
அருகாமை	அருகு
அவன்கள்	அவர்கள்
அகண்ட	அகன்ற
அப்படியாக்கொத்த	அப்படியாதற்குத்தக்க
அடிச்சுட்டா	அடித்துவிட்டாள்
அமக்களம்	அமர்க்களம்
ஆத்தில்	அகத்தில்
ஆப்பிட்டுக்கிட்டுது	அகப்பட்டுக்கொண்டது
ஆம்பளைப் பிள்ளை	ஆண்பிள்ளை
ஆச்சு	ஆயிற்று
ஆக்ஷி	ஆட்சி

வழூஉச் சொற்கள்	திருத்தம்
ஆம்படையாள்	அகமுடையாள்
இரும்பல்	இருமல்
இத்தினி	இத்தனை
இசித்தல்	இழுத்தல்
இல்லாட்டி	இல்லாவிட்டால்
இக்குது	இருக்கிறது
ஈருளி	ஈர்கொல்லி
இருக்கச்சே	இருக்கும்போது
உடமை	உடைமை
உத்திரவு	உத்தரவு
உந்தன்	உன்றன்
உத்திரவன்னி	உத்தரவின்றி
ஊரணி	ஊருணி
என்னமோ	என்னவோ
என்தன்	என்றன்
எண்ணை	எண்ணெய்
எம்பளது	எண்பது
ஏதாச்சியும்	ஏதேனும்
ஒண்டியாய்	ஒன்றியாய்
கட்டிடம்	கட்டடம்
கழட்டி	கழற்றி
கண்ட்ராவி	கண்ணராவி
கார்க்கும்	காக்கும்
காக்ஷி	காட்சி
கவுறு	கயிறு
கம்மணாட்டி	கைம்பெண்டாட்டி
குளுப்பாட்டி	குளிப்பாட்டி

வழூஉச் சொற்கள்	திருத்தம்
குறவளை	குரல்வளை
கேழ்வி	கேள்வி
கொளாய்	குழாய்
கோடாலி	கோடரி
கோமணம்	கோவணம்
கோர்வை	கோவை
சுவற்றில்	சுவரில்
சும்மாயிரு	சும்மாவிரு
சிக்காய்	சிகைக்காய்
சித்தரம்	சித்திரம்
சிரோன்மணி	சிரோமணி
சித்தே	சற்றே
சுந்திரம்	சுந்தரம்
செவத்தில்	சுவரில்
தங்கச்சி	தங்கை
தாவலெ	தேவையில்லை
தலகாணி	தலையணை
தண்ணி	தண்ணீர்
தவக்களை	தவளை
திரேகம்	தேகம்
துளிர்	தளிர்
தொந்திரவு	தொந்தரவு
திகட்டுகிறது	தெவிட்டுகிறது
நொங்கு	நுங்கு
பசும்பால்	பசுப்பால்
பேத்தி	பெயர்த்தி
பேரில்	மேல்

வழூஉச் சொற்கள்	திருத்தம்
பொம்பளே	பெண்பிள்ளை
பாவக்காய்	பாகற்காய்
புழக்கடை	புழைக்கடை
போகச்சே	போகையில்
புளுதி	புழுதி
போய்க்கிட்டே	போய்க்கொண்டே
மானப்பாத்த	வானம்பார்த்த
மாக்ஷி	மாட்சி
முழுங்கு	விழுங்கு
முளிச்சான்	விழித்தான்
மெரித்தான்	மிதித்தான்
மொழுகல்ல	மெழுக வில்லை
ரொம்ப	நிரம்ப
வயறு	வயிறு
வரச்சே	வருகையில்
வெக்கமில்லே	வெட்கமில்லை
வாக்கப்பட்டு	வாழ்க்கைப்பட்டு
வாவரசி	வாழ்வரசி
வாவாட்டி	வாழ்வாட்டி
வந்திச்சின்னு	வந்ததாயின்
வந்துக்கிட்டே	வந்துகொண்டே
வந்துக்கினே	வந்துகொண்டே
வேணுமின்னு	வேண்டுமென்றால்
போடல்லே	போடவில்லை
வெடிஞ்சது	விடிந்தது
வேண்டாம்	வேண்டா
வென்னீர்	வெந்நீர்

இவ்வாறு வழக்காற்றில் உள்ள இன்னும் பல வழூஉச் சொற்களையும் கவனித்து விலக்கித் திருத்தமாகப் பேசவும், அவ்வாறே எழுதவும் பழகுதல் வேண்டும்.

7. விலக்குதற்குரிய இழிவழக்குகள்

(Slang Usage)

மூக்குப் பிடிக்க இழுத்தான், நாடக மேடைமீது நின்று வெளுத்துவாங்கிவிட்டான், வெட்டி முறிச்சிட்டான், கடுக்காக் கொடுத்து விட்டான், கம்பி நீட்டிவிட்டான், கொளுத்தித் தள்ளிப்போட்டான், ரொம்ப அளக்கிறனே, வெட்டி முறிக்கிறப்போல, வேல மெனக்கிட்டு வந்தேன், உன் கைவரிசை என்னிடம் செல்லாது, அந்தப் பருப்பு இங்கே வேவாது, தாரவாந்து போச்சு என்று கூறி நாமம் சாத்தி விட்டான், வாலாட்டித் திரிகிறான், அண்ணங்காரன், அக்காக்காரி, அண்ணாத்தை.

இவைபோன்ற இன்னும் பல வகையான சொற்றொடர்கள், பேச்சுத் திருத்தம் பெறு மக்களிடை அன்றாடப் பேச்சு வழக்கிலிருக்கின்றன. இவ்வாறு பேசுவதும் தவறு; எழுதுவதும் தவறு. இவ்வாறான சொற்றொடர்கள் **இழி வழக்கு** எனப்படும். இந்த இழிவழக்கான தொடர்களை மாணவர்கள் பேச்சு, எழுத்து ஆகிய இருவழக்கிலும் அடியோடு விலக்கிவிடுதல் வேண்டும்.

8. நிறுத்தக் குறிப் பயிற்சிகள்

முற்றுப்புள்ளி, முக்காற்புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, உணர்ச்சிக்குறி, இரட்டை மேற்கோட் குறிகள், ஒற்றை மேற்கோட் குறிகள், பிறைக்கோடு, வலாற்றுக் குறி, கீழ்க்கோடிடல், இடைப்பிறவைப்புக் குறி முதல

வியவைகளைப் பற்றியெல்லாம் முன் வகுப்புக்களில் மிக விளக்கமாகப் படித்திருக்கிறீர்கள். இங்கு மேலும் சிலவற்றைப் படிப்போம் :

செருகற்குறி :

நாம் ஒன்றை எழுதிக் கொண்டேபோன பிறகு நினைத்துக்கொண்டு, எதையாவது சேர்க்க வேண்டுமெனின், வரி பிளந்து அந்த வரிக்குமேல் எழுதுகிறோம். அவ்வாறு வரி பிளந்து எழுதியிருப்பதைக் காட்டுவதற்காக ∧ என்பது போன்ற குறியீட்டை இடுதல் வேண்டும். இக்குறியீட்டைச் **செருகற் குறி** எனலாம்.

ஒரு மேற்கோளை எடுத்துக் காட்டுகையில், அதில் இடையில் நமக்கு வேண்டாத பகுதியை விட்டுவிடுகின்றோமென்றால், அவ்வாறு விடுபட்டிருப்பதைக்காட்ட........ என்பது போலப் புள்ளிகளையோ, × × × × என்பதுபோல உடுக்குறிகளையோ இடுதல் வேண்டும்.

நிறுத்தக்குறி இல்லாதது :

உங்களை எவனையா பண்டிதரென்று சொன்னான் பண்டிதரல்லவென்று நினைத்துத்தானே சொல்லுகிறேன் இந்நூலை உங்களுடைய ஏவலின்மேல் பதிப்பித்தவன் எவனோ அவன் அறியாதவன் குல்லாய்க்கேற்றபடி தலையை நறுக்கிக் கொண்ட புத்திசாலியைச் சேர்ந்தவன் நீங்கள் பண்டிதரென்பது இழிவான பட்டமென்று நினைப்பதாகத் தெரிகிறது இப்படிப்பட்ட காரியத்தைப் பண்டிதர்களே செய்ய வேண்டும் நீங்கள் சட்ட புத்தகங்களைப் படித்து ஆராய்ந்து வாதம் பண்ணுவதோடு நில்லாமல் தமிழ் வழிக்கு ஏன் வருகிறீர்கள்

நிறுத்தக்குறிகள் இடாமலிருக்கும் இந்தப் பகுதியை நீங்கள் நிறுத்தக் குறிகளிட்டுப் பின் கீழ்வரும் பகுதியுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

நிறுத்தக்குறிகளிட்டது :

"உங்களை எவனையா பண்டிதரென்று சொன்னான்? பண்டிதரல்லவென்று நினைத்துத்தானே சொல்லுகிறேன். இந்நூலை உங்களுடைய ஏவலின்மேல்பதிப்பித்தவன்எவனோ அவன் அறியாதவன்; குல்லாய்க்கேற்றபடி தலையை நறுக்கிக்கொண்ட புத்திசாலியைச் சேர்ந்தவன். நீங்கள் பண்டிதரென்பது இழிவான பட்டமென்று நினைப்பதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட காரியத்தைப் பண்டிதர்களே செய்ய வேண்டும். நீங்கள் சட்ட புத்தகங்களைப் படித்து ஆராய்ந்து வாதம் பண்ணுவதோடு நில்லாமல் தமிழ் வழிக்கு ஏன் வருகிறீர்கள்?"

நிறுத்தக் குறிகளிடுக :

பின்வரும் உரைநடைப் பகுதியில் தகுந்த நிறுத்தக் குறிகளை இட்டுக் காட்டுக :

பொங்கல் திருநாளை முன்னிட்டு நாங்கள் மதுரைக்குச் சென்றோம் எங்களை வரவேற்ற நகராண்மைக் கழகத்தலைவர் உங்களை நேற்றே எதிர்பார்த்தேனே ஏன் நேற்று வரவில்லை என்று கேட்டார் அவருக்குத் தக்க சமாதானம் கூறியபின் அவர் வீட்டில் விருந்துண்ணச் சென்றோம்

வீட்டிலும் எங்களுக்கு வரவேற்புச் சிறப்பாயிருந்தது நகராண்மைக் கழகத் தலைவரின் தம்பி எங்களுடன் அளவளாவி அடடா நேற்று வந்திராமற் போனீர்களே இங்கு நடந்த விழா எவ்வளவு சிறப்பாயிருந்தது தெரியுமா போகட்டும் இன்று திருவிழா பார்க்கப் போகலாமா என்று கேட்டார் நாங்கள் சரி என்று ஒப்புக் கொண்டோம்

9. மரபு

நம் மூதாதையர் எப்பொருளை எச்சொல்லால் எவ்வாறு வழங்கினார்களோ அவ்வாறே நாம் நம் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்தவேண்டும். நம்முன்னோர்கள் பசு புல்மேயும் என்று எழுதியிருந்தார்களென்றால் நாம் அதை யப்படியே எழுதாமல் பசு புல் சாப்பிடும் என்றெழுதுவது தவறு. தென்னம்பிள்ளை, வாழைக்கன்று, கரும்புத்தோட்டம், நாய் குரைக்கிறது என்றெல்லாம் நம் முன்னோர்கள் வழங்கியிருக்க, நாம் தென்னங்கன்று, வாழைப்பிள்ளை, கரும்புத்தோப்பு, நாய் கர்ச்சிக்கிறது என்றெல்லாம் எழுதுவது தவறு. நம் முன்னோர் வழங்கிய முறைப்படியே நாமும் வழங்குவதே மரபு கடைப்பிடிப்பதாகும். (மரபு – பழைய முறைமை)

மரபு வழு	திருத்தம்
மயில் கூவுகிறது.	மயில் அகவுகிறது.
கிளி கத்துகிறது.	கிளி கொஞ்சுகிறது(பேசுகிறது).
காகம் கூச்சலிடுகிறது.	காகம் கரைகிறது.
குதிரை கத்துகிறது.	குதிரை கனைக்கிறது.
சிங்கம் கத்துகிறது.	சிங்கம் கர்ச்சிக்கிறது.
யானை கத்துகிறது.	யானை பிளிறுகிறது.
நரி கத்துகிறது.	நரி ஊளையிடுகிறது.
நாய் கூவுகிறது.	நாய் குரைக்கிறது.
புலி கத்துகிறது.	புலி முழங்குகிறது.
கழுதை ஊளையிடுகிறது.	கழுதை கத்துகிறது.
ஆட்டுக் கன்று	ஆட்டுக் குட்டி
ஆட்டுச் சாணம்	ஆட்டுப் பிழுக்கை
மான் குட்டி	மான் கன்று

யானைக் குஞ்சு	யானைக் கன்று
யானை ஓட்டி	யானைப்பாகன்
யானைச் சாணம்	யானை லத்தி
குருவிக்குட்டி	குருவிக் குஞ்சு
கோழிக் குட்டி	கோழிக் குஞ்சு
நாய்ப் பிள்ளை	நாய்க் குட்டி
கம்பம் புல்	கம்பந் தட்டு
தினைப் புல்	தினைத் தாள்
பழம் சாப்பிடு.	பழம் தின்.
சோறு சாப்பிடு.	சோறு உண்.
பால் சாப்பிடு.	பால் குடி.
காய்கறி வெட்டு.	காய்கறி நறுக்கு.
பாட்டுச் சொல்.	பாட்டுப் பாடு.
வாழைத் தோப்பு	வாழைத் தோட்டம்
கரும்புத் தோப்பு	கரும்புத் தோட்டம்

அறிவுடைய முன்னோர் எப்பொருளை எச்சொற்களைக் கொண்டு வழங்கினார்களோ அப்படியே நாம் கூறுதலே மரபாகும்; பொருத்தமானதாகும். அங்ஙனமின்றி வேறு கூறுதல் மரபாகாது; பொருந்துவதாகாது.

10. உவமைகளும் பழமொழிகளும் வைத்தெழுதுதல்

எதை எழுதினாலும் பொருட் செறிவும் நயமும் அமைய, கருத்தைத் தெளிவாகவும் கேட்போர் நன்கு உணரும் வகையிலும் எழுதவேண்டும். இவ்வாறு எழுது வதற்கு உவமைகளும் பழமொழிகளும் பெரிதும் துணை செய்வனவாகும். இவற்றை அமைத்து வாக்கியங்கள் எழுதுதல் நடையழகை மிகுதிப் படுத்தும். உவமைகள்,

பழமொழிகள் இவற்றை முன் வகுப்புக்களில் படித்துள்ளீர்கள் அல்லவா? இங்குச் சிலவற்றைக் காண்க:

உவமைகள் :

அழலில் இடும் மெழுகு போல
அடியற்ற மரம் போல
அங்காடிக் கிட்ட பதர் போல
ஆடிக் காற்றில் அம்மியும் குழவியும் பறப்பது போல
ஆலைவாய்ப் பட்ட கரும்பைப் போல
இஞ்சி தின்ற குரங்கு போல
இருதலைக் கொள்ளி எறும்பு போல
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வது போல
உமி குற்றிக் கை சலித்தது போல
ஊமையன் கண்ட கனவு போல்
ஓட்டை நாழிக்குப் பூண்கட்டுவது போல
எரியும் கொள்ளியை ஏறத் தள்ளுவது போல
கடலிற் காயம் (பெருங்காயம்) கரைத்ததுபோல
கண்ணிலாதான் கண்ட ஒளி போல
கண் ணுறங்கும் வீட்டில் கள்ளன் புகுவது போல
கற்றுவின் மனம் போல
கன்னமிட வந்தவர்க்கு அன்னமிட்டு ஆதரிப்பதுபோல
கிரியைக் கண்ட நாகம் போல
பகலவன் வரவு பார்க்கும் பங்கயம் போல
குரங்கின் கைப்பட்ட பூமாலைபோல
குடத்துள்ளிட்ட விளக்குப்போல
குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டதுபோல
நல்லோருக்குப் பெய்யும் மழை எல்லோருக்கும் பெய்வதுபோல
நகமும் சதையும்போல

உவமைகள் :

நாய்முன் முழுத்தேங்காய் உருட்டியதுபோல
நெருப்பிலிட்ட புழுப்போல
பகலவனைக்கண்ட பனிபோல
பாம்பின்வாய்த் தேரைபோல
பாலும் நீரும் போல
பூனையைக்கண்ட எலிபோல
புளியம்பழமும் தோடும்போல
மழைகாணாப் பயிர்போல
முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதுபோல
விழலுக்கிறைத்த நீர்போல

பழமொழிகள்:

அற்பம் அற்பமாகாது.
அவனன்றி ஓரணுவும் அசையாது.
அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்.
அடித்த ஏருக்கும் குடித்த கூழுக்கும் சரி.
அஞ்சு காசுக்குக் குதிரையும் வேண்டும்; அது ஆறு கடக்கப் பாயவும் வேண்டும்.
அரசன் அன்றேகொல்லும் தெய்வம் நின்றுகொல்லும்.
ஆவாரை யாரே அழிப்பர் ?
ஆடையில்லா மனிதன் அரைமனிதன்.
ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு.
ஆனைக்கும் அடி சறுக்கும்.
ஆற்றிற் கொட்டினாலும் அளந்து கொட்டு.
ஆறிலும் சாவு நூறிலும் சாவு.
இளமையிற் சோம்பல் முதுமையில் வறுமை.
இரும்படிக்கிறவிடத்தில் ஈக்கு என்ன வேலை ?

ஈயாதார் வாழ்ந்தென்ன? எட்டி பழுத்தென்ன?
ஈரவெண்காயத்துக்கு அறுபத்தெட்டுப் புரை.
உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்வதா?
உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
உலக்கை தேய்ந்து உளிப் பிடியானது.
உப்பைத் தொட்டுக் கொண்டு உரலை விழுங்கலாம்.
உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போம்.
உருவுகண்டு எள்ளாதே!
ஊமைக்கு உளறுவாயன் மேல்.
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
ஏறவிட்டு ஏணியை வாங்குவது.
ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
ஓடிப்போனமுயல் பெரிய முயல்.
கடைத் தேங்காயெடுத்து வழிப் பிள்ளையாருக்கு [உடைப்பதா?
கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
கண்டது கற்கப் பண்டிதனாவான்.
கண்ணாடி நிழலில் கண்ட பணம் கடனுக்கு உதவாது.
கத்தரிக்காய் சொத்தை என்றால் அரிவாள் மணை குற்றமா?
கள்ளிக்கு முள்வேலியும் கழுதைக்குக் கடிவாளமும் ஏன்?
காக்கையின் கண்ணுக்குப் பீர்க்கம்பூ பொன்னிறம்.
காய்ந்த மாடு கம்பங்கொல்லையில் புகுந்தது.
குதித்துக் குதித்து மாவிடித்தாலும் குந்தாணிக்கொரு கொழுக்கட்டையுமில்லை.
குடிக்கிறது கூழ் கொப்பளிக்கிறது பன்னீர்.
குப்பையில் கீரை முளைத்தால் கப்பலுக்குக் காலாகுமா?
குப்பையில் கிடந்தாலும் குன்றுமணி நிறம் மாறுமா?

குள்ளநரி தின்றகோழி கூவப்போகிறதா ?
கூலிக்காரன் மேற்கே பார்த்தால் கூத்தாடி கிழக்கே [பார்ப்பான்.
கூழானாலும் குளித்துக் குடி.
கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா ?
கொடுத்ததைக் கேட்டால் அடுத்தது பகை.
கொல்லைக் காட்டு நரி பல்லையிளிக்கிறது.
சாட்டையில்லாப் பம்பரத்தை ஆட்ட வல்லவர் யார் ?
சுண்டைக்காய் கால் பணம் சுமைக்கூலி முக்கால்பணம்.
தேடாது அழிக்கின் பாடாய் முடியும்.
தோலிருக்கச் சுளை விழுங்கி.
நரிவாலைக் கொண்டு கடலாழம் பார்ப்பதா ?
நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கிறது.
பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது.
பாலோடாயினும் காலமறிந்துண்.
பெட்டைக் கோழி கூவியா பொழுது விடிகிறது ?
மலை விழுங்கி மாரியம்மனுக்கு உரல் சுண்டாங்கி.
மருந்தேயாயினும் விருந்தோடுண்.
முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.
யானைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே.
வெறுங்காதுக்கு ஓலை மேல்

இந்த உவமைகளையும், பழமொழிகளையும் வாக்கியங்களில் அமைத்தல் வேண்டும்.

உவமைகள் வைத்தெழுதல் :

1. தந்தை உயிர் நீத்தார் என்ற செய்தி கேட்டவுடன் அவன் அடியற்ற மரம்போல் கீழே சாய்ந்தான்; துடிதுடித்

தான். ஒருபுறம் குடும்ப நிர்வாகம், மற்றொரு புறம் தன் கல்வியின் உயர்வு, இன்னொரு புறம் கடன்காரர் தொல்லை இவற்றை எல்லாம் எப்படிச் சரிப்படுத்துவதென்றறியாமல் இருதலைக் கொள்ளி எறும்பு போலத் தவித்தான்.

2. அவன் மிகச்சிறந்த புலவன். புளியம் பழமும் தோடும் போலவே அவன் குடும்பத்துடன் சேர்ந்து வாழ்ந்தான். அவனை மற்றையோர் நன்கறிந்துகொள்ள முடியாவாறு அவன் புகழ் குடத்துள்ளிட்ட விளக்குப் போலிருந்தது.

பழமொழிகள் வைத்து எழுதுதல் :

1. 'இளமையிற் சோம்பல் முதுமையில் வறுமை' என்பதை நன்கறிந்த கந்தன் நன்கு படித்தான்; கல்வியில் மிக்காரை அணுகிக் கல்விகேள்விகளில் தேர்ந்தான். பகைவர் சிலர் அவன் கல்வியில் உயர்வதைக்கண்டு பொறாமல் இடர்கள் பல விளைத்தன ரெனினும், 'ஆவாரை யாரேயழிப்பர்' என்பதுபோல் அவன் வளர்பிறை மதியம் போல மேன்மேலும் உயர்ந்து உயர்நிலை அடைந்தான்.

2. "ஏன் இவ்வாறு அஞ்சுகிறாய்! வீரத்துடன் செயலாற்று. 'ஆறிலும் சாவு நூறிலும் சாவு' என்பதை அறியாயோ! நீ வேறு வழியில் வாழ்க்கை ஓடத்தைச் செலுத்த நினைத்தாய். ஆயின் போர் வீரனாகச் செல்லுமாறு நேர்ந்துவிட்டது. 'நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கிறது'. என்ன செய்யலாம்? எனினும், எதிற் புகுந்தாலும் 'முயற்சியுடையார் இகழ்ச்சி யடைவதில்லை'. இத்துறையிலும் நீ முன்னிலை அடைய முடியும். எனவே, அஞ்சாது செல்! முன்னேறு."

இவ்வாறு, மேலே கொடுத்துள்ள உவமை, பழமொழிகளைக் கொண்டு, வாக்கியங்கள் அமைக்கப் பழகுக.

11. உவமை உருவக மாற்றம்

மதிமுகம்—மதியைப்போன்ற முகம்.

இதில் முகம் சந்திரனோடு ஒப்பிடப்பட்டுள்ளது. அதாவது சந்திரன் முகத்துக்கு ஒப்பாக்கிக் காட்டப்பட்டுள்ளது. இதில் ஒப்பாக்கிக் காட்டப்பட்ட சந்திரன் உவமையாகும். ஒப்பிடப்பட்ட பொருளாகிய முகம் உவமேயமாகும். இவ்வாறு ஒரு பொருளுடன் மற்றொன்றை ஒப்பிட்டுக் காட்டுவது **உவமை** கூறுதல் எனப்படும். உவமையில், உவமானம் முன்னும் உவமேயம் பின்னுமாக அமைந்திருக்கும்.

கைம்மலர்—கையாகிய மலர்.

இதில் கையே மலர் எனப் பொருள்படுமாறு கூறப்படுகிறது. கையே மலர்—மலரே கை என இரண்டிற்கும் வேறுபாடில்லாமலிருக்கிறது. ஆனால் இதன் பொருள் யாது? மலர் போன்ற கை என்பதுதான். மலர்போன்ற கை என்றால் உவமை யாகிவிடுகிறது. அப்படிக் கூறாமல், கையும் மலரும் ஒன்றே என்னுமாறு, உவமானப் பொருளையும், உவமேயப் பொருளையும் வேறுபாடில்லாமல் இரண்டும் ஒன்றே என்னும் கருத்துத் தோன்றுமாறு ஒன்றுபடுத்திக் கூறுவது **உருவகம்** எனப்படும். உருவகத்தில் உவமேயம் முன்னும் உவமானம் பின்னுமாக அமையும்.

மதிமுகம்—மதிபோன்ற முகம் —உவமை.
முகமதி—முகமாகிய மதி —உருவகம்.
மலர்க்கை—மலர்போன்ற கை —உவமை.
கைம்மலர்—கையாகிய மலர் —உருவகம்.

மாற்றியமைத்தல் :

பவளவாய் – **உவமை.** பவளம் – **உவமானம்;** வாய் – **உவமேயம்.** இதை உருவகமாக மாற்ற, உவமேயமாகிய **வாய்**

என்பதை முதலில் வைத்து உவமானமாகிய **பவளம்** என்பதைப் பின்னல் இணைத்து விடவேண்டும். இதனல் பவளவாய் என்பது வாய்பவளம் என மாறி உருவகமாக அமைகிறது.

எனவே, உவமையை உருவகமாக்குவதற்கு, உவமேயத்தை முன்னும், உவமானத்தைப் பின்னுமாக முறை மாற்றியமைத்தல் வேண்டும்.

வாய்பவளம்—**உருவகம்.** – வாய் – **உவமேயம்;** பவளம்—**உவமானம்.** இதை உவமையாக மாற்றுவதற்கு உவமானமாகிய பவளம் என்பதை முதலில் வைத்து, உவமேயமாகிய வாய் என்பதைப் பின்னல் இணைத்துவிட வேண்டும். இதனல் வாய்பவளம் என்பது பவளவாய் என மாறி உவமையாக அமைகிறது. எனவே, உருவகத்தை உவமையாக்குவதற்கு, உவமானத்தை முன்னும் உவமேயத்தைப் பின்னுமாக அமைத்தல் வேண்டும்.

தமிழருக்குத் தமிழ்மொழி தேன் போன்றது. —உவமை.
தமிழருக்குத் தமிழ்மொழி தேன். —உருவகம்.
மக்களுக்கு ஒழுக்கம் உயிர் போன்றது. —உவமை.
மக்களுக்கு ஒழுக்கம் உயிர். —உருவகம்.
பெண்களுக்கு நாணம் அணிகலம் போன்றது. —உவமை.
பெண்களுக்கு நாணம் அணிகலம். —உருவகம்.

இவ்வாறு உவமையை உருவகமாகவும், உருவகத்தை உவமையாகவும் மாற்றியமைக்கலாம்.

'வையந் தகழியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டுவன் சொன்மாலை
இடராழி நீங்கவே யென்று.'

என்னும் பாட்டில்,

வையந் தகழியாக வார்கடலே நெய்யாக வெய்ய கதிரோன் விளக்காக	இவை உருவகங்கள்.

இவற்றை உவமைகளாக மாற்ற, போன்ற என்னும் உவமை உருபைச் சேர்த்து விரித்து நிரல்பட நிறுத்த வேண்டும். அதாவது தகழி போன்ற வையகம், நெய் போன்ற வார்கடல், விளக்குப் போன்ற வெய்ய கதிரோன் என மாற்றினால் உருவகம் உவமையாதல் காண்க.

பின்வருவனவற்றுள் உவமையை உருவகமாகவும், உருவகத்தை உவமையாகவும் மாற்றுக.

உவமை—

'பால்போலு மின்சொல் பவளம்போல் செந்துவர்வாய்
சேல்போல் பிறழுந் திருநெடுங்கண்—மேலாம்
புயல்போற் கொடைக்கைப் புனலுடன் கொல்லி
அயல்போலும் வாழ்வ தவர்.'

உருவகம்—

' ஏரி யிரண்டும் சிறகா வெயில்வயிறுக்
காருடைய பீலி கடிகாவா—நீர்வண்ணன்
அத்தியூர் வாயா வணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு.'

12. வல்லெழுத்து மிகும் இடங்களும் மிகா இடங்களும்

1. வல்லினம் மிகும் இடங்கள் :

அ+குருவி=அக்குருவி ; இ+பையன்=இப்பையன் ; உ+கிளி=உக்கிளி ; எ+பறவை=எப்பறவை.

என, அ, இ, உ என்னும் சுட்டெழுத்துக்களின் பின்னும், எகர வினவெழுத்தின் பின்னும் வல்லினம் மிகும்.

அந்த + கிளி = அந்தக்கிளி ; இந்த + பசு = இந்தப்பசு; எந்த + பனை = எந்தப்பனை.

என, அந்த, இந்த, எந்த எனும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.

அப்படி + பேசு = அப்படிப்பேசு.
இப்படி + கேள் = இப்படிக்கேள்.
எப்படி + சொல் = எப்படிச்சொல்?

என, அப்படி, இப்படி, எப்படி எனும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.

அங்கு + செல் = அங்குச்செல்.
இங்கு + போ = இங்குப்போ.
எங்கு + கற்றாய் = எங்குக்கற்றாய் ?

என, அங்கு, இங்கு, எங்கு எனும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.

அவ்வகை + கொள்கை = அவ்வகைக்கொள்கை.
இவ்வகை + பேச்சு = இவ்வகைப்பேச்சு.
எவ்வகை + செயல் = எவ்வகைச்செயல் ?

என, அவ்வகை, இவ்வகை, எவ்வகை எனும் சொற்களின் பின் வல்லெழுத்துக்கள் மிகும்.

இனி + பேசலாம் = இனிப்பேசலாம்.
தனி + சொல் = தனிச்சொல்
மற்று + காணலாம் = மற்றுக்காணலாம்.
மற்ற + தோழர்கள் = மற்றத்தோழர்கள்
மற்றை + செல்வம் = மற்றைச் செல்வம்

என, இனி, தனி, மற்று, மற்ற, மற்றை எனும் சொற்களின் பின் வல்லெழுத்துக்கள் மிகும்.

எனக்காக + பேசு = எனக்காகப் பேசு.
ஆக + சொல் = ஆகச் சொல்.

ஆக எனும் சொல் வினைகளை அடுத்து வருகையிலும், தனித்து வருகையிலும் அதன் பின் வரும் வல்லினம் மிகும்.

என + சொன்னான் = எனச் சொன்னான்.
செய்யென + செய்தான் = செய்யெனச் செய்தான்.

என எனும் சொல் தனித்து வருகையிலும், வினையை அடுத்து வருகையிலும் அதன் பின் வரும் வல்லினம் மிகும்.

வேற்றுமைப் புணர்ச்சியில் :

குமரனை + கண்டேன் = குமரனைக் கண்டேன்.

என, இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

மோர் + குடம் = மோர்க்குடம்

என, இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் (மோரை உடைய குடம்) வல்லினம் மிகும்.

மலர் + தார் = மலர்த்தார்
ஓலை + பாய் = ஓலைப்பாய்

என, மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் (மலரால் ஆன தார்; ஓலையால் முடையப்பட்ட பாய்) வல்லினம் மிகும்.

குமரனுக்கு + சொன்னேன் = குமரனுக்குச் சொன்னேன்.
என, நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

கூலி + தொழில் = கூலித்தொழில்

என, நான்காம் வேற்றுமைத் தொகையில் அஃறிணைப் பெயர்களின் பின் வல்லினம் மிகும்.

வாய் + சொல் = வாய்ச்சொல்

என, ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் (வாயினின்று வரும் சொல்) வல்லினம் மிகும்.

குதிரை + தலை = குதிரைத்தலை

என, ஆறாம் வேற்றுமைத் தொகையில் அஃறிணைப் பெயர்களின் பின் வல்லினம் மிகும்.

நல்லாரிடை + புக்கு = நல்லாரிடைப்புக்கு

என, ஏழாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

குடி + பிறந்தார் = குடிப் பிறந்தார்

என, ஏழாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும்.

நீர் + பாம்பு = நீர்ப்பாம்பு

என, ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வல்லினம் மிகும்.

அல்வழிப் புணர்ச்சியில் :

புது + குடம் = புதுக்குடம்

எனப் பண்புத் தொகையில் வல்லினம் மிகும்.

பலா + செடி = பலாச் செடி
தை + திங்கள் = தைத் திங்கள்

என, இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லினம் மிகும்.

வேய் + தோள் = வேய்த்தோள்
மலர் + கண் = மலர்க்கண்

என, உவமைத் தொகையில் வல்லினம் மிகும்.

நன்றாய்	+	தூங்கினான்	=	நன்றாய்த் தூங்கினான்.
போய்	+	பேசினான்	=	போய்ப் பேசினான்.
அன்றி	+	போகான்	=	அன்றிப் போகான்.
இன்றி	+	செய்யான்	=	இன்றிச் செய்யான்.
நன்றாக	+	தின்றான்	=	நன்றாகத் தின்றான்.
மெல்ல	+	சிரித்தான்	=	மெல்லச் சிரித்தான்.
தேடி	+	கண்டான்	=	தேடிக் கண்டான்.

என, ஆய், போய், அன்றி, இன்றி, ஆக என்னும் வினை எச்சங்களின் பின்னும், சில அகர ஈற்று வினை எச்சங்களின் பின்னும், இகர ஈற்று இறந்தகால வினை எச்சங்களின் பின்னும் வல்லினம் மிகும்.

பேசா + கிளி = பேசாக்கிளி

என, ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தில் வல்லினம் மிகும்.

அறுத்து	+	கொடு	=	அறுத்துக் கொடு.
கொக்கு	+	பறந்தது	=	கொக்குப் பறந்தது.
முறுக்கு	+	தின்றான்	=	முறுக்குத் தின்றான்.

என, வன்றொடர்க் குற்றியலுகரத்தில் அல்வழி, வேற்றுமை எனும் இரண்டிலும் வல்லினம் மிகும்.

குரங்கு + கால் = குரங்குக் கால்

என, மென்றொடர்க் குற்றியலுகரத்தில் வேற்றுமையில் வல்லினம் மிகும்.

அரவு + படம் = அரவுப் படம்

என, முற்றியலுகரத்தில் வேற்றுமைப் புணர்ச்சியில் சில விடங்களில் வல்லெழுத்து மிகும்.

போய் + பார் = போய்ப்பார்.
தமிழ் + கட்டுரை = தமிழ்க்கட்டுரை.
நீர் + தவளை = நீர்த்தவளை.

என, ய், ழ், ர்—இவற்றின் பின் வரும் வல்லினம் மிகும்.

சால + பெரிது = சாலப் பெரிது.
தவ + சிறந்தது = தவச் சிறந்தது.
மிக + பேசினன் = மிகப் பேசினன்.

என, சால, தவ, மிக எனும் உரிச் சொற்களுக்குப் பின் வரும் வல்லினம் மிகும்.

போல + பேசு = போலப் பேசு.

போல எனும் வினை எச்சத்தின் பின் வரும் வல்லினம் மிகும். ஆனல் போன்ற என்பது பெயரெச்சமாகலின் அதன் பின் வரும் வல்லினம் மிகாது.

முன்னர் + கண்டான் = முன்னர்க் கண்டான்.
பின்னர் + பேசினன் = பின்னர்ப் பேசினன்.

முன்னர், பின்னர் எனும் சொற்களின் பின் வரும் வல்லினம் மிகும்.

கிளி + பிள்ளை = கிளிப்பிள்ளை
வட்ட + கல் = வட்டக்கல்

என இயல்பாகவும், விதிப்படி மகர ஈறு கெட்டும் (வட்டம்—வட்ட என்றானது போல) நின்ற உயிரீற்றின் பின் வரும் வல்லினம் மிகும்.

பண்டை + காலம் = பண்டைக் காலம்
இரட்டை + குழந்தை = இரட்டைக் குழந்தை
நேற்றை + தயிர் = நேற்றைத் தயிர்

என, ஐகாரச் சாரியை பெறும் குற்றியலுகரச் சொற்களுக்குப் பின்வரும் வல்லினம் மிகும்.

அரை + பணம் = அரைப்பணம்
பாதி + பொருள் = பாதிப்பொருள்

என, அரை, பாதி எனும் சொற்களின் பின் பண்புத் தொகையில் வல்லினம் மிகும்.

நிற்க + சொல் = நிற்கச் சொல்.
வர + செய் = வரச் செய்.

செய்ய என்னும் வினையெச்ச வாய்பாட்டுச் சொற்களின் பின் வரும் வல்லினம் மிகும்.

தீ + பற்றியது = தீப்பற்றியது.
பூ + கொய் = பூக்கொய்.
ஈ + சிறகு = ஈச்சிறகு

என, ஓரெழுத் தொருமொழியின் பின் அல்வழி, வேற்றுமை என்னும் இரண்டிடங்களிலும் வல்லினம் மிகும்.

அணு + திரள் = அணுத்திரள்
இரா + பகல் = இராப்பகல்
நிலா + கதிர் = நிலாக்கதிர்

என, குற்றெழுத்தைத் தொடர்ந்துவரும் முற்றியலுகரங்கள் சிலவற்றின் பின்னும், குற்றெழுத்தைத் தொடர்ந்துவரும் ஆகார நெட்டெழுத்தின் பின்னும் வல்லினம் மிகும்.

எல்லா + பறவைகளும் = எல்லாப் பறவைகளும்

எல்லாம் என்பது ஈறு குறைந்து நிற்கையில் அதன் பின் வரும் வல்லினம் மிகும்.

வல்லெழுத்து மிகா இடங்கள் :

பல+பேர்=பலபேர்
சில+கழுதைகள்=சில கழுதைகள்

பல, சில எனும் சொற்களின் பின் வரும் வல்லினம் மிகாது. ஆனால் பல+பல=பலப்பல, சில+சில=சிலச்சில எனச் சிலவிடங்களில் வல்லினம் மிகும். பலபல, சிலசில என இயல்பாதலே பெரும்பான்மை வழக்காகும்.

அது	+பெரிது	=அது பெரிது.
இது	+செய்தான்	=இது செய்தான்.
எது	+சென்றது	=எது சென்றது?
ஏது	+காசு	=ஏது காசு?
யாது	+பணம்	=யாது பணம்?
அவை	+சென்றன	=அவை சென்றன.
இவை	+போயின	=இவை போயின.
எவை	+பார்த்தன	=எவை பார்த்தன ?
யாவை	+கண்டன	=யாவை கண்டன?
அத்தனை	+பறவை	=அத்தனை பறவை.
இத்தனை	+செடி	=இத்தனை செடி.
எத்தனை	+பிள்ளைகள்	=எத்தனை பிள்ளைகள்?
அவ்வளவு	+பொருள்	=அவ்வளவு பொருள்.
இவ்வளவு	+தொகை	=இவ்வளவு தொகை.
எவ்வளவு	+காசு	=எவ்வளவு காசு?

அது, இது, எது, ஏது, யாது, அவை, இவை, எவை, யாவை, அத்தனை, இத்தனை, எத்தனை, அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு—என்பனவற்றின் பின் வல்லினம் **மிகாது.**

படி என்னும் சொல் வினைச் சொல்லோடு சேர்ந்து, வரும்படி, போகும்படி என வருகையில் இதன் பின் வல்லினம் மிகாது.

அவனு + சொன்னான் = அவனு சொன்னான்?
அதுவோ + சென்றது = அதுவோ சென்றது?
அவனே + சொன்னான் = அவனே சொன்னான்.

வினாப் பொருளை உணர்த்தும் ஆ, ஓ எனும் இடைச் சொற்களின் பின்னும், ஏ எனும் இடைச் சொல்லின்பின்னும் வல்லினம் மிகாது.

நீர் + குடித்தான் = நீர்குடித்தான் என, இரண்டாம் வேற்றுமைத் தொகையிலும், அண்ணனொடு + போ = அண்ணனொடு போ ; தம்பியோடு + செல் = தம்பியோடு செல் என ஒடு, ஓடு என்னும் மூன்றாம் வேற்றுமை உருபுகளின் பின்னும், கன்னி + கணவன் = கன்னிகணவன் என நான்காம் வேற்றுமைத் தொகையில் உயர்திணைப் பெயர்களின் பின்னும், வீட்டிலிருந்து + போனான் = வீட்டிலிருந்து போனான் ; மரத்தினின்று + பிரித்தான் = மரத்தினின்று பிரித்தான்—என இருந்து, நின்று என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபுகளின் பின்னும், முருகனது + பை = முருகனது பை ; என்னுடைய + கை = என்னுடைய கை என அது, உடைய என்னும் ஆறாம் வேற்றுமை உருபுகளின் பின்னும் வல்லினம் மிகாது.

அவர் + போனார் = அவர் போனார்.—எழுவாய்த்தொடர்
தம்பீ + சொல் = தம்பீ சொல்.—விளித்தொடர்

செய் + தொழில் = செய்தொழில்—*வினைத்தொகை*
தாய் + தந்தை = தாய்தந்தை—*உம்மைத்தொகை*

என, அல்வழியில், **எழுவாய்த் தொடரிலும், விளித் தொடரிலும், வினைத் தொகையிலும், உம்மைத் தொகையிலும்** *வல்லினம் மிகாது.*

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிர, **மற்றெல்லாப் பெயரெச்சங்களிலும்** *வல்லினம் மிகாது.*

வினைமுற்றுக்களின் பின் *வல்லினம் மிகாது.*

வன்றொடர்க் குற்றியலுகரத்தில் **வினைத் தொகையிலும்,** *மென் தொடர்க் குற்றியலுகரத்தில்* **அல்வழியிலும், இரண்டாம் வேற்றுமைத் தொகையிலும்** *வல்லினம் மிகாது.*

நெடில் தொடர், ஆய்தத் தொடர், உயிர்த் தொடர், இடைத் தொடர் *ஆகிய நான்கு குற்றியலுகரத் தொடர்களிலும் அல்வழி, வேற்றுமை ஆகிய இரண்டிலும் வல்லினம் மிகாது.*

முற்றியலுகரத்தின் பின்னும், ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, ஒன்பது (எட்டு, பத்து என்பவை நீங்கலாக) என்னும் எண்ணுப் பெயர்களின் பின்னும், ஒரு, இரு, நாலு, அறு, எழு என எண்ணுப் பெயர்கள் விகாரமடைந்து வருகையில் அவற்றின் பின்னும், நிலைமொழி, வருமொழி ஆகிய இரண்டும் வடசொற்களாய் அமைந்தால் அவற்றினிடையிலும் வல்லினம் மிகாது.

---

13. இடம் விட்டு எழுதுதலும் சேர்த்து எழுதுதலும்

'நீ வாரா மாமா ராவா நீ'—இஃது இடம் விட்டு எழுதப் பட்டுள்ளது. ஆனால், பொருள் விளங்குகிறதா வெனப் பாருங்கள்.

நீவாராமாமாராவாநீ—இஃது இடமே விடாமல் சேர்த் தெழுதப்பட்டுள்ளது. ஆனால், படிக்கவே முடியவில்லை. அதனால் பொருளும் விளங்கவில்லை.

எனவே, எதை எழுதினாலும் தெளிவாகப் பொருள் விளங்கக் கூடியவாறு சொல்லுக்குச் சொல் இடம் விட்டும் சேர்க்க வேண்டியவைகளைச் சேர்த்தும் எழுதுதல் வேண் டும். அப்படியின்றிச் சொற்களைச் சிதைத்துப் பிரித்து இடம் விட்டெழுதினாலும், இடமே விடாமல் ஒன்றாகச் சேர்த்து எழுதிவிட்டாலும் பொருள் விளங்காமல் போகும்.

நீ வா ராமா மாரா வா நீ—இவ்வாறு மேற்கண்ட அதே சொற்றொடரைச் சரியானபடி பிரித்தெழுதினால், 'நீ வருவாயாக இராமனே, மன்மதனைப்போன்றவனே, நீ வருவாயாக' என்று பொருள் விளங்கக் காணலாம்.

நீவாதமாதவா—இடம் விட்டு எழுதப்படவில்லை. அத னால் பொருள் விளங்கவில்லை.

நீவாத மாதவா—இடம் விட்டு எழுதப்பட்டதால் 'நீங்காத பெரிய தவத்தை உடையவனே' எனப் பொருள் விளங்குவதைக் காண்க.

அந்தரம் கண்டிடத் தேயுது—இது இடம் விட்டு எழுதப்பட்டிருக்கிறது. இதே சொற்றொடரை அந்த

அரம் கண்டிடத் தேயுது என்று பிரித்தால் பொருள் வேறு படுகிறது.

வாரும் இரும் படியும்—வாருங்கள் அமருங்கள் படியுங்கள் எனப்பொருள் தரும் இந்தத் தொடரை, 'வாரும் இரும்படியும்' என்று எழுதினல், 'வாருங்கள் இரும்பை அடித்து நீட்டுங்கள்' என்று பொருள் தருவதைக் காண்க.

பகைத்திலகன்பார்க்க—இவ்வாறு சேர்த்தால் பொருள் விளங்கவில்லை. பகைத் திலகன் பார்க்க என இடம் விட்டு எழுதினல் தரும் பொருளையும், பகைத்து இலகு அன்பு ஆர்க்க—(பகைத்துப்பின் அன்பு செய்தால்) எனக்கிடைக்கும் பொருளையும் கவனிக்க.

அவதாரத் தாதி—என்பது தாதியைப் பழிப்பது போலிருக்கிறது. அவதாரத்து ஆதி எனப் பிரித்தால் மச்சாவதாரம் எனப்பொருள் தருகிறது.

காமரம்பயில்—இதனைக் காமரம் பயில் என இடம் விட்டு எழுதினல் 'வண்டு பழகுகின்ற' எனப் பொருள் தருகிறது. இதனைக் காமர் அம்பு அயில் என இடம் விட்டெழுதினல், ஒளி பொருந்திய அம்பும் வேலும் எனப் பொருள் தருவதை அறியலாம்.

இவற்றிலிருந்து எழுதும்போதே, எந்தக் கருத்தைக் கூறவேண்டுமோ அதற்கேற்றவாறு இடம் விட்டுப்பிரித்தும், சேர்க்க வேண்டியவைகளை ஒழுங்காகச் சேர்த்தும் எழுத வேண்டும். இங்ஙனமின்றி இடமே விடாமல் சேர்த்தும், கருத்தை விளக்குவதற்குத் தக்கவாறு இடம் விடாமல் கைபோன போக்கில் இடம் விட்டுப் பிரித்தும் எழுதினல் பொருள் விளங்காமல் ஐயமும் மயக்கமும் குழப்பமுமே உண்டாகும்; கருதிய கருத்தே மாறுபட்டுப்போய் விடும்

என்பதை நன்குணர்ந்து ஒழுங்காக இடம் விட்டு எழுதக் கற்றுக் கொள்க.

வாக்கியங்களை இவ்வாறு ஒழுங்காக இடம் விட்டுப் பிரித்து எழுதுவது போலவே, தனித்தனிப் பத்திகளாகப் பிரித்து இடம் விட்டு எழுதவேண்டும்.

14. சொற்களை இடம் விட்டெழுதுதலும் சேர்த்தெழுதுதலும்

அருணசலம் — திருவண்ணமலையின் வேறு பெயர். இதனை அருண சலம் என இடம் விட்டெழுதினல், சூரியனே! துன்பம் உண்டாகிறது எனப்பொருளாகிவிடும்.

காவலர்—காவல் காப்பவர், அரசர் எனப்பொருள் தரும் இச்சொல், கா அலர் என இடம் விட்டெழுதப்படின், சோலை மலர் எனப்பொருள் தருகிறது.

மதுகரம் — வண்டு எனப்பொருள்தரும் இச்சொல்லை மது கரம் என இடம் விட்டெழுதினல், 'தேன் பொழிகின்ற' என்று பொருள் தரும்.

பெருங்காயம் – என்னும் உணவுக்கிடும் பொருளைப் பெருங் காயம் எனப்பிரித்தால், பெரும் உடல் எனப் பொருள் தரும்.

அதுவே சரி என்பதை, அது வேசரி எனப் பிரித்தால், அது கழுதை எனப்பொருள் தரும்.

மாசம் பத்துக் கொடு என்பதை மா சம்பத்துக் கொடு என்று பிரித்தால், பெரிய செல்வத்தைக் கொடு எனப் பொருள் தருவதைக் காண்க.

பரிவால் — அன்பால் பரி (குதிரை)வால்
காவிரி — ஆறு கா (சோலை) விரி
மாதருக்குள் — பெண்களுக்குள் மா தருக்குள் (மரங்களுக்குள்)
மாமன் — முறைப்பெயர் மா மன் (பெரியஅரசன்).
தலைவிதி வசம் – என்பது தலைவி திவசம் எனவுமாகும்.
அந்தமான் – தீவின்பெயர் – அந்த மான் என ஆகும்.

இவ்வாறு தாம் கருதிய பொருளைத் தெளிவாகத் தெரிவிக்கும் வகையில் ஒழுங்கானபடி இடம் விட்டும், சேர்த்தும் எழுதவேண்டும். ஒரு சொல்லுக்கிடையில் இடம் விட்டு எழுதுதலும், சொற்றொடர்களை மனம்போல் சேர்த்தும், இடம் விட்டும் எழுதுதலும் கருதிய பொருள் கொடாமல், உண்மைப்பொருள் விளங்காமல் குழப்பமும் தவறும் உண்டாக இடங்கொடுத்து விடும்.

மேலும் வாக்கியங்கள் எழுதுகையில், சொல்லுக்குச் சொல் இடம் விட்டு ஒழுங்காக எழுதவேண்டும். சொல்லுக்குச் சொல் இடம் விடாமல் எல்லாவற்றையும் சேர்த்து எழுதிவிட்டால், படிப்பவர் எழுதியவரின் கருத்தறிய முடியாமல் தங்கள் மனம்போல் பிரித்துப் பொருள் கொள்ள நேரிட்டு விடும். எனவே, கருத்துத் தெளிவாக விளங்குமாறு சொல்லுக்குச் சொல் நன்கு இடம் விட்டு ஒழுங்காக வாக்கியங்களை அமைக்க வேண்டும் என்பதை நன்கு நினைவில் பதித்துக் கொள்ளுதல் வேண்டும்.

பயிற்சி

1. வாக்கியம் எத்தனை வகைப்படும்?
2. தனி வாக்கியத்தில் அடங்கக் கூடிய வாக்கிய வகைகள் எவை?

3. தனி வாக்கியம் என்றால் என்ன?

4. கலவை வாக்கியம் எவ்வாறமையும்?—உன் பாட நூலிலிருந்து ஓர் எடுத்துக் காட்டுத் தருக.

5. ஓரெழுத் தொரு மொழி வாக்கியம்—இந்நூலில் இல்லாத வேறு எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

6. இருசொல் வாக்கியங்கள் நான்கினை எழுதுக.

7. பயனிலை, செயப்படு பொருள்கள் சில வாக்கியங் களில் இடம் மாறி நிற்பதேன்?

8. 'கம்பர், கவிநயம் சொட்டச் சொட்ட இராமகதை இயற்றினார்'—இஃது என்ன வாக்கியம்?

9. 'புகழேந்தி வெண்பாப் பாடுவதில் புலி'—இந்தக் கருத்தைப் பல உருவ வாக்கியங்களில் அமைக்க.

10. பின் வருவதைப் பத்திகளாகப் பிரி :—

பூமியில் பல வகை விலங்குகள் உள்ளன. அவற்றுட் சில காண்பதற்கு அழகாயுள்ளன; சில அச்ச மூட்டுகின்றன; சில வெறுப்பைத் தரு கின்றன. விலங்குகளுட் பல மனிதனுக்குப் பயன்படுபவையாயுள்ளன. உலகில் வாழ்வன யாவும் இறைவன் படைப்பேயாகும். ஒவ்வொன் றும் ஒவ்வொரு வகையில் உலகப் பொது வாழ் விற்குத் தொண்டு செய்கிறது. கூர்ந்து கவனித் தால் இறைவனது படைப்பின் உயர்வு புலப்படும். ஒட்டகம் ஒரு வியப்புக்குரிய உயிரினம். அதன் முதுகைப் பார். அஃது எத்துணைக் கோணல் வாய்ந்தது? வெறுப்பூட்டும்வடிவத்திற்கு எடுத்துக் காட்டு ஒட்டகமே யாகும். ஆனால் இவ்விலங்கு மனிதருக்குப் பெரிதும் பயன்படுகிறது.

11. மாணவர் கடைப் பிடித்தற்குரிய மொழி நடைகள் யாவை?

12. ஒதுக்க வேண்டிய மொழி நடைகள் யாவை?

13. எம் மொழி நடையை நீ விரும்புகின்றாய்? ஏன்?

14. இந்நூலில் குறிப்பிடப் படாத வழூஉச் சொற்கள் சிலவற்றையும் அவற்றின் திருத்தத்தையும் எழுதுக.

15. இந்நூலில் குறிப்பிடப்படாத இழி வழக்குகள் ஐந்தினை எடுத்துக் காட்டுக.

16. மலரும் மணமும் போல, சூரியனைக் கண்ட பனி போல, குருவியின் தலைமீது பனங்காய் வைப்பது போல, மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்கியது போல—என்னும் உவமைத் தொடர்களை அமைத்துச் சில வாக்கியங்கள் எழுதுக.

17. ‘விரல் உரலானால் உரல் என்னாகும்’?, ‘கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்ப மேன்?’, ‘குங்குமஞ் சுமந்த கழுதை’, ‘பனி பெய்து கடல் நிரம்புமா!’, ‘சட்டி சுட்டது கை விட்டது’, ‘எருமைக்கு நீர் பாய்ச்சுகிறது,’ ‘பூனைக்குக் கொண்டாட்டம் எலிக்குத் திண்டாட்டம்,’ ‘காலைச் சுற்றிய பாம்பு கடியாமற் போகாது,’—இந்தப் பழமொழிகளை அமைத்துச் சில வாக்கியங்கள் எழுதுக.

18. புருவச் சிலை, கண்ணம்பு, கைத்தளிர், கயற்கண், தாமரை முகம், வாணுதல்—இவற்றில் உருவகங்களை உவமைகளாகவும்,உவமைகளை உருவகங்களாகவும் மாற்றுக.

86828

★

ILAKKANAMUM MOZHIPPAYIRCHIYUM

(General & Special)

SIXTH FORM

By

T. S. UMAPATHY, M. A., L. T.

Price Re. 0-14-0.

ASSOCIATION PUBLISHING HOUSE,
94/95, New Street, Mannady,
MADRAS—1.
1954

Printed at the Venkatesan Press, Madras—1.